தொகுதி 6, இதழ் 22

மே 16–31, 2026

இலவச விநியோகத்திற்காக

# நியூ இந்தியா சமாச்சார்

இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பு

2027

CENSUS OF INDIA

நமது மக்கள்தொகை கணக்கெடுப்பு
நமது நலனுக்காது!

## மக்கள்தொகை கணக்கெடுப்பு

## தேசத்தின் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும்

மக்கள்தொகை கணக்கெடுப்பு என்பது சிறப்பு வாய்ந்த தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பணியாகும். இதன் மூலம் திரட்டப்படும் தரவுகள், வருங்காலங்களில் நமது நாட்டின் கொள்கைகளையும் திட்டங்களையும் வடிவமைப்பதற்கான அடித்தளமாக அமையும். எனவே, சரியான தகவல்களை வழங்குவது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்.

மின் - பதிப்புக்கு

Follow Us @NISPIBIndia



# தேசத்தைக் கட்டமைப்பதில் சிவில் அணுசக்தி திட்டத்தின் விலைமதிப்பற்ற பங்களிப்பு

**பிரபலமான வானொலி நிகழ்ச்சியான 'மனதின் குரல்' 133–வது நிகழ்ச்சியின் வாயிலாக, இந்திய மக்களிடமும், உலகெங்கிலும் உள்ளவர்களிடமும் பிரதமர் திரு நரேந்திர மோடி மீண்டும் தனது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார். ஏப்ரல் 26 அன்று ஒலிபரப்பான இந்த உரையில், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் நாட்டின் சாதனைகளை அவர் வலியுறுத்திக் கூறினார். தேசத்தின் முன்னேற்றத்தில் விஞ்ஞானிகளின் பங்களிப்பையும் அவர் வெகுவாகப் பாராட்டினார். காற்று மற்றும் சூரிய மின்சக்தி துறைகளில் இந்தியாவின் வளர்ந்து வரும் வலிமையைப் பிரதமர் சுட்டிக்காட்டினார். அத்துடன், மக்கள்தொகை கணக்கெடுப்பு இயக்கம் உள்ளிட்ட பல முக்கியமான தலைப்புகள் குறித்தும் அவர் பேசினார். 'மனதின் குரல்' உரையின் தொகுக்கப்பட்ட முக்கியப் பகுதிகள் இங்கே தரப்பட்டுள்ளன:**

**அணுசக்தி திட்டம்:** இந்தியா எப்போதும் அறிவியலை நாட்டின் முன்னேற்றத்துடன் இணைத்தே பார்க்கிறது. இதே தொலைநோக்குப் பார்வையுடன் நமது விஞ்ஞானிகள் சிவில் அணுசக்தி திட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர். நிலையான எரிசக்தி தீர்வுகளை வழங்குவதன் மூலமும், அணுசக்தி தொழில்நுட்ப மேம்பாட்டின் வழியாக தேசப் பாதுகாப்பை வலுப்படுத்துவதன் மூலமும் இவர்களின் முயற்சி தேசத்தைக் கட்டமைப்பதில் பெரும் பங்களிப்பு செய்கிறது.

**உற்பத்தி நிலையை அடைதல்:** நமது அணுசக்தி விஞ்ஞானிகள் மற்றொரு முக்கிய சாதனையின் மூலம் இந்தியாவின் பெருமையை உயர்த்தியுள்ளனர். தமிழ்நாட்டின் கல்பாக்கத்தில் உள்ள அதிவேக ஈனுலை தற்போது 'கிரிட்டிகாலிட்டி' எனும் தொடர் அனுப்பிளவு நிலையை எட்டியுள்ளது. உண்மையில், ஓர் அணுவுலை முதன்முதலில் தானாகவேத் தொடர் அணு வினையை வெற்றிகரமாகத் தக்கவைத்துக் கொள்ளும் நிலையான 'கிரிட்டிகாலிட்டி' என்பது முதல் முறையாக எட்டப்பட்டுள்ளது.

**காற்று மின்சக்தி:** இந்தியாவின் வளர்ச்சியில் காற்றாலை மின்சக்தி ஒரு புதிய வரலாற்றைப் படைத்து வருகிறது. அண்மையில் காற்றாலை மின்சக்தி துறையில் இந்தியா ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது; நாட்டின் காற்றாலை மின்சக்தி உற்பத்தித் திறன் இப்போது 56 ஜிகாவாட்டிற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

**குழுவின் மீது பெருமிதம்:** பிரான்ஸ் நாட்டின் போர்டோக்ஸ் நகரில் நடைபெற்ற 'ஐரோப்பிய பெண்களுக்கான கணித ஒலிம்பியாட்' போட்டியில், நமது சகோதரிகள் மிகச்சிறந்த பங்களிப்பை செய்துள்ளனர். இந்தத் திறமையான குழுவை நினைத்து நான் மட்டற்ற பெருமை கொள்கிறேன். உலக அளவில் நமது குழு ஆறாவது இடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளது.

**புத்தரின் போதனைகள்:** கவுதம புத்தரின் வாழ்க்கைச் செய்திகள் இன்றும் என்றும் பொருத்தமானவை. அமைதி என்பது நமக்குள் இருந்தே தொடங்குகிறது என்பதை அவர் நமக்குக் கற்பித்துள்ளார்; தன்னைத் தான் வெல்வதே மிகப்பெரிய வெற்றி என்ற கருத்தை அவர் நமக்குத் தந்துள்ளார். இன்று உலகம் சந்தித்து வரும் பதற்றங்கள் மற்றும் மோதல்களுக்கு இடையே, புத்தரின் போதனைகள் மேலும் முக்கியமானதாக மாறியுள்ளன.

**பாரம்பரியத்தின் மீது பெருமை:** முதல்முறையாக, படைகள் பாசறை திரும்பும் நிகழ்ச்சியின் இசை 'வேவ்ஸ் ஓடிடி' (WAVES OTT) தளத்திலும் கிடைக்கிறது. எதிர்காலத்தில் இது மற்ற தளங்களிலும் வெளியாகும் – நீங்கள் இதை அவசியம் கேட்க வேண்டும். நமது ஆயுதப்படைகள் மற்றும் அவர்களின் பாரம்பரியத்தை எண்ணி நீங்கள் மிகவும் பெருமைப்படுவீர்கள்.

**மேம்பட்டப் பாதுகாப்பு:** சத்தீஸ்கரில் மீண்டும் 'வெளிமான்கள்' தென்படத் தொடங்கியுள்ளன. அவற்றின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்திருந்தது. ஆனால் தொடர்ச்சியான முயற்சிகளால் அவற்றின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது. இன்று, அவை மீண்டும் திறந்தவெளி மைதானங்களில் உலாவுவதைக் காண முடிகிறது. இதேபோன்ற நம்பிக்கை 'கானமயில்' எனப்படும் 'கோடவன்' பறவைகளின் பாதுகாப்பிலும் தெரிகிறது.

**மூங்கில் துறையில் வடகிழக்கு மாநிலங்களின் வெற்றி:** ஒரு காலத்தில் சுமையாகப் பார்க்கப்பட்ட மூங்கில், 2017–ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத் திருத்தத்தின் மூலம் 'மரம்' என்ற வகைப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டது. அதன்பிறகு, மூங்கில் துறையில் வேலைவாய்ப்பு, வணிகம், புத்தாக்கம் ஆகியவற்றில் புதிய வேகம் கிடைத்துள்ளது. இதில் நமது தாய்மார்களும் சகோதரிகளும் முதன்மைப் பயனாளிகளாக உருவெடுத்துள்ளனர்.

**சிறப்பு இணையதளம்:** தேசிய ஆவணக்காப்பகம் ஒரு பிரத்யேக இணையதளத்தில் தனித்துவமான தரவுத்தளத்தைப் பகிர்ந்துள்ளது. இந்த நிறுவனம் 20 கோடிக்கும் அதிகமான விலைமதிப்பற்ற ஆவணங்களை டிஜிட்டல்மயமாக்கிப் பொதுமக்களின் பார்வைக்குக் கொண்டு வந்துள்ளது. உங்கள் அனைவரையும் www.abhilekh–patal.in என்ற இணையதளத்தைப் பார்வையிடுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027:** தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்பு வெறுமனே அரசுப் பணி அல்ல; அது நம் அனைவரின் பொறுப்பாகும். இதில் உங்கள் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. வாருங்கள், நாம் அனைவரும் இந்தச் செயல்பாட்டில் பங்கேற்போம். 'மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027'–ஐ ஒரு பெரும் வெற்றியாக மாற்றுவோம்.

**உள்ளூர் முதல் உலகம் வரை:** இந்தியத் தயாரிப்புகள் இப்போது நாட்டின் எல்லைகளைத் தாண்டி உலகெங்கிலும் உள்ள சந்தைகளையும் உணவகங்களையும் சென்றடைகின்றன. "உள்ளூர் முதல் உலகம் வரை" என்ற பயணத்தைப் பற்றி நாம் பேசும்போது, இந்தியப் பாலாடைக்கட்டி ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்ந்து நமக்கு வழிகாட்டுகிறது.

'மனதின் குரல்' நிகழ்ச்சியைக் கேட்க இந்த க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்.

# NEW INDIA SAMACHAR

**VOLUME 6, ISSUE 22 | MAY 16-31, 2026**

**EDITOR IN CHIEF**
**DHIRENDRA OJHA**
Principal Director General,
Press Information Bureau,
New Delhi

**CHIEF CONSULTING EDITOR**
**SANTOSH KUMAR**

**SENIOR ASST. CONSULTING EDITOR**
**PAWAN KUMAR**

**ASST. CONSULTING EDITORS**
**AKHILESH KUMAR**
**CHANDAN KUMAR CHOUDHARY**

**LANGUAGE EDITORS**
**SUMIT KUMAR (ENGLISH)**
**RAJNEESH MISHRA (ENGLISH)**
**NADEEM AHMED (URDU)**

**SENIOR DESIGNER**
**PHOOL CHAND TIWARI**

**DESIGNERS**
**ABHAY GUPTA**
**SATYAM SINGH**




**CLICK TO READ NEW INDIA SAMACHAR AVAILABLE IN 13 LANGUAGES**
https://newindiasamachar.pib.gov.in/news.aspx

TO READ THE NEW INDIA SAMACHAR ARCHIVE EDITIONS CLICK
https://newindiasamachar.pib.gov.in.archive.aspx

**Follow @NISPIBIndia on Twitter for regular updates on 'New India Samachar'**

# உள் பக்கங்களில்...




இந்தியாவில், மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது வெறுமனே தலைகளை எண்ணும் பணி மட்டுமல்ல; மாறாக, இது இந்தியாவின் ஒட்டுமொத்தக் கொள்கை உருவாக்கத்திற்கு கட்டமைப்பின் முதுகெலும்பாகச் செயல்படுகிறது. ஒவ்வொரு பத்தாண்டின் தொடக்கத்திலும் வழக்கமாக நடத்தப்படும் இந்தப் பத்தாண்டு கணக்கெடுப்பு, இம்முறை கொவிட்–19 காரணமாகத் தாமதமானது. இது தற்போது ஏப்ரல் 2026–ல் தொடங்கப்பட்டு, நவீனத் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் புரட்சியின் அடையாளமாகத் திகழ்வதோடு, வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான அடித்தளத்தை அமைக்கத் தயாராக உள்ளது.

8–26

**பிரதமர் மோடியின் உத்தரப் பிரதேச வருகை**

**கங்கை விரைவுச்சாலை: புதிய கனவுகள் மற்றும் வாய்ப்புகளுக்கான ஒரு நுழைவாயில்**



கங்கை விரைவுச்சாலை உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டிய பிரதமர் திரு.மோடி, நிறைவடைந்த திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்தார். |27-29





செய்திச் சுருக்கங்கள் 4–5

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் தானியக் களஞ்சியத் திட்டம் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துகிறது. 6–17

நியூசிலாந்திற்கான இந்திய ஏற்றுமதிகளுக்கு வரி விலக்கு இந்தியா – நியூசிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது. 32–35

இந்தியா: உலகப் பொருளாதாரத்தின் ஒரு முக்கியத் தூண் கொரிய அதிபரின் இந்திய வருகை. 36–37

ஆளுமை: குமுதினி லக்கியா மிகச் சிறந்த இந்தியச் செவ்வியல் நடனக் கலைஞர். 38




**உலகளாவிய சுற்றுலா மற்றும் கலாச்சார மையமாக உருவெடுக்கும் வடகிழக்கு மாநிலங்கள்**

சிக்கிம் மாநிலத்திற்கான தனது வருகையின் போது, ரூ.4,000 கோடிக்கும் அதிக மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களுக்குப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த திட்டங்களைத் தொடங்கி வைத்தும் சிறப்பித்தார். |30-31


**Published:** Kanchan Prasad, Director General, on behalf of Central Bureau of Communication
**Communication Address :** Room No–1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi -110003.
**E-Mail : response-nis@pib.gov.in, RNI No. :** DELENG/2020/78811

# ஆசிரியர் மேசையில் இருந்து...

## மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027

### வளர்ச்சியை நோக்கிய இந்தியாவின் பயணம்...

வணக்கம்!

உலகின் மிகப்பெரிய மக்கள்தொகை கணக்கெடுப்பான 'மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027'-ஐ இந்தியா தொடங்கியுள்ளது. இது நாட்டின் மிக விரிவான நிர்வாக மற்றும் புள்ளிவிவரப் பணியின் தொடக்கத்தைக் குறிக்கிறது. இந்திய வரலாற்றிலேயே முதல்முறையாக, மக்கள் தாங்களாகவே விவரங்களைப் பதிவு செய்யும் முறை முழுமையான டிஜிட்டல் தரவு சேகரிப்பு முறை ஆகியவை இந்தக் கணக்கெடுப்பில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு நலத்திட்டமும், ஒவ்வொரு தேர்தல் தொகுதியும், ஒவ்வொரு வளர்ச்சித் திட்டமும் மக்கள் தொகை கணக்கெடுப்பு தரவுகளின் அடிப்படையிலேயே உருவாக்கப்படுகின்றன. இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 150 ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தப்பட்டு வருகிறது. நவீன காலத்தில் முதலாவது முழுமையான கணக்கெடுப்பு 1881-ல் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது; அன்றிலிருந்து பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை இது நடத்தப்பட்டு வருகிறது. இதற்கு முந்தைய கணக்கெடுப்பு 2011-ல் நடைபெற்றது, அடுத்தது 2021-ல் நடைபெற வேண்டியிருந்தது. இருப்பினும், கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக, இந்தக் கணக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டது. இதன் விளைவாக, மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027-ம் தனி முக்கியத்துவம் பெறுகிறது, ஏனெனில் நீண்ட இடைவெளிக்குப் பின் இது ஒரு புதிய மக்கள்தொகை குறித்த புள்ளிவிவரங்களை வழங்கும். மேலும், சுதந்திரத்திற்குப் பின் முதல்முறையாக, இந்த ஒட்டுமொத்தச் செயல்பாட்டில் சாதி வாரியான கணக்கெடுப்பும் இணைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது சமூக நல்லிணக்கம் மற்றும் நீதியை மேம்படுத்துவதற்கான ஒரு தீர்க்கமான நடவடிக்கையாகும்.

எளிமையாகச் சொன்னால், மக்கள்தொகை கணக்கெடுப்பு நாட்டின் ஒவ்வொரு தனிநபரையும் எண்ணுவதும், அவர்களோடு தொடர்புடைய சமூக-பொருளாதாரத் தரவுகளைத் தொகுப்பதும் ஆகும். பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த நடைமுறையானது, நாட்டில் வசிக்கும் மொத்தமக்கள் தொகை, அவர்களின் வயது விவரங்கள், கல்வித் தகுதி, வேலைவாய்ப்பு நிலை அவர்கள் பெற்றுள்ள அல்லது அவர்களுக்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகள் ஆகியவற்றைத் துல்லியமாகத் தெரிந்துகொள்ள உதவுகிறது. மக்கள் தொகை கணக்கெடுப்பின் மூலம் பெறப்படும் தரவுகள், அரசு கொள்கை உருவாக்கத்திற்கு வலுவான அடித்தளமாக அமைகின்றன. சாலைகள், கல்வி, மருத்துவம், குடிநீர் வசதி, வீட்டுவசதி வேலைவாய்ப்பு போன்ற அனைத்துத் துறை சார்ந்த திட்டங்களும் இந்தப் புள்ளிவிவரங்களின் அடிப்படையிலேயே மிகச்சரியாக வடிவமைக்கப்படுகின்றன. சுருக்கமாகச் சொன்னால், அரசின் திட்டங்களைத் தீட்டுவதிலும் அவற்றைச் செயல்படுத்துவதிலும் இந்த எண்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. மக்கள்தொகை கணக்கெடுப்பின் வெற்றி என்பது அரசின் முயற்சியை மட்டுமே சார்ந்தது அல்ல; மக்களின் பங்களிப்பும் சம அளவில் அவசியமானது. துல்லியமான, முழுமையான தகவல்களை வழங்குவது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். இது ஒரு சாதாரண அரசு நடைமுறை அல்ல, தேசத்தைக் கட்டமைப்பதில் உங்களின் நேரடிப் பங்களிப்பாகும். மக்கள் தொகை கணக்கெடுப்பின் நடைமுறை, நோக்கங்கள், முக்கியத்துவம், பயன்பாடு வளர்ச்சியடைந்த நாடாக இந்தியா உருவெடுப்பதில் இதன் பங்களிப்பு ஆகியவற்றை விளக்கும் 'மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027', நமது இந்த இதழின் அட்டைப்படக் கட்டுரையாக இடம்பெற்றுள்ளது.

மேலும், ஆளுமைப் பகுதியில் இந்தியச் செவ்வியல் நடனத்தின் (கதக்) மிகச்சிறந்த கலைஞரான குமுதினி லக்கியா பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன. இந்த இதழில், பிரதமர் நரேந்திர மோடியின் முக்கியத் திட்டமான தானியக் களஞ்சியத் திட்டம் உள்ளிட்ட கடந்த பதினைந்து நாட்களின் முக்கிய நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

கூடுதலாக, இதழின் உள்பக்கத்தில் 'மனதின் குரல்' குறித்த சிறப்புக் கட்டுரையும், பின் அட்டையில் 'தேவபூமி' உத்தராகண்டில் 'சார் தாம் யாத்திரை' தொடங்கியதையொட்டி பிரதமர் நரேந்திர மோடி பகிர்ந்த கடிதம் மற்றும் செய்தியின் தொகுப்புகளும் இடம்பெற்றுள்ளன.

உங்கள் ஆலோசனைகளைத் தொடர்ந்து எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

(தீரேந்திர ஓஜா)

**Read/Download the magazine available in Hindi, English and 11 other languages.**

*https://newindiasamachar.pib.gov.in/*

# மின்னஞ்சல் பெட்டி




## இருவார தகவல் களஞ்சியம்

நான் 'நியூ இந்தியா சமாச்சார்' இதழின் வழக்கமான வாசகர். இதழின் ஆசிரியர் உரை மூலமாக, அந்த இதழின் முழுமையான உள்ளடக்கத்தையும் என்னால் தெரிந்துகொள்ள முடிகிறது. இந்தத் தகவல்களைப் பார்க்கும்போது, வாசகர்களுக்கு இந்த இதழ் மிகவும் பயனுள்ளதாக இருப்பது உறுதியாகிறது. இருவாரங்களுக்கு ஒருமுறை வெளியாகும் இந்த இதழ், ஒரு தகவல் களஞ்சியமாகத் திகழ்கிறது. எனவே, பிரதமர் நரேந்திர மோடியின் 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற இலக்கை அடைவதில் இந்த இதழ் முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதை எண்ணி நான் பெருமைப்படுகிறேன்.

balkrishnakasar5@gmail.com

## பரந்த தகவல்கள் நிறைந்த இதழ்

'நியூ இந்தியா சமாச்சாரின்' சமீபத்திய இதழ், மிக விரிவான தகவல்களைச் சுருக்கமான வடிவில் வழங்கியுள்ளது. நான் நீண்ட காலமாக இந்த இதழை வாசித்து வருகிறேன்; இதில் வழங்கப்படும் தகவல்கள் எப்போதும் மிகச்சிறப்பாகவும் வியக்கத்தக்க வகையிலும் அமைகின்றன. தேசத்தின் கடற்கரைச் செல்வம் மற்றும் அதன் போக்குவரத்துத் திறன் குறித்த சிறப்புக் கட்டுரைகள் மூலம் வாசகர்களின் திருப்தியை உறுதி செய்ததற்காக ஒட்டுமொத்தக் குழுவினரையும் பாராட்ட வேண்டும். தகவல் சேகரிப்பு அதை முன்வைக்கும் விதம் ஆகிய இரண்டிலுமே இந்த இதழ் ஓர் உயரிய தரத்தை நிலைநாட்டுகிறது. இந்தியாவின் கடல்சார் முக்கியத்துவம் மற்றும் கப்பல் துறையில் இந்தியாவின் ஆதிக்கம் குறித்து அறிந்துகொள்ள ஒரு சிறந்த வழிகாட்டியாக இந்த இதழ் திகழ்கிறது. குறிப்பாக, மறைந்த மாபெரும் தலைவர் பாபு ஜெகஜீவன் ராம் பற்றி மிகுந்த மரியாதையுடனும் போற்றுதலுடனும் எழுதப்பட்ட கட்டுரை இந்த இதழின் சிறப்பம்சமாகும்.

மன்மோகன் பஹேத் ததிச்
man.bahed82@gmail.com

## ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும் மிகச்சிறந்த உள்ளடக்கம்

ஏப்ரல் 5–ம் அன்று தேதி வெளியான 'தேசிய கடல்சார் சிறப்பு' இதழ், அதன் உள்ளடக்கம், அது ஏற்படுத்திய தாக்கம் ஆகிய இரண்டிலுமே மிகச்சிறப்பாக இருந்தது. ஒரு பொருளாதார ஆசிரியராக, இந்தச் சிறப்பு இதழின் மூலம் நான் அளப்பரிய பயனைப் பெற்றேன். இந்த இதழை எனது மாணவர்களுக்கும், இந்தியாவைப் பற்றி விரிவாகப் புரிந்துகொள்ள விரும்பும் எவருக்கும் நான் நிச்சயமாகப் பரிந்துரைப்பேன்.

டாக்டர் ஜிஜிகுமாரி டி
jijikumari@gmail.com

## இந்தியா தொடர்பாக பல சுவாரசியமான தலைப்புகளை உள்ளடக்கிய இதழ்

நான் 'நியூ இந்தியா சமாச்சார்' மின் இதழின் வழக்கமான வாசகர். இது இந்தியா தொடர்பாக பல்வேறு சுவாரசியமான தலைப்புகளை உள்ளடக்கிய, மிகவும் ஈர்க்கக்கூடிய ஒரு வெளியீடாகும்.

sangitadatta937@gmail.com

## முன்னேற்றம் மற்றும் நலத்திட்டங்கள் பற்றி அறிந்துகொள்ள ஒரு சிறந்த ஆதாரம்

மத்திய அரசால் வெளியிடப்படும் 'நியூ இந்தியா சமாச்சார்' இதழ், நாட்டின் முன்னேற்றம் மற்றும் பல்வேறு நலத்திட்டங்கள் பற்றி உடனுக்குடன் தெரிந்துகொள்ள ஒரு சிறந்த ஊடகமாகச் செயல்படுகிறது. நான் இந்த இதழின் வழக்கமான வாசகர்.

ராஜ் கிஷோர் நாயக்
rajkishorenayak405@gmail.com

Communication Address : Room No–1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi -110003

E-Mail: response-nis@pib.gov.in

செய்திச் சுருக்கம்



## பெண்கள் வேலைவாய்ப்பு விகிதம் சுமார் இரண்டு மடங்கு உயர்வு

பிரதமர் நரேந்திர மோடி தலைமையின் கீழ், நாடு முழுவதும் உள்ள பெண்களுக்குப் புதிய மற்றும் பொருத்தமான வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. இது பெண்களின் வேலைவாய்ப்புக் குறியீடுகளில் முன்னெப்போதும் இல்லாத முன்னேற்றங்களுக்கு வழிவகுத்துள்ளது. கடந்த ஏழு ஆண்டுகளில் பெண்களின் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் கணிசமாக உயர்ந்துள்ளது. இது 2017-18-ல் 23.3 சதவீதமாக இருந்தது, 2025-ல் 40 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதே காலக்கட்டத்தில் பெண்களின் 'தொழிலாளர்-மக்கள்தொகை விகிதமும்' 22 சதவீதத்திலிருந்து சுமார் 39 சதவீதமாக உயர்ந்துள்ளது. மேலும், பெண்களின் வேலையின்மை விகிதம் 5.6 சதவீதத்திலிருந்து 3.1 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது வேலை தேடும் பெண்களுக்கு இப்போது அதிக அளவு வெற்றிகரமாக வேலை கிடைப்பதைக் காட்டுகிறது. இதுகுறித்து மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறுகையில், இந்தியாவின் 'சமூக பாதுகாப்பு வளையம்' கடந்த பத்தாண்டுகளில் ஏறத்தாழ மூன்று மடங்கு விரிவடைந்துள்ளது என்றார். இது 2015-ல் 19 சதவீதமாக இருந்தது, 2025-ல் 64.3 சதவீதத்திற்கும் மேலாக உயர்ந்து. தொழிலாளர் சட்ட சீர்திருத்தங்கள், டிஜிட்டல் உள்ளடக்கம் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நலத்திட்டங்கள் போன்ற துறைகளில் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான, கொள்கை ரீதியான நடவடிக்கைகளே இந்தச் சாதனைக்குக் காரணம் என்று அவர் குறிப்பிட்டார்.



## கடல் உணவு ஏற்றுமதி முன்னெப்போதும் இல்லாத உச்சம்... ரூ.72,000 கோடியைக் கடந்தது

"2047-க்குள் வளர்ச்சியடைந்த இந்தியா" என்ற கனவை நனவாக்குவதில் மீன்வளத்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. இதன் காரணமாகவே, மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பை வலுப்படுத்தவும், மதிப்புத் தொடர்களை நவீனப்படுத்தவும் கடல் உணவு ஏற்றுமதியை விரிவுபடுத்தவும் மத்திய அரசு தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இந்த முயற்சிகளின் விளைவாக, இந்தியாவின் கடல் உணவு ஏற்றுமதி முன்னெப்போதும் இல்லாத வகையில் 72,000 கோடி ரூபாய் என்ற உச்சத்தை எட்டியுள்ளது. அளவின் அடிப்படையில், ஏற்றுமதி 19.32 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. இந்தியாவின் இந்த சாதனை அளவிலான கடல் உணவு ஏற்றுமதி புள்ளிவிவரத்தில், உறைவிக்கப்பட்ட இறால் மட்டுமே 47,973 கோடி ரூபாய் பங்களிப்பை வழங்கியுள்ளது.



## பிரதமர் தேசிய சிறார் விருது 2026-க்கான விண்ணப்பங்கள் வரவேற்பு


2026-க்கான பிரதமரின் தேசிய சிறார் விருதுக்குத் தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். இதற்கான விண்ணப்பங்களை வழங்க 2026 ஜூலை 31ம் தேதி கடைசி நாளாகும். நாடு முழுவதும் உள்ள குழந்தைகளின் அசாதாரண சாதனைகளைப் பாராட்டுவதற்காக ஆண்டுதோறும் வழங்கப்படும் மிகவும் மதிப்புமிக்க தேசிய அளவிலான விருது இதுவாகும். வீரம், விளையாட்டு, சமூக சேவை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், கலை, கலாச்சாரம் ஆகிய துறைகளில் தேசிய அளவில் சாதனை படைத்த குழந்தைகளுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. இந்தியாவில் வசிக்கும் 5 முதல் 18 வயதிற்குட்பட்ட எந்தவொரு இந்தியக் குடிமகனும் இந்த விருதுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவார். இதற்கான விண்ணப்பங்கள் தேசிய விருதுகள் இணையதளமான awards.gov.in வழியாக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். இந்த விருதுக்கு ஒரு குழந்தை தனக்குத் தானே விண்ணப்பிக்கலாம் அல்லது மற்றவர்கள் பரிந்துரைக்கும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.



## ஆன்லைன் விளையாட்டுத் தளங்கள் பயனர் தரவுகளை இந்தியாவில் சேமிக்க வேண்டும்.

ஆன்லைன் பண விளையாட்டுகளின் வளர்ந்து வரும் அச்சுறுத்தலில் இருந்து குடிமக்களைப் பாதுகாக்கவும், இ–ஸ்போர்ட்ஸ் மற்றும் ஆன்லைன் சமூக விளையாட்டுகளுக்குத் தேவையான ஒரு கட்டமைப்பை உருவாக்கவும் 2025 ஆகஸ்ட் மாதத்தில் ஆன்லைன் கேமிங் மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம் 2025ஐ நாடாளுமன்றம் நிறைவேற்றியது. இந்த முயற்சியின் அடுத்த கட்டமாக, மத்திய அரசு இப்போது கேமிங் மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை விதிகள் 2026–ஐ அறிவித்துள்ளது. இந்த விதிகள் 2026 மே 1 முதல் அமலுக்கு வந்துள்ளன.

- குறிப்பிட்ட ஒரு ஆன்லைன் விளையாட்டு என்பது தடைசெய்யப்பட்ட ஆன்லைன் பண விளையாட்டா அல்லது ஆன்லைன் சமூக விளையாட்டா அல்லது இ–ஸ்போர்ட்ஸ் விளையாட்டா என்பதைத் திட்டவட்டமாகத் தீர்மானிக்கத் தெளிவான, வெளிப்படையான மற்றும் காலக்கெடுவுடன் கூடிய ஒரு நடைமுறை உருவாக்கப்படும்.
- ஆன்லைன் சமூக விளையாட்டுகள் மற்றும் இ–ஸ்போர்ட்ஸ் விளையாட்டுகளுக்கான டிஜிட்டல் ஒழுங்குமுறை அமைப்பாகச் செயல்பட 'ஆன்லைன் கேமிங் ஆணையம்' ஒன்று அமைக்கப்படும்.
- பொதுவாக ஆன்லைன் விளையாட்டு இந்த ஆணையத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய அவசியமில்லை. இருப்பினும், ஒரு குறிப்பிட்ட விளையாட்டையோ அல்லது குறிப்பிட்ட வகை விளையாட்டுகளையோ பதிவு செய்வது கட்டாயம் என்று மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டால், அத்தகைய பதிவு செய்வது கட்டாயமாக்கப்படும்.
- இ–ஸ்போர்ட்ஸ் விளையாட்டுகள் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும். ஒரு விளையாட்டு தேசிய விளையாட்டு நிர்வாகச் சட்டம் 2025–ன் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்தால் மட்டுமே அந்த விளையாட்டை ஆன்லைன் கேமிங் ஆணையம் பதிவு செய்யும்.
- விதிமுறை 17–ன் படி, பயனர்களின் தரவுகள் இந்தியாவிற்குள்ளேயே சேமிக்கப்பட வேண்டும். அவை குறிப்பிட்ட காலத்திற்குப் பாதுகாப்பாக வைத்திருக்கப்பட வேண்டும்.
- ஆன்லைன் பண விளையாட்டுகள் என வகைப்படுத்தப்பட்ட அனைத்து விளையாட்டுகளின் பெயர்கள் மற்றும் விவரங்கள் அடங்கிய பட்டியலை அந்த ஆணையம் தனது இணையதளம் அல்லது செல்பேசி செயலியில் பொதுமக்களுக்காக வெளியிடும்.
- ஒவ்வொரு கேமிங் நிறுவனமும் பயனர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான ஒரு முறையை உருவாக்க வேண்டும். நிறுவனத்தின் பதிலில் பயனருக்குத் திருப்தி இல்லையெனில், 30 நாட்களுக்குள் ஆணையத்திடம் அவர்கள் புகார் அளிக்கலாம்.



## உணவு பதப்படுத்தும் துறையில் பிஎல்ஐ திட்டத்தினால் 3.39 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கம்.



மத்திய அரசு உணவு பதப்படுத்தும் தொழிலுக்கான உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகைத் திட்டத்திற்காக 2021–22 நிதி ஆண்டு முதல் நடப்பு 2026–27 நிதி ஆண்டு வரையிலான காலத்திற்கு ரூ.10,900 கோடியை ஒதுக்கியுள்ளது. விற்பனை அதிகரிப்பு மற்றும் வணிக சின்ன மேம்பாட்டிற்கு ஊக்கமளிப்பதன் மூலம், உலக அளவில் முன்னணியில் இருக்கும் இந்திய உணவு உற்பத்தி நிறுவனங்களை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டத்தின் கீழ், 2026 பிப்ரவரி நிலவரப்படி 274 திட்ட இடங்கள் தொடர்பான 165 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மொத்தம் ரூ.2,162.55 கோடி ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் வாயிலாக 3.39 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், உணவு பதப்படுத்துதல் மற்றும் பாதுகாக்கும் திறன் ஆண்டுக்கு 3.4 மில்லியன் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது.

## ஷேக்கா ஜீல் பறவைகள் சரணாலயம் நாட்டின் 99–வது ராம்சர் தளம்.

ஏப்ரல் 22 அன்று, உத்தரப் பிரதேச மாநிலம் அலிகாரில் உள்ள ஷேக்கா ஜீல் பறவைகள் சரணாலயத்தை இந்தியாவின் 99–வது ராம்சர் தளமாக மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் அறிவித்தார். இந்த அறிவிப்பின் மூலம், உத்தரப் பிரதேசத்தில் உள்ள ராம்சர் தளங்களின் எண்ணிக்கை 12–ஆக உயர்ந்துள்ளது. பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையின் கீழ், இந்தியாவின் சுற்றுச்சூழலைப் புதுப்பிக்கும் இயக்கம், குறிப்பாக சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பதிலும் பறவைகள் உள்ளிட்ட விலங்குகளின் இயற்கை வாழ்விடங்களைப் பராமரிப்பதிலும் கொண்டுள்ள உறுதிப்பாட்டிற்கு உலக சமூகத்திடம் இருந்து மீண்டும் ஒருமுறை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக மத்திய அமைச்சர் தெரிவித்தார். மத்திய ஆசிய பறவைகளின் வலசைப் பாதையில் ஷேக்கா ஜீல் ஏரி ஒரு முக்கியமான தங்குமிடமாகச் செயல்படுகிறது. இது குளிர்காலத்தில் வாத்துகள், செங்கால் நாரைகள் மற்றும் பல்வேறு வகையான நீர்வாழ் பறவைகள் போன்று இடம்பெயரும் பறவைகளுக்கு மிக முக்கியமான வாழ்விடமாகத் திகழ்கிறது.





# உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்

**இந்தியாவிலும், சர்வதேச அளவிலும் அதிகரித்து வரும் உணவு தானிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அறிமுகம் செய்யப்பட்ட உலகின் மிகப்பெரிய கூட்டுறவு தானிய சேமிப்புத் திட்டம், விவசாயிகளுக்குப் பயனளித்திருப்பதுடன், நாட்டின் பொருளாதாரத்தையும் வலுப்படுத்தி உள்ளது. 2023 மே 31 அன்று மத்திய அமைச்சரவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, 2024 பிப்ரவரி 24 அன்று பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்ட பின், விவசாயிகளின் வருவாயில் கணிசமான அதிகரிப்பு சாத்தியமாகியுள்ளது.**

கூட்டுறவுத் துறையில் அமல்படுத்தப்படும் உலகின் மிகப்பெரிய தானிய சேமிப்புத் திட்டத்தின் மூலம் தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் (பிஏசிஎஸ்) அடிப்படை வேளாண் விளை பொருட்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டம் நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதுடன், உணவு தானியங்கள் வீணாவதைத் தடுக்கவும் வழிவகை செய்கிறது. இதனுடன் தங்கள் விளைபொருட்களுக்கு சிறந்த விலையையும் விவசாயிகள் பெறுகிறார்கள். சோதனை முயற்சியாக அறிமுகம் செய்யப்பட்ட இந்தத் திட்டம், அமைச்சகங்களுக்கு இடையிலான ஒரு குழு, ஒரு தேசிய ஒருங்கிணைப்புக் குழு, மாவட்ட அளவிலான ஒரு கூட்டுறவு மேம்பாட்டுக் குழு ஆகியவற்றால் ஒருங்கிணைக்கப்படுகிறது. நாட்டில் நிலவும் உணவு தானிய சேமிப்புக் கிடங்கு பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கும், வேளாண் உள்கட்டமைப்பை நிர்மாணிப்பதற்கும், 'கூட்டுறவுத் துறையில் உலகின் மிகப்பெரிய தானிய சேமிப்புத் திட்டத்திற்கு' மத்திய அரசு ஒப்புதல் அளித்திருந்தது. இந்தத் திட்டத்தின் கீழ், கிடங்குகள், வாடகை மையங்கள், பதப்படுத்தல் பிரிவுகள், நியாய விலைக் கடைகள் உள்ளிட்ட பல்வேறு வேளாண் உள்கட்டமைப்பு வசதிகள், தொடக்க வேளாண் கடன் சங்கங்கள், கூட்டுறவு சங்கங்கள் நிலையில் உருவாக்கப்பட்டு வருகின்றன. இதற்கான நிதி, வேளாண் உள்கட்டமைப்பு நிதி (ஏஐஎஃப்), வேளாண் சந்தைப்படுத்தல் உள்கட்டமைப்புத் திட்டம் (ஏஎம்ஐ), வேளாண் எந்திரமயமாக்கல் துணைத் திட்டம் (எஸ்எம்ஏஎம்), பிரதமரின் நுண் உணவு பதப்படுத்தும் நுண் நிறுவனங்கள் முறைப்படுத்தல் திட்டம் (பிஎம்எஃப்எம்இ) ஆகியவற்றிலிருந்து பெறப்படும்.

வேளாண் உள்கட்டமைப்பு நிதித்திட்டத்தின் கீழ், கிடங்குகள் கட்டுவதற்காகப் பெறப்படும் கடனுக்கு, பிஏசிஎஸ்–க்கு வட்டி மானியப் பலன் வழங்கப்படுகிறது. மேலும் ஏஎம்ஐ திட்டத்தின் கீழ், உணவு தானிய சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதற்கு 33% மானியம் வழங்கப்படுகிறது.

ஏஐஎஃப் திட்டத்தின் கீழ் பிஏசிஎஸ்–க்கான கடன் உத்தரவாதக் காலத்தை, 2+5 ஆண்டுகளில் இருந்து, 2+8 ஆண்டுகளாக வேளாண்மை, விவசாயிகள் நலத்துறை நீட்டித்துள்ளது.

உணவு தானிய சேமிப்பு உள்கட்டமைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் அமித் ஷா, வரும் நாட்களில் நாட்டின் உணவு தானிய சேமிப்புத் திறன் சுமார் மூன்று மடங்கு அதிகரிக்கப்பட வேண்டும் என்றும், அவற்றில் இரு மடங்கு

**பங்கேற்கும் கூட்டுறவு சங்கங்கள் மீதான நிதிச் சுமையைக் கணிசமாகக் குறைப்பதற்காக, இந்தத் திட்டம், நபார்டின் சிறப்பு மறுநிதியளிப்புத் திட்டத்தையும் பயன்படுத்துகிறது. ஏஐஎஃப் திட்டத்தின் கீழ் கிடைக்கும் 3% வட்டி மானியத்துடன் இது இணைக்கப்படும்போது, உலகின் மிகப்பெரிய தானிய சேமிப்புத் திட்டத்தின் கீழ் பிஏசிஎஸ்–க்கான பயனுள்ள கடன் வட்டி விகிதம் 1% ஆகக் குறைக்கப்படுகிறது.**

## தானிய சேமிப்புக்கான ஏஎம்ஐ திட்டத்தில் திருத்தம்

முன்பணத்தேவை, 20%–லிருந்து 10%–ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

**சமவெளிப் பகுதிகள்**

**7,000 ரூபாய்**

ஒரு மெட்ரிக் டன்னுக்கு 3000–3500 ரூபாயாக இருந்த கட்டுமானச் செலவு, திருத்தப்பட்டுள்ளது

**வடகிழக்குப் பகுதிகள்**

**8,000 ரூபாய்**

ஒரு மெட்ரிக் டன்னுக்கு 4,000 ரூபாயாக இருந்த கட்டுமானச் செலவு, உயர்த்தப்பட்டுள்ளது

- பிஏசிஎஸ்சுக்கான மானியம் 25% என்பதிலிருந்து 33.33% ஆக உயர்ந்துள்ளது. (குறிப்பாக, சமவெளிப் பகுதிகளில் ஒரு மெட்ரிக் டன்னுக்கு 875 ரூபாயிலிருந்து 2,333 ரூபாயாகவும், வடகிழக்கு மாநிலங்களில் ஒரு மெட்ரிக் டன்னுக்கு 1,333.33 ரூபாயிலிருந்து 2,666 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.)
- உட்புற சாலைகள், கனரக வாகனங்களை எடையிடும் தளங்கள், சுற்றுச்சூழல் போன்ற உள்கட்டமைப்பு அம்சங்களுக்காக பிஏசிஎஸ்சுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த மானியத்தில், மூன்றில் ஒரு பங்கிற்கு சமமான கூடுதல் மானியம் வழங்க திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



## தானிய சேமிப்புத் திட்டத்தின் முன்னேற்றம்

**560** கூட்டுறவு சங்கங்கள் தானிய சேமிப்புத் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ளன

**120** கிடங்குகள் கூட்டுறவு சங்கங்களுக்குள் அமைக்கப்பட்டுள்ளன

**426** விரிவான திட்ட அறிக்கைகள் கிடங்குகளின் கட்டமைப்பிற்காக

**72,702** மெட்ரிக் டன் சேமிப்புத் திறன் இதன் விளைவாக உருவாக்கப்பட்டுள்ளது

(குறிப்பு: 2026 ஜனவரி 20 நிலவரத்தின் அடிப்படையில் இலக்கங்கள் அமைந்துள்ளன)

### தானிய சேமிப்பு மையங்களை நிர்மாணிப்பதற்கான நடைமுறை

- மாநிலக் கூட்டுறவுத் துறை, பிஏசிஎஸ்/ கூட்டுறவு சங்கங்களைக் கண்டறியும்
- குறிப்பிட்ட இடத்தின் அடிப்படையில் ஒரு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்படும்
- முன்மொழியப்பட்ட வடிவமைப்பு, தரத்தின் அடிப்படையில் கட்டுமானப் பணிகள் தொடங்கும்
- சுமார் 6 மாதங்களுக்குள் கிடங்கின் கட்டுமானப் பணி நிறைவடையும்.

### திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டு வரும் வசதிகள்...

- பிஏசிஎஸ்/ கூட்டுறவு சங்கங்களுக்குள் கிராம அளவில் செயல்படும் கிடங்குகள்
- இயந்திர வாடகை மையங்கள்
- பதப்படுத்தல் பிரிவுகள்
- நியாய விலைக் கடைகள்



**9** ஆண்டு காலத்திற்கான வாடகை உத்தரவாதத்தை இந்திய உணவுக் கழகம் வழங்குகிறது.

குறைவான வட்டி (ஏறத்தாழ 1%) 33% வரையிலான மானியத்துடன், குறைவான வட்டி விகிதங்களில் கடன் வழங்கப்படுகிறது



விரிவாக்கம், கூட்டுறவுத் துறையால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார். இது ஒவ்வொருவரின் கடமை என்றும், தொடக்க வேளாண் கடன் சங்கங்களிடம் இடம் மட்டுமே விட்டு விடக்கூடாது என்றும் அவர் கூறினார். வட்டார அளவிலான கூட்டுறவு பால் பண்ணைகள், மாநில சந்தைப்படுத்தல் கூட்டமைப்புகள், நிதியுதவி வழங்கும் மாவட்டக் கூட்டுறவு வங்கிகள், மாவட்ட விற்பனை–கொள்முதல் சங்கங்கள் ஆகியவை பெரிய கிடங்குகளைக் கட்ட வேண்டும். 70% உணவு தானியங்கள் வட இந்தியா, பஞ்சாப், ஹரியானாவில் இருந்து கொள்முதல் செய்யப்படுவதாகவும், கொள்முதல், சேமிப்பு, விநியோகம் ஆகியவை பிராந்திய அளவில் ஒருங்கிணைக்கப்பட்டால், போக்குவரத்து செலவு குறைந்தபட்சம் 30–40% வரை குறையலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

உணவு தானிய சேமிப்பு உள்கட்டமைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் அமித் ஷா, வரும் நாட்களில் நாட்டின் உணவு தானிய சேமிப்புத் திறன் சுமார் மூன்று மடங்கு அதிகரிக்கப்பட வேண்டும் என்றும், அவற்றில் இரு மடங்கு விரிவாக்கம், கூட்டுறவுத் துறையால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார். இது ஒவ்வொருவரின் கடமை என்றும், பிஏசிஎஸ் இடம் மட்டுமே விட்டு விடக்கூடாது என்றும் அவர் கூறினார். வட்டார அளவிலான கூட்டுறவு பால் பண்ணைகள், மாநில சந்தைப்படுத்தல் கூட்டமைப்புகள், நிதியுதவி வழங்கும் மாவட்டக் கூட்டுறவு வங்கிகள், மாவட்ட விற்பனை–கொள்முதல் சங்கங்கள் ஆகியவை பெரிய கிடங்குகளைக் கட்ட வேண்டும். 70% உணவு தானியங்கள் வட இந்தியா, பஞ்சாப், ஹரியானாவில் இருந்து கொள்முதல் செய்யப்படுவதாகவும், கொள்முதல், சேமிப்பு, விநியோகம் ஆகியவை பிராந்திய அளவில் ஒருங்கிணைக்கப்பட்டால், போக்குவரத்து செலவு குறைந்தபட்சம் 30–40% வரை குறையலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தியாவின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு

# முன்னேற்றம், வளர்ச்சிக்கு

## ஒரு வலிமையான அடித்தளம்



இந்தியாவில் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு என்பது மக்கள்தொகையின் எண்ணிக்கையை அளவிடுவது மட்டுமல்ல; மாறாக, நாட்டின் ஒட்டுமொத்த கொள்கை உருவாக்கக் கட்டமைப்பின் முதுகெலும்பாக இது விளங்குகிறது. வழக்கமாக பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தசாப்தத்தின் தொடக்கத்தில் நடத்தப்படும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, இந்த முறை கொவிட் 19 பெருந்தொற்றால் தாமதமாகி 2026 ஏப்ரலில் தொடங்கியுள்ளது. 'வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கு' அடித்தளத்தை அமைக்க இது தயாராக உள்ளது. நவீன தொழில்நுட்பத்தையும், டிஜிட்டல் புரட்சியையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் இந்த நடைமுறை, சுய கணக்கெடுப்பு, சாதிவாரி கணக்கெடுப்பின் மூலம் தேசத்தின் எதிர்காலத்திற்கான பாதையை வடிவமைக்கும். 150 ஆண்டுகள் பழமையான மாண்பைப் பாதுகாக்கும் வகையில், இந்த அமிர்த காலத்தில் நடைபெறும் 2027 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, ஒவ்வொரு குடிமகனின் விவரம், பங்கேற்பு, முன்னேற்றத்தைப் பதிவு செய்து நாட்டின் எதிர்கால வடிவங்களை வரையறுக்கிறது. இது வெறும் எண்ணிக்கை அல்ல; ஒரு 'வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான' மேம்பாட்டிற்கு ஒரு புதிய, மாற்றகரமான படைப்பை உருவாக்கவிருக்கிறது.

இந்தியாவின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 2027, புள்ளியியல் சார்ந்த நடைமுறையைக் கடந்த ஒரு செயல்பாடு; நாட்டின் எதிர்காலத்தின் போக்கைத் தீர்மானிக்கும் ஒரு விரிவான நாடு தழுவிய முன்முயற்சியாகும். நாட்டின் பிம்பத்தைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாக இது விளங்குகிறது. இந்த ஊடகத்தின் வாயிலாக இந்தியா தன்னை பார்த்துக்கொள்கிறது. நாட்டின் உணர்வைப் புரிந்து கொள்வதையும், அதன் எதிர்காலத்தை வடிவமைப்பதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு பிரமாண்டமான திட்டமாக இது அமைந்துள்ளது. இந்தியா தன்னை ஒரு புதிய கண்ணோட்டத்தில் உணர்ந்து கொள்ளவும், அதன் மனித வளம், பன்முகத்தன்மை, சவால்கள் மற்றும் எல்லையற்ற ஆற்றலை மதிப்பிடவும் இது ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது. எனவே மக்கள்தொகைக் கணக்கெடுப்பு என்பது வெறும் தரவுத் தொகுப்போ, 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் சடங்கோ அல்ல; அது, தேசத்தின் வலிமைகள், திறன்களின் உண்மையான பிரதிபலிப்பாகும். இது எதிர்காலத்திற்கான அடித்தளத்தை அமைப்பதற்கு ஒரு ஆற்றல் வாய்ந்த கருவியாகும். இந்நிலையில், '2047-ல் வளர்ச்சியடைந்த இந்தியாவை' உருவாக்கும் உன்னதமான இலக்குடன் வளர்ச்சிப் பாதையில் இந்தியா வேகமாக முன்னேறி வரும் வேளையில், மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 2027-ன் முக்கியத்துவம் மேலும் அதிகரிக்கிறது. சுருக்கமாக சொல்வதென்றால், மக்கள்தொகைக் கணக்கெடுப்பு என்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பணியாகும். இதன் மூலம் திரட்டப்படும் தரவுகள், எதிர்காலத்திற்குத் தேவையான தேசியக் கொள்கைகளையும், திட்டங்களையும் வடிவமைப்பதற்கான அடிப்படை ஆதாரமாக விளங்குகின்றன. மேலும், வரும் தசாப்தத்திற்கான திட்டமிடலுக்குப் புதிய பரிமாணங்களையும் வடிவத்தையும் இது அளிக்கிறது.

## கொள்கை வடிவமைப்பிற்கு ஒரு வலிமையான அடித்தளம்

மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஒரு தேசத்திற்கு எவ்வளவு முக்கியம் என்பதை, இந்தியாவின் முதலாவது உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் பட்டேல், 1951-ம் ஆண்டு நடைபெற்ற நாட்டின் முதல் சுதந்திரத்திற்குப் பிந்தைய மக்கள்தொகைக்



# மக்கள்தொகைக் கணக்கெடுப்பு: ஒரு நீண்ட, வளமான பாரம்பரியம்

இந்தியா தனது முதலாவது நேரடி மக்கள்தொகைக் கணக்கெடுப்பை 1881–ல் நடத்தியது. இருப்பினும், நாட்டில் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு பற்றிய மிகப் பழமையான குறிப்புகள், கௌடில்யரின் 'அர்த்தசாஸ்திரம்', அபுல் ஃபஸல் –ன் 'ஐன்–இ–அக்பரி' போன்ற பண்டைய நூல்களில் இடம்பெற்றுள்ளன...

- மக்கள்தொகைக் கணக்கெடுப்பை மேற்கொள்வதில் நீண்ட, வளமான பாரம்பரியத்தை இந்தியா பின்பற்றுகிறது. கௌடில்யரின் 'அர்த்தசாஸ்திரத்தில்' மக்கள்தொகைக் கணக்கெடுப்பு பற்றிய மிகப் பழமையான குறிப்பு இடம்பெற்றுள்ளது (321–296 பிசிஇ).
- பேரரசர் அக்பரின் ஆட்சிக்காலத்தில், அபுல் ஃபஸல்–ன் முக்கியப் படைப்பான 'ஐன்–இ–அக்பரி'யிலும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.
- அமைப்புமுறை சார்ந்த, நவீன, தற்போதைய அறிவியல் ரீதியிலான முதலாவது மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, 1865–1872 இடையே வேறு வேறு காலகட்டத்தில் நடத்தப்பட்டது.

## சுதந்திரத்திற்குப் பிந்தைய மக்கள்தொகைக் கணக்கெடுப்பு (1951–2011)

இந்தியா சுதந்திரம் அடைந்த பின், முதலாவது மக்கள்தொகைக் கணக்கெடுப்பு **1951**–ல் நடத்தப்பட்டது.





அதைத்தொடர்ந்து **2011** வரை ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கும் ஒரு முறை கணக்கெடுப்பு தொடர்ச்சியாக நடைபெற்றது.

கொவிட்–19 பெருந்தொற்றின் காரணமாக, 2021–ல் நடத்தப்பட வேண்டிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை; அது தற்போது தொடங்கப்பட்டுள்ளது.

கணக்கெடுப்பின் போது தெளிவுபடுத்தினார்.

"மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்ற அமைப்புக்கு நெடுங்கால வரலாறு உண்டு; அதன் பணி மக்களைக் கணக்கிடுவது மட்டுமல்ல, நமது பல நிர்வாகக் கொள்கைகளை வடிவமைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்ற தகவல்களைச் சேகரிப்பதும் ஆகும். இந்தச் செயல்பாட்டின் மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள், மிகுந்த சமூக முக்கியத்துவம் வாய்ந்த மதிப்பு மிக்க அறிவியல் சார்ந்த தரவுகளுக்கு வித்திடுகின்றன. பல சமயங்களில் இது பொருளாதாரக் கொள்கைகள் சார்ந்த துறைகளில் மட்டுமின்றி, இதர விஷயங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் பயனுள்ள வழிகாட்டுதலை வழங்குகிறது. மக்கள்தொகைக் கோட்பாடு என்பது, பொருளியலின் ஒரு ஈர்க்கக்கூடிய அம்சமாகும். மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, இந்தக் கோட்பாடுகளை சோதிப்பதற்கும், அவற்றுடன் ஓர் உண்மையான இணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் உதவுகின்றன", என்று சர்தார் வல்லபாய் பட்டேல் அப்போது கூறியிருந்தார்.

மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் வாயிலாகத் திரட்டப்படும் தரவுகள், அரசு கொள்கைகளின் அடித்தளமாக விளங்குகின்றன. கல்வி, திறன் வளர்ச்சி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, ஊரக–நகர்ப்புற மேம்பாடு போன்ற துறைகளில் கொள்கைகளை வடிவமைக்கவும், அமல்படுத்தவும், மக்கள்தொகை கணக்கெடுப்புத் தரவு, துல்லியமாக மட்டுமின்றி, செயல்திறன் வாய்ந்ததாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. சமூக இணக்கத்தை வலுப்படுத்தி, நீதியை நிலை நாட்டுவதற்கு மக்கள்தொகைக் கணக்கெடுப்பு முக்கியக் கருவியாக செயல்படுகிறது. வளர்ச்சிக்கான போட்டியில் பின்தங்கியுள்ள சமூகப் பிரிவுகளை இது கண்டறிகிறது. வறுமை ஒழிப்பு, பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், ஊரக மேம்பாடு போன்றவற்றில் கவனம் செலுத்தும் பல்வேறு அரசுத் திட்டங்கள் இலக்கு சார்ந்ததாகவும், மிகத் துல்லியமாகவும் செயல்படுத்தப்படுவதற்குக் காரணம், அவை இந்தத் தரவுகளின் மூலம் உருவாக்கப்பட்டது தான். வளர்ச்சியின் பயன்கள் சமூகத்தின் கடைக்கோடி நபரையும் சென்றடைவதை இந்த நடைமுறை உறுதி செய்கிறது.

இன்றைய நவீன யுகத்தில், புள்ளியியலின் முக்கியத்துவம் உலக அளவில் போற்றப்படுகிறது. தற்போதைய எதார்த்தத்தையும், எந்த ஒரு நாட்டின் எதிர்காலத்தையும் வரையறுப்பதில் தரவுகள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்கின்றன. நம் அன்றாட வாழ்வில் தரவுகளின் முக்கியத்துவத்தை பற்றி நாம் அரிதாகவே சிந்திக்கிறோம்.

இருந்த போதும், அரசின் கொள்கை வடிவமைப்பு முதல் தேசிய

## மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் நோக்கங்கள், முக்கியத்துவம், பயன்பாடு

**நோக்கம்:**

கிராமம், நகரம், வார்டு ஆகிய நிலைகளில் முதன்மைத் தரவுகளின் மிகப்பெரிய ஆதாரமாக மக்கள்தொகைக் கணக்கெடுப்பு விளங்குகிறது. ஆளுகையின் முக்கிய கருவியாக செயல்படும் இந்தக் கணக்கெடுப்பு, எதிர்கால தசாப்தத்திற்கான இந்தியாவின் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடித்தளமாக அமைகிறது.

**முக்கியத்துவம்:**

மக்கள்நிலை பொருளாதாரம், மானுடவியல், சமூகவியல், புள்ளியியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த அறிஞர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் இன்றியமையாத தரவு ஆதாரமாக நீண்ட காலமாக மக்கள்தொகைக் கணக்கெடுப்பு இருந்து வருகிறது. பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் மூலம் இந்திய மக்களின் செழுமையான பன்முகத்தன்மை துல்லியமாக வெளிப்படுவதால், இந்தியாவைப் புரிந்துகொள்வதற்கும் ஆய்வு செய்வதற்கும் இது ஒரு முக்கிய கருவியாக உள்ளது.

**பயன்பாடு:**

வீட்டு நிலைமைகள், வசதிகள், சொத்துக்கள், மக்கள்தொகை, மதம், ஷெட்யூல்டு வகுப்பு, ஷெட்யூல்டு பழங்குடி, மொழி, எழுத்தறிவு, கல்வி, பொருளாதார செயல்பாடு, இடப்பெயர்வு, வளம் உள்ளிட்ட பல்வேறு அளவுகோல்களில் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு விரிவான புள்ளி விவரங்களை வழங்குகிறது. வளர்ச்சித் திட்ட பணிகள் உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகளுக்கு இந்தப் புள்ளி விவரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

## மக்கள்தொகைக் கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களில் நடைபெற உள்ளது

### முதல் கட்டம்:

வீட்டுப் பட்டியல் கணக்கெடுப்பு: சம்பந்தப்பட்ட மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் வசதிக்கு ஏற்ப 2026 ஏப்ரல் முதல் செப்டம்பர் மாதங்களுக்கு இடையே முப்பது நாட்களுக்கு இந்த கணக்கெடுப்பு நடைபெறும். வீட்டுப் பட்டியல் கணக்கெடுப்பிற்கு முன், 'சுய கணக்கெடுப்பிற்கு' 15 நாட்கள் அவகாசமும் வழங்கப்படும்.

- இந்தக் கட்டத்தின் போது வீடுகளின் நிலை, வீட்டில் வசிப்பவர்கள் பெறும் வசதிகள், அவர்களிடம் உள்ள சொத்துக்கள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்படும். முதல் கட்ட கணக்கெடுப்பில் இடம்பெற்றுள்ள 33 கேள்விகள், ஏற்கனவே அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

### இரண்டாவது கட்டம்:

மக்கள்தொகைக் கணக்கெடுப்பு: இந்தக் கணக்கெடுப்பு 2027 பிப்ரவரியில் நடைபெறும். இருப்பினும், லடாக் மற்றும் ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசங்களிலும், உத்தராகண்ட், இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் பனிப்பொழிவால் சூழப்பட்ட, அணுக முடியாத பகுதிகளில், கணக்கெடுப்பு 2026 செப்டம்பரில் நடத்தப்படும்.

- சாதிவாரி கணக்கெடுப்பும் மேற்கொள்ளப்படும்.
- ஒவ்வொரு நபரிடமிருந்து மக்கள்தொகை அமைப்பு, சமூக–பொருளாதார நிலை, கல்வி, இடப்பெயர்வு, வளம் உள்ளிட்ட தகவல்கள் சேகரிக்கப்படும்.



இது, நாட்டின் 16–வது மக்கள்தொகை கணக்கெடுப்பாகும். மேலும் சுதந்திரத்திற்குப் பின் நடத்தப்படும் 8–வது கணக்கெடுப்பு.

வளர்ச்சி முன்முயற்சிகள் வரையும், மக்கள் நல திட்டங்களிலும், இந்தத் தரவு தான் அடிப்படை ஆதாரமாகச் செயல்படுகிறது. இதே தரவுதான் ஆராய்ச்சிக்கும், பொருளாதாரத்தின் விரிவான கண்ணோட்டத்தைக் கட்டமைக்கவும் உதவுகிறது. புகழ்பெற்ற அமெரிக்கப் புள்ளியியலாளர் வில்லியம் எட்வர்ட்ஸ் டெமிங்–ன் கருத்து மூலம் தரவுகளின் பயன்பாட்டையும் முக்கியத்துவத்தையும் மேலும் நன்றாகப் புரிந்து கொள்ளலாம்: "தரவுகள் இல்லாமல், நீங்கள் வெறுமனே ஒரு கருத்தைக் கொண்ட மற்றுமொரு நபர் மட்டுமே." அதாவது, எந்த ஒரு யோசனை, கொள்கை அல்லது திட்டத்தை வலுப்படுத்துவதற்கான அடித்தளமாக தரவு விளங்குகிறது.

### கணக்கிடுதல் என்ற மாபெரும் யாகம்

வேண்டும் பலன்களை அடையும் நோக்கத்துடன் யாகம் மேற்கொள்ளப்படுவதாக புனித நூல்கள் குறிப்பிடுகின்றன. மேலும், முன்னேற்றத்தை ஊக்குவிப்பதற்கும், குறிப்பிட்ட விருப்பங்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குமான ஒரு வழிமுறையாகவும் இது கருதப்படுகிறது. 2027 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, பிரமாண்டமான யாகத்தை விட எந்த வகையிலும் குறைந்தது அல்ல. இரண்டு கட்டங்களாக நடத்தப்படும் 2027 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, உலகின் மிகப்பெரிய கணக்கெடுப்பாகும். 2026 ஏப்ரல் மாதத்தில் இது தொடங்கப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பை 2021–ம் ஆண்டில் நடத்தத் திட்டமிட்டிருந்த போதும், உலகளாவிய கொவிட்–19 பெருந்தொற்றால் அது தள்ளிப்போனது. முதல்முறையாக ஒட்டுமொத்தக் கணக்கெடுப்பும் டிஜிட்டல் முறையில் மேற்கொள்ளப்படுகிறது. முதல்முறையாக, செல்பேசி செயலிகள், இணையவழி சுய கணக்கெடுப்பை பயன்படுத்துவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் கணக்கெடுப்புடன், அனைத்து சமூகங்களிலும் சாதி அடிப்படையிலான கணக்கெடுப்பும் நடத்தப்படும். இதற்காக, நாடு முழுவதும் சுமார் 3.1 மில்லியன் களப்பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2025 ஜூன் 16 அன்று, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 2027–க்கான அறிவிக்கையை உள்துறை அமைச்சகம் அதிகாரப்பூர்வமாக வெளியிட்டது. இந்திய மக்களின் பல்வேறு பண்புகள் குறித்த பலதரப்பட்ட புள்ளிவிவரத் தகவல்களின் மிகப்பெரிய ஒற்றை ஆதாரமாக இந்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பு விளங்குகிறது.

150 ஆண்டுகளுக்கும் மேலாக, இந்த நம்பகமான மற்றும் கால அளவுடன் கூடிய சோதனை நடைமுறை ஒவ்வொரு பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டு, மக்கள்தொகை குறித்த உண்மையான தரவை தொடர்ந்து வழங்கியுள்ளது. 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பு நாட்டில் நடத்தப்படும்

# உலகின் மிகப்பெரிய மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் பற்றி பிரதமர் நரேந்திர மோடியின் அறைகூவல்



*எனதருமை நாட்டு மக்களே,*

நாடு முழுவதும் ஒரு முக்கியமான இயக்கம் நடைபெற்று வருகிறது. இது பற்றி ஒவ்வொரு இந்தியரும் தெரிந்து கொள்ள வேண்டும். அதுதான் உலகின் மிகப்பெரிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பு இயக்கம். இது போன்ற நடைமுறையை ஏற்கனவே எதிர்கொண்டிருந்தவர்கள், இந்த முறை வித்தியாசமான அனுபவத்தைப் பெறுவார்கள்.

- 2027 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு டிஜிட்டல் முறையில் மேற்கொள்ளப்படவுள்ளது. அனைத்துத் தகவல்களும் நேரடியாக டிஜிட்டல் முறையில் பதிவு செய்யப்படுகிறது. வீடு வீடாக வரும் அதிகாரிகள், செல்பேசி செயலியை பயன்படுத்துவார்கள். உங்களுடன் உரையாடிய பின், தகவல்களை அதில் அவர்கள் பதிவிடுவார்கள்.

- இந்த முறை மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் நீங்கள் பங்கெடுப்பது, மிகவும் எளிமையாக்கப்பட்டுள்ளது; உங்களைப் பற்றிய தகவல்களை நீங்களே பதிவிடலாம். அதிகாரிகள் உங்கள் வீடுகளுக்கு வருவதற்கு 15 நாள்களுக்கு முன்பே இந்த வசதியை நீங்கள் பயன்படுத்தலாம். உங்கள் வசதிக்கு ஏற்ப விவரங்களை நீங்கள் பதிவு செய்யலாம். விவரங்களை சமர்ப்பித்ததும், உங்களுக்கு சிறப்பு ஐடி வழங்கப்படும். உங்கள் செல்பேசி அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு இந்த ஐடி அனுப்பப்படும். பின்னர், அதிகாரிகள் உங்கள் வீட்டிற்கு வரும்போது அந்த ஐடியை அவரிடம் வழங்கி உங்கள் விவரங்களை சரி பார்த்துக் கொள்ளலாம். இதன் மூலம் மீண்டும் தகவல்களைத் தரவேண்டிய அவசியம் தவிர்க்கப்படுகிறது. இந்த நடைமுறை, நேரத்தை சேமிப்பதுடன், நடைமுறையை எளிதாக்குகிறது.

- சுய கணக்கெடுப்பு நிறைவடைந்த மாநிலங்களில், வீடுகளைக் கணக்கெடுக்கும் பணிகளையும் அதிகாரிகள் தொடங்கிவிட்டார்கள். இதுவரை சுமார் 1 கோடியே 20 லட்சம் குடும்பங்களுக்கான வீட்டுப் பட்டியல் கணக்கெடுப்பு நிறைவடைந்துள்ளது.

- தேசிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பு என்பது, அரசின் பணி மட்டுமல்ல நம் அனைவரது பொறுப்பும் கூட. உங்கள் பங்கேற்பு முக்கியத்துவம் பெறுகிறது. நீங்கள் அளிக்கும் தகவல்கள் பத்திரமாக பாதுகாக்கப்படும். டிஜிட்டல் பாதுகாப்புடன் தரவுகள் நம்பகத்தன்மைக்குள் கொண்டு வரப்படும். வாருங்கள், நாம் அனைவரும் இந்தக் கணக்கெடுப்பில் பங்கேற்கலாம். 2027 மக்கள்தொகைக் கணக்கெடுப்பை வெற்றி பெறச் செய்வோம்.


# ஒரே அழைப்பில், முழுமையான தகவல்

கட்டணமில்லா எண்ணில் அழையுங்கள் **1855**

அதிகாரபூர்வ அண்மைத் தகவல்களுக்கு கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்

### மக்கள்தொகை கணக்கெடுப்பு-நிர்வாக கட்டமைப்பு

- மத்திய உள்துறை அமைச்சர்
- மத்திய உள்துறை செயலாளர்
- இந்தியத் தலைமைப் பதிவாளர் மற்றும் மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆணையர் (தேசிய அளவில்)
  - இயக்குநர், மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்ககம் (மாநில/ யூனியன் பிரதேச நிலையில் )
  - தலைமைச் செயலாளர் (மாநிலம்/யூனியன் பிரதேசம்)
- ஒருங்கிணைப்பு அதிகாரி (மாநிலம்/யூனியன் பிரதேசம்)
- முதன்மை மக்கள்தொகை கணக்கெடுப்பு அலுவலர்; மாவட்ட ஆட்சியர் /துணை ஆணையர்/நகராட்சி ஆணையர்
- பொறுப்பு அலுவலர்; துணைக் கோட்டாசியர் / வட்டாட்சியர் /வட்டார வளர்ச்சி அலுவலர் / நிர்வாக அலுவலர்
- கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள்; ஆசிரியர்கள், மாநில அரசு அலுவலர்கள் மற்றும் பிற உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள்




16– வது மக்கள்தொகை கணக்கெடுப்பாகவும், இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து நடைபெறும் 8 –வது மக்கள்தொகை கணக்கெடுப்பாகவும் இருக்கும்.

மக்கள்தொகை கணக்கெடுப்பின் நோக்கங்கள், முக்கியத்துவம் மற்றும் பயன்பாட்டை உண்மையிலேயே புரிந்து கொள்ள, நாட்டின் ஐந்தாவது உள்துறை அமைச்சரான கோவிந்த் வல்லப் பந்தின் வார்த்தைகளை கவனிக்க வேண்டும்.

உண்மையில், தற்காலச் சூழலில்–ஒவ்வொரு ஆய்வுக்கும் தேடலுக்கும் இன்றியமையாத அங்கமாகத் திகழும்– மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அறிக்கையைச் சுட்டிக்காட்டாமல், எத்தகைய குறிப்பிடத்தக்க நிர்வாக, பொருளாதார அல்லது சமூக முன்னெடுப்பையும் மேற்கொள்ள



“வீடுகளைப் பட்டியலிடுதல் மற்றும் வீடு தோறும் செல்லுதல் தொடர்பான 2027 மக்கள்தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டத்தின் தொடக்கத்தை இன்று குறிக்கிறது. இந்த மக்கள்தொகை கணக்கெடுப்பில் முதல் முறையாக டிஜிட்டல் மூலம் தரவு சேகரிக்கப்படுகிறது. இது இந்திய மக்களுக்குத் தங்கள் வீட்டு விவரங்களை சுயமாகக் கணக்கிட அதிகாரம் அளிக்கிறது. இந்திய மக்கள் தங்கள் வீட்டு விவரங்களை சுயமாக கணக்கிட்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு செயல்பாட்டில் பங்கேற்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.”

**நரேந்திர மோடி, பிரதமர்**

இயலாது. சொல்லப்போனால், மிகச் சிறிய சிக்கல்களைத் தீர்ப்பதற்குக் கூட பல நேரங்களில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கையை நாட வேண்டியுள்ளது" என்று அவர் கூறினார். மக்கள்தொகை கணக்கெடுப்பு என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு நாட்டிற்குள் உள்ள ஒவ்வொரு தனிநபர், வீடு மற்றும் கட்டமைப்பு பற்றிய தரவுகளை சேகரிக்கும் முறையான மற்றும் அதிகாரபூர்வ நடைமுறையாகும். இது மக்கள்தொகையின் அளவு, வளர்ச்சி மற்றும் விநியோகத்தை அளவிடுகிறது. மேலும், இது கல்வியறிவு, வீட்டுவசதி, இடப்பெயர்வு, கருவுறுதல் விகிதங்கள், வேலைவாய்ப்பு மற்றும் வருமான நிலைகள் தொடர்பான தரவுகளையும் பதிவு செய்கிறது.

மக்கள்தொகை கணக்கெடுப்பு என்பது–குறிப்பாக, 'தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புகளுக்கான கோட்பாடுகள் மற்றும் பரிந்துரைகள்' ஆகியவற்றின்படி–ஒரு நாட்டிற்குள் அல்லது ஒரு வரையறுக்கப்பட்ட எல்லைப்பகுதிக்குள் வசிக்கும் அனைத்துத் தனிநபர்கள் குறித்தான சமூக, பொருளாதார மற்றும் மக்கள் தொகையியல் தரவுகளை, ஒரு குறிப்பிட்ட காலத்திலோ அல்லது

## இனி பேனாவும் காகிதமும் இல்லை...

## டிஜிட்டல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027

பிரதமர் நரேந்திர மோடி தலைமையின் கீழ், கடந்த பத்தாண்டுகளில் இந்தியா டிஜிட்டல் புரட்சியின் முன்னோடியாகத் திகழ்கிறது. 2047–க்குள் வளர்ச்சியடைந்த இந்தியா எனும் பிரதமரின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்கும் திசையில், டிஜிட்டல் மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றொரு முக்கியத்துவம் வாய்ந்த, வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கையாகக் கருதப்படுகிறது. மரபுசார்ந்த காகித அடிப்படையிலான முறைகளிலிருந்து விலகி, கணக்கெடுப்பாளர்கள் 'உங்கள் சொந்தக் கருவியைப் பயன்படுத்துங்கள்' (BYOD) என்னும் மாதிரியைப் பயன்படுத்தி, சிறப்புச் செயலிகள் வாயிலாகத் தரவுகளைச் சேகரிப்பார்கள்.

- தனித் தளத்தின் மூலம், சுய கணக்கீட்டிற்கான வாய்ப்பு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. se.census.gov.in என்ற இணையதளத்தில் பதிவிடப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, இந்த தகவலை சரிபார்க்க கணக்கீட்டாளர்கள் வீடுகளுக்குச் செல்வார்கள்.




- **வீட்டுப் பட்டியல் தொகுப்பு உருவாக்குநர் (HLBC) வலைதளச் செயலி:** இது ஒரு வலை–வரைபடச் செயலியாகும். பொறுப்பு அலுவலர்கள் செயற்கைக்கோள் படங்களைப் பயன்படுத்தி வீட்டுப் பட்டியல் தொகுப்புகளை டிஜிட்டல் முறையில் உருவாக்க உதவுகிறது, இதன் மூலம் நாடு முழுவதும் தரப்படுத்தப்பட்ட புவியியல் ரீதியான பரவலை உறுதி செய்யப்படுகிறது.

- **எச்எல்ஓ மொபைல் செயலி:** இது கணக்கெடுப்பாளர்கள் வீட்டுப் பட்டியல் தரவுகளைச் சேகரித்து பதிவேற்ற ஒரு பாதுகாப்பான, இணைய இணைப்பு இல்லாத மொபைல் செயலியாகும். சிஎம்எம்எஸ் தளத்தில் பதிவு செய்துள்ள கணக்கெடுப்பாளர்கள் மட்டுமே இந்தச் செயலியை அணுக முடியும். இந்தச் செயலி, களத்திலிருந்து சேவையகத்திற்கு நேரடித் தரவுப் பரிமாற்றத்தைச் செயல்படுத்துவதுடன், பாரம்பரிய காகிதப்பணிகளை நீக்குகிறது.



- அனைத்து வீட்டுப் பட்டியல் தரவுகளும் இந்தச் செயலி மூலமாகவே சேகரிக்கப்படும். பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்களைப் பயன்படுத்தி மட்டுமே இதை இயக்க முடியும். இந்தச் செயலி ஆண்ட்ராய்டு மற்றும் ஐஓஎஸ் இயங்குதளங்களுடன் இணக்கமானது, மேலும் இதை 16 பிராந்திய மொழிகளில் இயக்க முடியும்.

- **மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு தளம்:** இது ஒரு மையப்படுத்தப்பட்ட, வலைதள அடிப்படையிலான டிஜிட்டல் தளமாகும். இது அனைத்து நிர்வாக மட்டங்களிலும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் திட்டமிட, நிர்வகிக்க, செயல்படுத்த மற்றும் கண்காணிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.



# மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027: வலுவான தரவுப் பாதுகாப்பு



2027 மக்கள்தொகை கணக்கெடுப்பின் போது, பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்படும் எந்தத் தரவும் சட்டரீதியாக முற்றிலும் ரகசியமாகவும் பாதுகாப்பாகவும் கருதப்படும். எந்தச் சூழ்நிலையிலும் தனிப்பட்ட தகவல்கள் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்படமாட்டாது. மேலும், தரவைப் பாதுகாக்க பல அடுக்குகளைக் கொண்ட "சைபர் கவசம்" நிறுவப்பட்டுள்ளது; இது ஹேக்கிங் மற்றும் அனுமதியற்ற உட்புகுதலுக்கு எதிராகப் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

- தொழில்நுட்பப் புத்தாக்கத்திற்கு முன்னுரிமை அளிப்பதன் மூலமும், அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதன் மூலமும், 2027 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு துல்லியமானதாகவும், பாதுகாப்பானதாகவும், விரிவானதாகவும் இருப்பது உறுதி செய்யப்படும்.

- 2027 கணக்கெடுப்பிற்காக, பாதுகாப்பான மொபைல் செயலியைப் பயன்படுத்தி வீடு வீடாகச் சென்று தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. இந்தச் செயலி வலுவான பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது. மேலும் தரவுப் பாதுகாப்பை உறுதிசெய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் செயல்படுத்தப்பட்டுள்ளன.



- மொபைல் சாதனங்களில் தரவு சேகரிப்பு, பரிமாற்றம் மற்றும் சேவையக மட்டத்தில் அதன் சேமிப்பு வரை முழு நடைமுறையின் போதும் தரவுப் பாதுகாப்பை உறுதிசெய்ய விரிவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 2027-க்காகப் பயன்படுத்தப்படும் டிஜிட்டல் கருவிகள், உயர் மட்ட தரவுப் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க, வலுவான குறியாக்கம் மற்றும் பல காரணி அங்கீகாரத்துடன் பொருத்தப்பட்டுள்ளன.
- மக்கள்தொகைக் கணக்கெடுப்பிற்கான தரவு சேகரிப்பு, 1948-ன் மக்கள்தொகைக் கணக்கெடுப்புச் சட்டம் மற்றும் 1990-ன் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு விதிகளின்படி கண்டிப்பாக நடத்தப்படுகிறது. இந்தச் செயல்பாட்டின் போது சேகரிக்கப்பட்ட அனைத்து தனிப்பட்ட தரவுகளும் முழுமையான ரகசியத்தன்மையுடன் பராமரிக்கப்படுகின்றன.
- எல்லாவற்றிற்கும் மேலாக தரவுப் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்து, பல்வேறு நிர்வாக மட்டங்களில் தொகுக்கப்பட்ட ஒருங்கிணைந்த தரவுகள் மட்டுமே வெளியிடப்படுகின்றன.
- மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 2027 தொடர்பான பல்வேறு செயல்பாடுகளை நிர்வகிப்பதற்கும் கண்காணிப்பதற்கும் வசதியாக ஒரு  தனி வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது.



**"சுய-கணக்கீட்டு" நடைமுறையை முடித்த குடியிருப்பாளர்கள், தங்கள் சுய-கணக்கீட்டு அடையாள எண்ணை (SE ID) தயாராக வைத்து, கணக்கெடுப்பாளர் அவர்களைச் சந்திக்கும்போது அவருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். சுய கணக்கெடுப்பைத் தேர்வு செய்யாத குடும்பங்களைப் பொறுத்தவரை, வீட்டுப் பட்டியல் மற்றும் வீட்டு கணக்கெடுப்பு கட்டத்தின் போது, கணக்கெடுப்பாளர்களால் வீடு வீடாகச் சென்று கணக்கெடுக்கப்படும்.**

---

காலங்களிலோ சேகரித்தல், தொகுத்தல், வெளியிடுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு நடைமுறையாக ஐக்கிய நாடுகள் சபையின் ஆவணம் ஒன்றில் வரையறுக்கப்பட்டுள்ளது.

## மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் உலகளாவிய சூழல்

'சென்சஸ்' என்ற சொல், "மதிப்பிடுதல்" அல்லது "ஆய்வு செய்தல்" என்று பொருள்படும் லத்தீன் சொல்லான 'சென்செரே' என்பதிலிருந்து பெறப்பட்டது. இதன் வரலாறு பொ.ஆ.மு. 1 அல்லது 2 -ம் நூற்றாண்டுக்கு முந்தையது. அக்காலத்தில், ரோமில் இருந்த நீதிபதிகள் வரிகளை விதிப்பதற்கும், கட்டாய ராணுவ சேவைக்கு வயது வந்த ஆண்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்கும் மக்கள்தொகைப் பதிவேடுகளைத் தொகுக்க வேண்டியிருந்தது. ரோமானியப் பேரரசு நிறுவப்படுவதற்கு முன், மக்கள் தொகைக் கணக்கெடுப்புகளுக்கான சான்றுகள்-பெரும்பாலும் நில அளவை (நிலம் தொடர்பான) கணக்கெடுப்புகளின் வடிவத்தில் கிடைக்கின்றன. பொ.ஆ.மு. 30-ம் நூற்றாண்டிலேயே பண்டைய பாபிலோனியா, சீனா மற்றும் எகிப்தில் இத்தகைய கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டன. நைல் பள்ளத்தாக்கிலும் பண்டைய பாரசீகத்திலும் இதேபோன்ற முயற்சிகளை ஹெரோடட்டஸ் ஆவணப்படுத்தியுள்ளார். மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பதிவுகளின் குறிப்புகளைப் பழைய ஏற்பாட்டின் சில பகுதிகளிலும் காணலாம். எகிப்திலிருந்து வெளியேறுவதற்கு முன் (சுமார் பொ.ஆ.மு. 1500), மோசஸ் இஸ்ரவேலின் போர் வீரர்களைக் கணக்கெடுத்தார். இதேபோல், 12-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 13-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், செங்கிஸ்கான் தான் கைப்பற்றிய பிரதேசங்களில் உள்ள மக்களின் வரி விதிப்புத் திறனை மதிப்பிடுவதற்காக ஒரு மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்த ஆணையிட்டார். சீனாவில், 14-ஆம் நூற்றாண்டு வரை விரிவான மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் திட்டங்களுக்கான சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன. ஆரம்பகால முழுமையான கணக்கெடுப்புகளில் ஒன்று-2027 மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் வசிப்பவர்களை உள்ளடக்கியது:



"மக்கள்தொகைக் கணக்கெடுப்பு இரண்டு தனித்துவமான கட்டங்களில் நடத்தப்படுகிறது: முதலில், வீடுகள்/குடும்பங்களின் கணக்கெடுப்பு, அதைத் தொடர்ந்து தனிநபர்களின் கணக்கெடுப்பு. தற்போது, முதல் கட்டம் – அதாவது வீடுகளின் கணக்கெடுப்பு – நடைபெற்று வருகிறது. வீடுகளுக்கு சாதி அடையாளம் இல்லாததால், இந்தக் கட்டத்திற்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் படிவத்தில் சாதித் தகவலுக்கான இடம் இல்லை. நாம் தனிநபர்களின் மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்தும்போது சாதிக் கணக்கெடுப்பு நிலை வரும்."

**அமித் ஷா, மத்திய உள்துறை அமைச்சர்**

அனைத்து வயதுடைய மக்களையும் உள்ளடக்கிய, மிக முந்தைய முழுமையான மக்கள் தொகைக் கணக்கெடுப்புகளில் ஒன்று, 1449–ம் ஆண்டில் ஜெர்மனியின் நியூரம்பெர்க் நகரில் நடத்தப்பட்டது. 15 மற்றும் 16–ம் நூற்றாண்டுகளில் சுவிட்சர்லாந்திலும் பிற மாகாண அல்லது நகராட்சி அளவிலான மக்கள் தொகைக் கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. வட அமெரிக்காவில், ஸ்பெயின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த பகுதிகளில் நடைபெற்ற முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, 1576–ல் ஸ்பெயின் மன்னர் இரண்டாம் பிலிப்பால் ஆணையிடப்பட்டது. இப்பணி அப்பகுதியின் பூர்வகுடி மக்களால் நிறைவேற்றப்பட்டது; அவர்கள் தொகுத்த அந்த அறிக்கை தற்போது டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், "முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு" என்று திட்டவட்டமாக வரையறுக்கும் ஒரேயொரு நிகழ்வு ஏதுமில்லை என்று வரலாற்று ஆவணங்கள் சுட்டிக்காட்டுகின்றன; ஏனெனில், முற்காலக் கணக்கெடுப்புகள் நவீன மக்கள் தொகைக் கணக்கெடுப்புகளுக்குரிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிறப்பம்சங்களை

## கொவிட் காரணமாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் தாமதம்



2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பைத் தொடர்ந்து, 2021 மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்கான அனைத்துத் தயாரிப்புகளையும் அரசு முடித்திருந்தது. அந்த நேரத்தில், நூற்றாண்டின் மிகப்பெரிய பெருந்தொற்றான கொவிட் தாக்கியதால், மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்துவது சாத்தியமற்றதாகிவிட்டது. கொவிட் நெருக்கடி தணிந்த பிறகும், நாடு அதிலிருந்து மீண்டு வருவதற்கு சிறிது காலம் தேவைப்பட்டது, இப்போது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.



- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை, இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பு 2021– ஐ நடத்துவதற்கும், தேசிய மக்கள் தொகை பதிவேட்டை (என். பி. ஆர்) புதுப்பிப்பதற்கும் ஒப்புதல் அளித்தது.
- 2021 மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்துவதற்கான அரசின் நோக்கம் 2019 மார்ச் 28 அன்று இந்திய அரசிதழில் (என்பிஆர்) அறிவிக்கப்பட்டது.
- கொவிட்–19 பெருந்தொற்று நோய் பரவியதால், 2021 மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய களப்பணி நடவடிக்கைகள் மறு அறிவிப்பு வரும் வரை ஒத்திவைக்கப்பட்டன.
- இதன் விளைவாக, இந்தியாவில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு இப்போது 2027–ல் தொடங்கப்பட்டுள்ளது.

### 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் முக்கிய மக்கள் தொகையியல் கண்டுபிடிப்புகள்

மொத்த மக்கள் தொகை
**1.21** பில்லியன்

2011 மார்ச் 1 நிலவரப்படி

ஆண்களின் எண்ணிக்கை
**62.32** கோடி

பெண்களின் எண்ணிக்கை
**58.76** கோடி

2001–2011 பத்தாண்டு காலத்தில்
மக்கள் தொகை வளர்ச்சி
**18.20** கோடி

2011–ல் குழந்தைகளின் பாலின விகிதம்
**918** Girls

2011–ல் இந்தியாவின் மக்கள் தொகை அடர்த்தி
**382** ஒரு சதுர கிலோ மீட்டருக்கு, 17.7% தசாப்த வளர்ச்சியுடன்.

நாட்டின் கல்வியறிவு விகிதம்
**73.0%**
80.9% ஆண்கள்
64.6% பெண்கள்

எழுத்தறிவு விகிதத்தில் கேரளா முதலிடத்தைத் தக்கவைத்திருந்தது
**93.91%**

இதனை அடுத்து லட்சத்தீவுகள் ((91.8%) மற்றும் மிசோரம் (91.3%)

# மக்கள் தொகை கணக்கெடுப்பின் முழுமையான செயல்முறையைப் புரிந்துகொள்ளுங்கள்

மக்கள் தொகை கணக்கெடுப்பை சீராக நடத்துவதில் மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் மிக முக்கியப் பங்காற்றுகின்றன. ஏனெனில், தரவு சேகரிப்பு, சரிபார்ப்பு, கண்காணிப்பு, மேற்பார்வை மற்றும் பணி முன்னேற்ற ஆய்வு உள்ளிட்ட பல்வேறு அடித்தள அளவிலான செயல்பாடுகள் அனைத்தும், 1948–ன் மக்கள்தொகை கணக்கெடுப்புச் சட்டம் மற்றும் 1990–ன் மக்கள்தொகை கணக்கெடுப்பு விதிகளுக்கு இணங்க, அந்தந்த மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகங்களால் நியமிக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பு அலுவலர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

**முதல் முறை** மக்கள் தொகை கணக்கெடுப்பு டிஜிட்டல் முறையில் நடத்தப்படும்.

**முதல் முறை** ஒரு சுய– கணக்கீட்டு வாய்ப்பும் கிடைக்கும்.

### இது ஏன் 'மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2027' என்று குறிப்பிடப்படுகிறது?

- மத்திய அரசு, 2025 ஜூன் 16 அன்று இந்திய அரசிதழில் 'மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 2027'–ஐ அதிகாரபூர்வமாக அறிவித்தது. இந்த இரு–கட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 2026 ஏப்ரலில் தொடங்கும் போது, ஏன் 'மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 2027' என்று பெயரிடப்பட்டுள்ளது? என ஒருவர் கேட்கலாம்.
- இதற்கான பதில் என்னவென்றால், மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்கான இறுதி எண்ணிக்கைக் குறிப்புத் தேதி 2027 மார்ச் 1 அன்று 00:00 மணி நேரம் ஆகும். இதன் பொருள், பிப்ரவரி 28 அன்று நள்ளிரவு 12:00 மணிக்குள் பிறக்கும் தனிநபர்கள் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2027 எண்ணிக்கையில் சேர்க்கப்படுவார்கள். மாறாக, இந்தக் குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்குள் இறப்பவர்கள் கணக்கெடுப்பில் சேர்க்கப்பட மாட்டார்கள்.
- லடாக் மற்றும் ஜம்மு & காஷ்மீர் யூனியன் பிரதேசங்கள், அத்துடன் உத்தராகண்ட் மற்றும் இமாச்சல் பிரதேச மாநிலங்களின் பனி மூடிய, அணுக முடியாத பகுதிகள் ஆகியவற்றின் விஷயத்தில், இந்தக் குறிப்பீட்டுத் தேதி 2026 அக்டோபர் 1



### வீடுகளைப் பட்டியலிடுதல் மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பின்போது கேட்கப்பட வேண்டிய 33 கேள்விகள்

- வீடுகளை பட்டியலிடுதல் மற்றும் வீட்டு கணக்கெடுப்பு கட்டம் 2026 ஏப்ரல் 1–க்கும் செப்டம்பர் 30– க்கும் இடையே நாடு முழுவதும் நடத்தப்படும்.
- இந்த ஆறு மாத காலத்தில், ஒவ்வொரு மாநிலமும் யூனியன் பிரதேசமும் அந்தந்த மாநில / யூனியன் பிரதேச அரசுகளால் அறிவிக்கப்பட்டபடி, குறிப்பிட்ட 30 நாள் காலத்திற்குள் இந்தக் களப்பணியை முடிக்கும்.
- வீடுப் பட்டியலிடல் மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு கட்டத்தில், வீட்டு நிலை, வீட்டு வசதிகள் மற்றும் கிடைக்கக்கூடிய சொத்துக்கள் தொடர்பான விரிவான தகவல்கள் சேகரிக்கப்படும்
- சான்றுகள் அடிப்படையிலான திட்டமிடல், கொள்கை வகுத்தல் மற்றும் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நலத்திட்டங்களுக்கான அடித்தளத்தை வழங்கும் முக்கிய குறியீடுகளைத் தெரிந்து கொள்ள, 2026 ஜனவரி முதல் கட்டத்திற்கு மொத்தம் 33 கேள்விகள் அறிவிக்கப்பட்டுள்ளன.



உள்ளடக்கியிருந்தபோதிலும், அத்தகைய அனைத்து அம்சங்களையும் ஒரே நேரத்தில் முழுமையாக உள்ளடக்கியதாக எதனாலும் உரிமை கோர இயலாது.

நவீன மக்கள் தொகை கணக்கெடுப்பு என்ற கருத்து 17 மற்றும் 18–ம் நூற்றாண்டுகளில் உருவானது, இது ஒரு நாட்டின் முழு மக்கள்தொகையையும் குறிப்பிடத்தக்க மக்கள்தொகை பண்புகளுடன் உள்ளடக்கியது.

### 1872–க்கு முன் இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு வரலாறு

1872–க்கு முன் ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோவில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் பொ.ஆ. மு மூன்றாம் அல்லது நான்காம் ஆயிரமாண்டிற்குள்–ஒருவேளை அதற்கும் முன்பே கூட இந்தியா மிகவும் வளர்ந்த நாகரிகத்தைக் கொண்டிருந்தது என்பதை வெளிப்படுத்தியுள்ளன. இந்த நாகரிகத்தில் பெரிய மக்கள் தொகை நிறைந்த நகரங்கள், நன்கு கட்டப்பட்ட கட்டிடங்கள், கோயில்கள், செங்கல்லால் கட்டப்பட்ட பொதுக் கட்டமைப்புகள் அந்தச் சகாப்தத்தில் மெசபடோமியா மற்றும் எகிப்து மக்கள் பயன்படுத்தியவற்றுடன் ஒப்பிடக்கூடிய பல்வேறு வசதிகள் இருந்தன. பண்டைய வேதங்கள், குறிப்பாக ரிக்வேதம், மக்கள்தொகை குறைவாக இருந்ததையும், சிறிய கிராமங்களில் பரந்த பகுதிகளில் சிதறியிருந்ததையும் தெளிவுபடுத்துகிறது. பொ.ஆ.மு. 327–326 காலகட்டத்தில் இந்தியாவின் மீது படையெடுத்த மாவீரன் அலெக்சாண்டரின்

# முதல் முறையாக சுய-கணக்கீடு 16 மொழிகளில் ஆன்லைன் வசதி கிடைக்கிறது

இப்போது மேற்கொள்ளப்படும் மக்கள்தொகை கணக்கெடுப்பு, மொத்தத்தில் நாட்டின் 16-வது மக்கள்தொகை கணக்கெடுப்பாகவும், சுதந்திரத்திற்குப் பிந்தைய 8-வது கணக்கெடுப்பாகவும் அமைகிறது. வரலாற்று ரீதியாக மக்கள்தொகை கணக்கெடுப்பு ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு வந்தாலும், இம்முறை இது 16 ஆண்டுகால இடைவெளிக்குப் பின் நடைபெறுகிறது. இந்தக் காலக்கெடுவை விட மிக முக்கியமாக, ஒரு 'டிஜிட்டல் கணக்கெடுப்பு' முறை மற்றும் மக்களுக்கான 'சுய-கணக்கீட்டு' வசதி இதில் உள்ளது. இந்த 16 கணக்கெடுப்புகளின் வரலாற்றிலேயே முதல்முறையாக இது அறிமுகம் செய்யப்படுவது சிறப்பாகும். மக்கள்தொகை கணக்கெடுப்பு (திருத்தம்) விதிகள், 2022-ன் பிரிவு 6டி-ன் கீழ், இந்த சுய-கணக்கீட்டு வசதி, 16 பிராந்திய மொழிகளில் கிடைக்கும் ஒரு பாதுகாப்பான, இணையம் சார்ந்த சேவையாகும்.

- se.census.gov.in என்பது கணினி , மடிக்கணினி அல்லது அலைபேசி சாதனங்கள் வாயிலாக எளிதாக அணுகக்கூடிய, இதற்கென்றே தனியாக உருவாக்கப்பட்ட ஓர் இணையதளமாகும். நாட்டின் எந்தவொரு பகுதியிலிருந்தும் தொலைதூரப் பகுதியாக இருந்தாலும் கூட இணையம் வாயிலாகவே இந்தச் சுய-கணக்கீட்டுப் பணியை மேற்கொள்ள முடியும்.
- ஒவ்வொரு மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்திலும் 'வீடுப் பட்டியலிடுதல் தயாரிக்கும் கட்டம்' தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்பாகவே, இந்த வசதி பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்; இதன் மூலம் பொதுமக்கள் தங்கள் குடும்ப விவரங்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ள இயலும்.
- தங்களுக்கு ஒதுக்கப்பட்ட எல்லைகளுக்குள் அமைந்துள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் கணக்கெடுப்பாளர்கள் தொடர்ந்து நேரடியாக வருகை தருவார்கள்; அதே வேளையில், அவர்கள் வருகை தருவதற்கு முன்பாகவே விவரங்களைப் பதிவு செய்துகொள்ள உதவும் ஒரு கூடுதல் மற்றும் துணை வசதியாக இந்த 'சுய-கணக்கீட்டு' முறை செயல்படும்.



## சுய-கணக்கீட்டுக்கான முழுமையான நடைமுறை இங்கே தரப்பட்டுள்ளது:

சுய-கணக்கெடுப்பு குறித்த வீடியோ வழிகாட்டிக்கு இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.



**பிரிவு 01**

வலைதள உள்நுழைவு மற்றும் ஆரம்பப் பதிவு

**1. வலைதள அணுகல் மற்றும் உள்நுழைவு**

சுய-கணக்கீட்டில் பங்கேற்க, முதலில் se.census.gov.in என்ற இணையதளத்துக்குச் செல்லவும். உங்கள் மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்து, கேப்சா (CAPTCHA) குறியீட்டை உள்ளிடவும்.

**2. குடும்பப் பதிவு**

குடும்பத் தலைவரின் பெயர், அவரது செல்பேசி எண், மின்னஞ்சல் முகவரி (விருப்பப்பட்டால்) ஆகியவற்றைக் குறிப்பிடவும்.

- குடும்பத் தலைவரின் பெயரை மாற்றமுடியாது.
- குடும்பத்துக்கு ஒரு செல்பேசி எண்ணை பயன்படுத்தலாம். ஒரு முறை கடவு எண்ணைப் பதிவு செய்த பின்னர், வேறு எந்தக் குடும்பத்துக்கும் அந்த எண்ணைப் பயன்படுத்த முடியாது.



**பிரிவு 02**

சரிபார்த்தல் மற்றும் வசிப்பிட அடையாளம்

**3. மொழி தேர்வு மற்றும் OTP சரிபார்த்தல்**

நீங்கள் விரும்பும் மொழியைத் தேர்ந்தெடுத்து, பதிவு செய்யப்பட்ட உங்கள் அலைபேசி எண்ணிற்கு வந்துள்ள ஓடிபி (OTP) குறியீட்டை உள்ளிடவும்.

**4. இடம் சார்ந்த விவரங்களை உள்ளிடவும்**

உங்கள் மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து, பின் (PIN) குறியீட்டை உள்ளிடவும்; பின்னர் உங்கள் கிராமம், நகரம் அல்லது குடியிருப்புப் பகுதி தொடர்பான விவரங்களைப் பூர்த்தி செய்யவும்.

**5. வரைபடத்தில் உங்கள் குடியிருப்பு அமைந்திருக்கும் இடத்தைக் குறிக்கவும்**

வரைபடத்தில் உள்ள சிவப்பு நிறக் குறியீட்டை இழுத்துச் சென்று, உங்கள் குடியிருப்பு கட்டிடத்தின் மீது துல்லியமாகப் பொருத்தி, அந்த இடத்தின் அமைப்பை உறுதிசெய்யவும்.

சுய-கணக்கீடு குறித்த காணொலி வழிகாட்டிக்கு கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.



## பிரிவு 03

தரவு உள்ளீடு மற்றும் இறுதியான உறுதிப்படுத்தல்

### வினாப்பட்டியலை நிரப்பவும்

**6** வீடுப் பட்டியலிடல் மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு வினாப்பட்டியலை நிரப்பவும். கேள்விகளைப் புரிந்துகொள்வதில் உங்களுக்கு உதவ, குறிப்புகள், அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் அத்தியாவசியத் தகவல்கள் ஆகியவை கிடைக்கும்.

### முன்னோட்டம் மற்றும் ஆய்வு

**7** முன்னோட்டத் திரையைப் பயன்படுத்தி, உங்களுடையது உள்ளிட்ட அனைத்துத் தகவல்களையும் சரிபார்க்கவும். உங்களிடம் பின்வரும் விருப்பங்கள் உள்ளன: நீங்கள் உள்ளிட்ட விவரங்களை மாற்றியமைக்கத் திரும்பச் செல்லுதல், பின்னர் சமர்ப்பிப்பதற்காகத் தரவை வரைவாகப் பாதுகாத்தல், அல்லது உறுதிசெய்து சமர்ப்பித்தல்.

### இறுதியாக சமர்ப்பித்தல்

**8** உங்கள் தரவை சமர்ப்பிப்பதை இறுதி செய்ய, "உறுதிசெய்து சமர்ப்பிக்கவும்" என்பதைக் கிளிக் செய்யவும்; இறுதி சமர்ப்பித்தலுக்குப் பின் எந்த மாற்றங்களும் செய்ய இயலாது என்பதை நினைவில் கொள்ளவும்.

**சுய கணக்கீட்டு அடையாள எண்ணை (SE ID)**

படிவத்தை வெற்றிகரமாகச் சமர்ப்பித்தவுடன், எச் ('H') என்ற எழுத்தில் தொடங்கும் ஒரு தனித்துவமான 11-இலக்க சுய- கணக்கீட்டு அடையாள எண் (SE ID) உருவாக்கப்படும். இந்த அடையாள எண் உங்களுக்கு குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் வழியாக அனுப்பப்படும்.

## பிரிவு 04

களச் சரிபார்ப்பு



### கணக்கெடுப்பாளரின் வருகை

**9** மக்கள் தொகைக் கணக்கெடுப்பாளர் உங்கள் வீட்டிற்கு வரும்போது, சரிபார்ப்பு நோக்கங்களுக்காக உங்கள் சுய- கணக்கீட்டு அடையாள எண்ணை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும்.

**எஸ்இஐடி பொருந்தும் முடிவு**

எஸ்இஐடி ஏற்கனவே உள்ள பதிவுகளுடன் பொருந்தினால், உங்கள் தகவல் சரிபார்க்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும். எஸ்இஐடி பொருந்தவில்லை என்றால், கணக்கெடுப்பாளர் உங்களிடமிருந்து தேவையான விவரங்களைச் சேகரித்து புதிய தகவலைப் பூர்த்தி செய்வார்.

"இந்தச் சாதிவாரி கணக்கெடுப்பு, சமூகத்தில் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பின்தங்கிய அனைத்து பிரிவினருக்கும் அதிகாரம் அளிக்கும், உள்ளடக்கத்தை வளர்க்கும் மற்றும் பின்தங்கியவர்களின் முன்னேற்றத்திற்கு புதிய பாதைகளை வகுக்கும். பிரதமர் நரேந்திர மோடி 2026 மக்கள் தொகை கணக்கெடுப்பை சாதிவாரி கணக்கீட்டுக் கூறுகளுடன் நடத்த முடிவு செய்துள்ளார்."


**அமித் ஷா,** மத்திய உள்துறை அமைச்சர்

படை, ஓர் அடர்த்தியான மக்கள் தொகையின் இருப்பை மேலும் உறுதிப்படுத்தியது.

சந்திரகுப்தரின் (பொ.ஆ.மு. 321-297) ஆட்சிக் காலப் பதிவுகள், 700,000 வீரர்களைக் கொண்ட ஒரு நிரந்தரப் படை இருந்ததைக் குறிப்பிடுகின்றன-இந்தப் படையைத் தக்கவைத்துக் கொள்ள ஒரு கணிசமான மக்கள் தொகை அடிப்படை அவசியமாக இருந்திருக்கும். மேற்கூறிய உண்மைகளின் அடிப்படையில், பொது யுகத்துக்கு முன்பே இந்தியா ஒரு குறிப்பிடத்தக்க மக்கள் தொகையைக் கொண்டிருந்தது என்ற முடிவுக்கு நிச்சயம் வரலாம். மேலும், மக்கள்தொகை தொடர்பான தரவுகளைச் சேகரிக்கும் முயற்சிகள் மிகப் பண்டைய காலத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டன. பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டில், மாமன்னர் அசோகரின் அரசியல் நிர்வாகத்தின் மிகச் சிறந்த அறிஞர்களில் ஒருவரான கௌடில்யரால் உருவாக்கப்பட்ட புகழ்பெற்ற "அர்த்தசாஸ்திரம்", வரிவிதிப்பு நோக்கங்களுக்காக மக்கள்தொகை தரவுகளைச் சேகரிப்பதை அரசு கொள்கையின் ஒரு அடிப்படைக் கோட்பாடாக நிறுவியது.

இந்த நூல், மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் பொருளாதார, விவசாய மக்கள்தொகைக் கணக்கெடுப்புகளை நடத்துவதற்கான முறைகள் பற்றிய விரிவான விவரங்களை வழங்குகிறது.

மக்கள்தொகைக் கணக்கெடுப்பு-அதன் முக்கியத்துவம் பண்டைய காலங்களில் திறமையான நிர்வாகங்களால் அங்கீகரிக்கப்பட்டது-இடைக்கால யுகத்தில் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டது; இது நாட்டின் வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட அளவிலான அரசியல் நிலைத்தன்மை இல்லாத ஒரு காலகட்டமாகும். இருப்பினும், பின்னர் ஒரு நவீன அரசு அமைப்பு உருவாக்கப்பட்டவுடன், துல்லியமான மக்கள்தொகை புள்ளிவிவரங்களுக்கான தேவை மீண்டும் வலுவாக உணரப்பட்டது.



# உலகின் மிகப்பெரிய மக்கள்தொகை கணக்கெடுப்பு: 2027

## 'வளர்ச்சியடைந்த இந்தியா' திட்டத்திற்கான ஏற்பாடுகள்




### மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிக்கான

மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிகள், மத்தியப் பட்டியலின் (பதிவு 246) வரம்பிற்குட்பட்டு, 1948–ன் மக்கள்தொகை கணக்கெடுப்புச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

**₹ 11,718.24 கோடி**

2027–ம் ஆண்டிற்கான மக்கள்தொகை கணக்கெடுப்பு, 2027–க்கு மத்திய அரசால் ரூ 11,718.24 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



இந்த நிதி ஒதுக்கீடு, கணக்கெடுப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான மதிப்பூதியம், பயிற்சி, தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு வசதிகள், போக்குவரத்து ஏற்பாடுகள் மற்றும் அது சார்ந்த இதர செலவினங்களை உள்ளடக்கியதாகும். மக்கள்தொகை கணக்கெடுப்பு என்பது மத்தியப் பட்டியலின் கீழ் வருவதால், இதற்கான நிதியை மத்திய அரசே செலவிடுகிறது. இந்த நடைமுறையில், மாநில அரசுகளின் மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிகள் தொடர்பான நிர்வாக அமைப்புகள் துணை நிற்கின்றன.

### நிர்வாக அலகுகளை நிறுத்தி வைத்தல்:

- மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிகளுக்கு ஒரு நிலையான கட்டமைப்பை வழங்கும் வகையில், நிர்வாகப் பிரிவுகள் 2026 ஜனவரி 1 முதல் 2027 மார்ச் 31 வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.
- முதல் கட்டத்திற்கான முன்னோடிச் சோதனைகள், 2025 நவம்பர் மாதத்திலேயே வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.




**2026 ஜனவரி**

மாதத்தில், மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள், மாநில அளவிலான ஒருங்கிணைப்பு அதிகாரிகள், மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிகளின் இயக்குநர்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

- முதல் கட்டப் பணிகளுக்கு விரிவான வழிகாட்டி கையேடு, 19 மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ளது.
- பணிகளில் ஒருமைப்பாட்டை உறுதி செய்யவும், செயல்பாடுகள் சீராக நடைபெறவும் ஏதுவாக, தரப்படுத்தப்பட்ட நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல் நெறிமுறைகளை விவரிக்கும் சுற்றறிக்கைகள் தேசிய அளவில் வெளியிடப்பட்டுள்ளன.
- மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகள் குறித்த நேரத்தில் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், இத்திட்டத்தை முழுமையாக நிறைவு செய்யும் வகையில், விரிவான கால அட்டவணை வகுக்கப்பட்டு, தற்போது, அவை தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

*1948 மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டப்படி சேகரிக்கப்படும் அனைத்துத் தரவுகளும், மிகக் கடுமையான ரகசியத்தன்மையுடன் பாதுகாக்கப்படுகின்றன. மேலும், அவை புள்ளிவிவர நோக்கங்களுக்காகவும், வளர்ச்சிக்கானத் திட்டமிடல் பணிகளை மேற்கொள்வதாகவும் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. வீடு கணக்கெடுப்புப் பணிகள் நடைபெறும் சமயத்தில், கணக்கெடுக்கும் பணியில் ஈடுபவர்களுடன் முழு ஒத்துழைப்பு வழங்குமாறும், இந்த முக்கியத்துவம் வாய்ந்த தேசியப் பணியில் அனைவரும் தீவிரமாகப் பங்கேற்குமாறும் அனைத்துக் குடியிருப்பாளர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

நாடு முழுவதையும் உள்ளடக்கிய முதலாவது விரிவான மக்கள் தொகை கணக்கெடுப்பு, 1881–ம் ஆண்டில், ஒரே சீரான அடிப்படையில் நடத்தப்பட்டது. அதன் பின், ஒவ்வொரு பத்து ஆண்டுகளுக்கும் ஒருமுறை, மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, 1901–ம் ஆண்டில் நடைபெற்ற மக்கள் தொகை கணக்கெடுப்பில், சாதி மற்றும் தொழில் சார்ந்த விரிவான பகுப்பாய்வும், வகைப்பாடும் இடம்பெற்றிருந்தன. நாடு சுதந்திரம் அடைந்த பின் நடைபெற்ற முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு, 1951–ல் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பின் அறிக்கை, அதற்கு முந்தைய மக்கள்தொகை கணக்கெடுப்பு அறிக்கைகள் பின்பற்றியிருந்த முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக அமைந்திருந்தது. இந்திய மக்கள் தொகையின் அளவு மற்றும் கட்டமைப்பில், கடந்த காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்கவும், அத்துடன் மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் அது சார்ந்த விளைவுகளை முன்னிலைப்படுத்தவும் ஒரு முயற்சியாக இது

ஏறத்தாழ **6.40** லட்சம் கிராமப்புறங்களை உள்ளடக்கிய வகையில், இந்த மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும்

## மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027–ன் செயல்பாடு

**36** மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள்

**7,092** துணை மாவட்டங்கள்

**5,128** சட்டரீதியான நகர்ப்பகுதிகள்


**4,580** மக்கள்தொகை கணக்கெடுப்பு நகரங்கள்

மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027, ஏறத்தாழ **6,39,902** கிராமங்களில் நடத்தப்பட உள்ளது.



**80** ஆயிரம் குழுக்களுக்குப் பயிற்சி அளித்தல்

*உலகின் மிகப்பெரிய டிஜிட்டல் மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட அனைத்து களப் பணியாளர்களுக்கும், விரிவான பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.*



**100** தேசியப் பயிற்சியாளர்களுக்கு, நிபுணர்களால் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த தேசியப் பயிற்சியாளர்கள் சுமார் **2,000** முதன்மைப் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளனர்.

இந்த முதன்மைப் பயிற்சியாளர்கள் சுமார் **45,000** களப் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்தக் களப் பயிற்சியாளர்கள், தற்போது

சுமார் **80,000** குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கின்றனர்.

சுமார் **31** லட்சம் கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர் பயிற்சி அளித்துள்ளனர்.

A க

அடிப்படை நிலையில் பணியாற்றும் கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள், உயர் தரமான தரவுகளை சரியான நேரத்தில் சேகரிப்பதை உறுதிசெய்யும் வகையில், பயிற்சி அளிப்பதற்குத் தேவையான அனைத்துப் பொருட்களும், வட்டார மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ளன.

இருந்தது. நாட்டின் பிறப்பு விகிதத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி குறித்த ஒரு வாதத்தையும், இந்த அறிக்கையின் முடிவுகள் முன் வைத்துள்ளன.

இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பு வரலாற்றிலேயே முதல்முறையாக, 1951–ம் ஆண்டு கணக்கெடுப்பின்போது, கள அளவிலான மறுசரிபார்ப்பு மூலம் மக்கள் தொகை எண்ணிக்கையின் துல்லியத் தன்மையை மதிப்பிட ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1971–ம் ஆண்டிலிருந்து, பத்து ஆண்டு இடைவெளியில், நான்கு மக்கள்தொகை கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, 2011–ம் ஆண்டு கணக்கெடுப்பு நடைபெற்றது. தற்போது நடைபெறவிருக்கும் கணக்கெடுப்பிற்கு முந்தைய கணக்கெடுப்பு, 2011–ம் ஆண்டு நடத்தப்பட்டதாகும். 2021–ம் ஆண்டிற்குள், நாடு தனது அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பிற்குத் தயாராகியிருந்தது. 1872–ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடைபெற்று வரும் பத்தாண்டுக்கொரு முறை கணக்கெடுக்கும் மரபை முன்னெடுத்துச் செல்லும் வகையில், இந்தியாவின் 16–வது மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிகளைத் தொடங்குவதற்காக, இம்முறை ஒரு டிஜிட்டல் முயற்சியாக, கணக்கெடுப்பாளர்களும் மேற்பார்வையாளர்களும் மிகுந்த உற்சாகத்துடன் பயிற்சி அமர்வுகளில் கலந்து கொண்டனர். இருப்பினும், மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி தொடங்கத் திட்டமிடப்பட்டிருந்ததற்குச் சரியாக ஒரு வாரத்திற்கு முன்பு, கொடிய கொவிட்–19 பெருந்தொற்று காலத்தில், மத்திய அரசு நாடு தழுவிய ஊரடங்கை அறிவிக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது. இதன் விளைவாக, 2021–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது. 2027–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் வாயிலாக, 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற இலக்கை எட்டும் வகையில், இந்தியா தற்போது முன்னேறிச் செல்கிறது.

**டிஜிட்டல் மக்கள் தொகை கணக்கெடுப்பு: தொழில்நுட்பப் புரட்சியின் ஒரு அடையாளம்.**

உபநிடதங்கள், "तमसो मा ज्योतिर्गमय, मृत्योर्मामृतं गमय" என்று கூறுகின்றன. இதன் பொருள்: "எங்களை இருளிலிருந்து ஒளிக்கு இட்டுச் செல்வாயாக. மரணத்திலிருந்தும், இடர்களிலிருந்தும், அமரத்துவத்திற்கு இட்டுச் செல்வாயாக" என்பதாகும். அறிவுசார் நடவடிக்கையின்றி, அமிர்த கால செயல்பாடுகளை ஒளிரச் செய்ய முடியாது. எனவே, இந்த அமிர்த காலம் என்பது அறிவு, ஆராய்ச்சி, புத்தாக்கம் போன்றவற்றிற்காக அர்ப்பணிக்கப்பட்ட, முக்கியத்துவம் வாய்ந்த காலமாகும். பண்டைய மரபுகள், பாரம்பரியம் ஆகியவற்றில் வலுவாக வேரூன்றியிருக்கும் அதே வேளையில், நவீனத்துவத்தின் எல்லையற்ற வாய்ப்புகளுடன் பரந்து விரிந்திருக்கும் இந்தியாவை உருவாக்குவதே நமது நோக்கமாகும். நமது கலாச்சாரம், நாகரிகம் மற்றும் விழுமியங்களை நாம் உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டும். அதே சமயம், நமது ஆன்மீகத்தையும், பன்முகத்தன்மையையும் பாதுகாத்து வளப்படுத்த வேண்டும். அதே நேரத்தில், தொழில்நுட்பம், உள்கட்டமைப்பு, கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில், கட்டமைப்புக்களை தொடர்ந்து நவீனமாக்க வேண்டும். கடந்த 12 ஆண்டுகளாக, மத்திய அரசு இந்தத் தொலைநோக்குப் பார்வை அடிப்படையில் செயல்பட்டு, மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027-ஐ ஒரு புரட்சிகரமான முயற்சியாக, இந்தியாவில் முதல்முறையாக, முழுமையான டிஜிட்டல் கணக்கெடுப்பாக மாற்றியமைத்துள்ளது. துல்லியமான திட்டமிடல், நிர்ணயிக்கப்பட்ட இலக்குடன் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை எளிதாக்குவதே இதன் முதன்மை நோக்கமாகும். மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027, பல்வேறு கோணங்களில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கையாகப் போற்றப்படுகிறது. இது தொழில்நுட்பப் புத்தாக்கம், டிஜிட்டல் தரவு சேகரிப்பு, மேம்படுத்தப்பட்ட துல்லியம் ஆகியவற்றிற்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கிறது. இதன் மூலம் தரவு சேகரிப்பு நடைமுறை விரைவானதாகவும், வெளிப்படையானதாகவும், பிழையற்றதாகவும் இருப்பதை உறுதி செய்கிறது. செல்பேசி செயலிகள், ஆன்லைன் படிவங்கள் நிகழ்நேர தரவு செயலாக்கம் போன்ற அம்சங்கள், இந்த முயற்சிக்குத் தனித்துவம் வாய்ந்த மேம்பட்டத் தன்மையை அளிக்கின்றன. மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, இனி வெறும் காகிதப் பதிவுகளுக்குள் மட்டும் அடங்கிவிடாது. மாறாக, ஒவ்வொரு தகவலும், டிஜிட்டல் ஊடகங்கள் மூலம் பாதுகாப்பாகவும், உடனடியாகவும், பயன்படுத்தும் நிலையில் இருக்கும். இது கணிசமான அளவு நேரத்தை சேமிப்பதற்கு வழிவகுப்பதுடன், அதிக வெளிப்படைத்தன்மை, நம்பகத்தன்மை ஆகியவற்றையும் உறுதி செய்யும். பிரதமர் நரேந்திர மோடி தலைமையில், மத்திய அரசு "தரவு சார்ந்த நிர்வாகம்" என்ற முன்மாதிரியான செயல்பாடுகளை நோக்கி, ஆட்சியை நடத்தி வருகிறது. "அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம், அனைவரின் நம்பிக்கை, அனைவரின் முயற்சி" "குறைந்தபட்ச அரசு, அதிகபட்ச நிர்வாகம்" என்ற

## அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதிசெய்யும் சாதிவாரிக் கணக்கெடுப்பு

*சமூக நீதியை நனவாக்குவதற்கும், அடிப்படை நிலையில் கொள்கைத் திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதற்கும், சாதிவாரிக் கணக்கெடுப்பு முக்கியமானது. இது உண்மையான சமூக-பொருளாதார சூழலைப் புரிந்துகொள்ள உதவுவதுடன், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியையும் உறுதி செய்யும். மேலும், இது சம அளவிலான வாய்ப்புகளை வழங்கும் வகையில் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் வகை செய்கிறது...*

### ஏப்ரல் 30, 2025

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசியல் விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் போது, சாதிவாரி கணக்கெடுப்பைச் சேர்க்க முடிவு செய்தது.

### ஜூன் 16, 2025

மத்திய உள்துறை அமைச்சகம், 2027-ம் ஆண்டிற்கான மக்கள்தொகைக் கணக்கெடுப்பு குறித்த அறிவிப்பை அதிகாரபூர்வமாக வெளியிட்டது.

- நாடு சுதந்திரம் அடைந்த பின் முதல்முறையாக, 2027-ம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில், அனைத்து சமூகத்தினருக்குமான சாதிவாரி கணக்கெடுப்பு இடம்பெறும்.
- சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாக்கும் வகையில், சாதிவாரி கணக்கெடுப்பை ஒரு தனி கணக்கெடுப்பாக நடத்தாமல், முதன்மையான பிரதான மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன் இணைத்தே நடத்த முடிவு செய்யப்பட்டது.
- ஒவ்வொரு குடும்ப உறுப்பினரின் சாதி குறித்த விரிவான தகவல்கள், இறுதியாக, 1931-ம் ஆண்டில், சேகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டன.




2011-ம் ஆண்டின் சமூக-பொருளாதார மற்றும் சாதிவாரிக் கணக்கெடுப்பைத் தொடர்ந்து, சாதி தொடர்பான புள்ளிவிவரங்களைத் தவிர்த்து, இதர அனைத்துத் தரவுகளும் வெளியிடப்பட்டன.











“மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகள் இரண்டு கட்டங்களாக நடத்தப்படுகிறது. முதல் கட்டமாக, வீடுகளைக் கணக்கெடுக்கும் பணிகளும், அடுத்த கட்டமாக, தனிநபர்களைக் கணக்கெடுக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும். தற்போது நடைபெற்று வரும் முதற்கட்டப் பணிகளில், வீடுகள் கணக்கிடப்படுகின்றன. வீடுகளுக்குச் சாதி என்பது இல்லாததால், இக்கட்டத்தில் வழங்கப்படும் படிவத்தில் சாதி குறித்த விவரங்களைப் பதிவு செய்வதற்கான பகுதி இடம் பெறவில்லை. சாதிவாரி கணக்கெடுப்பு குறித்த கேள்விகள், அடுத்த கட்டமாக நடைபெறும் கணக்கெடுப்புப் பணியில், அதாவது தனிநபர்கள் கணக்கிடப்படும் போது, எழுப்பப்படும்.

– அமித் ஷா, மத்திய உள்துறை அமைச்சர்

உணர்வை நனவாக்க துல்லியமான நம்பகமான தரவுகள் இன்றியமையாதவை. இவை வெறும் முழக்கங்களாக இல்லாமல், கொள்கை உருவாக்கத்தின் அடித்தளமாகவே மாறிவிட்டன.

இந்த 'மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027' பணிகள் மிக முக்கியத்துவம் வாய்ந்த பணியாகத் திகழ்கிறது. எந்தெந்தத் துறைகள் வளர்ச்சி அடைந்துள்ளன என்பதையும், எந்தெந்தப் பகுதிகளுக்கு சிறப்புக் கவனமும் மற்றும் நலத் திட்டங்களும் தேவைப்படுகிறது போன்ற தரவுகளைத் துல்லியமாக அடையாளம் காண்பதற்கும், அரசுக்கு இது அவசியமாகிறது. 2011–ம் ஆண்டு நடத்தப்பட்டக் கணக்கெடுப்பிற்குப் பின், நீண்டகால இடைவெளியில் நடத்தப்படும் 'மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027', ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கமாக அமைகிறது. இது வெறும் கால இடைவெளியை நிரப்புவது மட்டுமின்றி, ஒரு 'புதிய இந்தியா'வின் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்குகிறது. தற்சார்புள்ள வலுவான மற்றும் டிஜிட்டல் உலகின் முன்னணி நாடாக திகழும் வகையில், முன்னேற்றப் பாதையில் புதிய இந்தியா விரைந்து சென்றுகொண்டிருக்கிறது. தரவுகள் என்பவை இனி வெறும்

புள்ளிவிவரங்களாக மட்டும் சுருங்கி விடாமல், வளர்ச்சிக்கான நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும் வழிகாட்டும் நெறிமுறைகளாகப் பரிணமித்துள்ளன. இதன் விளைவாக, டிஜிட்டல் புரட்சியின் பின்னணியில், மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைமுறைகளின் மாற்றத்திலும், 'மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027' பணிகள், 'டிஜிட்டல் இந்தியா' சகாப்தத்திற்குள் நிகழ்ந்துள்ள ஒரு தொழில்நுட்பப் புரட்சியின் அடையாளமாக உயர்ந்து நிற்கிறது.

இந்த மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணியில் பயன்படுத்தப்படும் டிஜிட்டல் கருவிகள், உயர்நிலையிலான தரவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், வலுவான குறியீடு உருவாக்க அமைப்புகள் மற்றும் பல்லடுக்கு அங்கீகார வழிமுறைகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. முழுமையான கணக்கெடுப்புப் பணிகளுக்கான நடைமுறையையும் நிகழ்நேரத்தில் நிர்வகிக்கவும், கண்காணிக்கவும், 'மக்கள் தொகை கணக்கெடுப்பு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு' என்ற தனித்த இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. தரவுப் பாதுகாப்பிற்கும், இதில் உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

## சமூக நல்லிணக்கம்: இந்தியாவின் முதல் சாதிவாரி கணக்கெடுப்பு

நாடு சுதந்திரம் அடைந்த பின், இந்தியாவில் முதல்முறையாக, 2027–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பில், அனைத்து சமூகங்களின் சாதிவாரியான விவரங்களும் சேர்க்கப்படவுள்ளன. நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து, இதுவரை நடத்தப்பட்ட அனைத்து மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகளிலிருந்தும், சாதி குறித்த விவரங்கள் விலக்கி வைக்கப்பட்டிருந்தன. சில மாநிலங்கள் தனித்தனியாக சாதிவாரி கணக்கெடுப்பை நடத்தியுள்ளன. ஆனால், அவை வெளிப்படைத்தன்மை மற்றும் நோக்கங்களில் மாறுபட்ட அளவில் நடத்தப்பட்டதால், அரசியல்மயமாக்கப்படுவதாக கருத்துகள் எழுந்தன. எனவே, சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாக்கும் வகையில், சாதிவாரி கணக்கெடுப்பை ஒரு தனி கணக்கெடுப்பாக நடத்தாமல், முதன்மையான மக்கள் தொகை கணக்கெடுப்புடன் இணைத்தே நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அனைத்து சமூகங்களின் சாதிவாரி விவரங்களும், இந்த மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சேர்த்தே சேகரிக்கப்படும். இதற்கென, அரசியல் விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு, 2025 ஏப்ரல் 30 அன்று நடைபெற்ற கூட்டத்தில், மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகளின் போது, குறிப்பாக 2027–ம் ஆண்டின் கணக்கெடுப்பில், சாதிவாரியான விவரங்களைச் சேர்க்க முடிவு செய்யப்பட்டது. நாட்டின் பரந்த சமூக மற்றும் மக்கள்தொகையியல் பன்முகத்தன்மையையும், அதனுடன் தொடர்புடைய சவால்களையும் கருத்தில் கொண்டு, 2027 மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணியின் இரண்டாம் கட்டத்தில், 'மக்கள் தொகை விவரங்களை சேகரிக்கும் பணிகளின்போது', சாதிவாரியான தரவுகள் மின்னணு முறையில் சேகரிக்கப்படும். இந்த இரண்டாம்கட்ட மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகளுக்காக வெளியிடப்படும் கேள்விகள் அடங்கியப் பட்டியலி, சாதி தொடர்பான கேள்விகளும் இடம் பெறும்.

## வளர்ச்சியடைந்த இந்தியாவின் இலக்குகளை எட்டும் நடவடிக்கைகளுக்கு அடித்தளம்

2027 மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகளுக்கான அடையாளமாக, "பிரகதி" (பெண் கணக்கெடுப்பாளர்) மற்றும் "விகாஸ்" (ஆண் கணக்கெடுப்பாளர்) ஆகியோர், நட்புணர்வு மிக்க மற்றும் எளிதில் அணுகக்கூடிய

## 2027 மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கைகள்:

'அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம், அனைவரின் நம்பிக்கை, அனைவரின் முயற்சி.



### அனைவரும் இணைவோம்:

மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணி என்பது 'மத்தியப் பட்டியலில்' இடம்பெற்றுள்ள ஒரு துறையாகும். இதில் மத்திய, மாநில அரசுகளின் முழுமையான நிர்வாக அமைப்புகளும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. இந்த முழு நடைமுறையின் போது, பிழையற்ற தரவுகள் சேகரிக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில், இந்தியக் குழு அனைவரும் இணைவோம் என்ற உணர்வுடன் செயல்படுகிறது.

### அனைவரும் உயர்வோம்

இந்த மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணியின் போது சேகரிக்கப்படும் தரவுகளில், சாதி அடிப்படையிலான விவரங்களும் இணைக்கப்பட்டுள்ளன. சமூகத்தின் பின்தங்கிய அல்லது விளிம்புநிலை பிரிவுகள் குறித்த புள்ளிவிவரங்களை வெளிக்கொண்டு வருவதே இந்த முன்முயற்சியின் நோக்கமாகும். இதன் மூலம், அனைவருக்கும் பயனளிக்கும் வகையிலான வளர்ச்சித் திட்டங்களை வகுப்பதும், செயல்படுத்துவதும் எளிதாக்கப்படுகிறது.

### அனைவரின் நம்பிக்கை

மக்கள்தொகை கணக்கெடுப்பு கட்டமைப்பிற்குள் தரவுப் பாதுகாப்பு என்பது, சாமானிய மக்களின் நம்பிக்கை சற்றும் குலையாத வகையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணியின் போது, பொதுமக்கள் வழங்கும் எந்தவொரு தகவலும் முழு நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதுவே முழுமையான தரவாக இருக்கும் என்றும் கருதப்படுகிறது. இதுவே அனைவரது நம்பிக்கை என்ற உணர்வை முழுமையாகப் பிரதிபலித்து நிலைநிறுத்துகிறது. மேலும், இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ள டிஜிட்டல் மக்கள்தொகை கணக்கெடுப்பு முறையின் காரணமாக, சேகரிக்கப்படும் தரவுகள் மிகத் துல்லியமானவையாகவும், மிக விரைவாகக் கிடைக்கக் கூடியவையாகவும் அமையும்.

### அனைவரின் முயற்சி

மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணி தற்போது நாடு தழுவிய மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது. மக்கள் தாங்களே முன்வந்து தங்களது விவரங்களைப் பதிவு செய்துகொள்ளும் வாய்ப்பு வழங்கப்படுவது இதுவே முதல் முறையாகும். அதேபோல், இது தொடர்பாக விரிவான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளன. இந்தக் கூட்டு முயற்சியே, அதாவது 'அனைவரது முயற்சி' என்ற உணர்வே, 'வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கு மிக அடிப்படையான அடித்தளமாகத் திகழ்கிறது.



## அச்சம் வேண்டாம். உண்மையை தெரிந்துகொள்வோம்!

நமது பொறுப்பை நிறைவேற்றுவோம்; மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் பங்கேற்போம்.

**கற்பிதம்:** கணக்கெடுப்பாளர்கள் ஒடிபி எனப்படும் ஒருமுறை பயன்படுத்தப்படும் கடவுச்சொல் மற்றும் வங்கி விவரங்களைக் கேட்பார்கள்.

**உண்மை:** நீங்கள் எந்தவொரு கணக்கெடுப்புப் பணியாளரிடமும் ஒடிபி எனப்படும் ஒருமுறை பயன்படுத்தப்படும் கடவுச்சொல்லை வழங்கவோ அல்லது ஆவணங்களைச் சமர்ப்பிக்கவோ தேவையில்லை.

**கற்பிதம்:** உங்கள் தரவுகள் வரி விதிப்பு அல்லது புலனாய்வு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும்.

**உண்மை:** உங்கள் தரவுகள் முற்றிலும் ரகசியமானவை. அவை திட்டமிடல், கொள்கை வகுத்தல் போன்ற நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும்.

**கற்பிதம்:** மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அரசு நலத்திட்டப் பலன்களில், எதிர்மறையான பாதிப்பை உங்களுக்கு ஏற்படுத்தலாம்.

**உண்மை:** உங்கள் பயனாளர் தகுதியில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

**கற்பிதம்:** மக்கள்தொகைக் கணக்கெடுப்பிற்காக நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கலாம்.

**உண்மை:** மக்கள்தொகைக் கணக்கெடுப்பு முற்றிலும் இலவசமானது. வீட்டுப்பட்டியல் கணக்கெடுப்புப் பணிகள் அல்லது சுய-கணக்கெடுப்புப் பணிகளுக்கு எவ்விதக் கட்டணமும்

**கற்பிதம்:** யார் வேண்டுமானாலும் கணக்கெடுப்பாளர் போல நடித்து விவரங்களை சேகரிக்க வரலாம்.

**உண்மை:** சரிபார்ப்பிற்கான கியூஆர் குறியீட்டைக் கொண்ட அவர்களின் அதிகாரபூர்வ அடையாள அட்டையைப் பயன்படுத்தி, நீங்கள் எப்போது வேண்டுமானாலும், அவர்களின் அடையாளத்தைச் சரிபார்க்கலாம்.



**மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் பணியின் போது வழங்கப்படும் தனிப்பட்ட தரவுகளின் ரகசியம் மிகக் கடுமையான முறையில் பாதுகாக்கப்படுகின்றன. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், இந்த விவரங்களைப் பகிர இயலாது என்பதுடன், நீதிமன்றத்தில் சாட்சியமாகப் பயன்படுத்தவும் இயலாது. மேலும், எந்தவொரு அதிகார அமைப்பும் இந்தத் தனிப்பட்ட தரவுகளை, தனிநபர்கள் சார்ந்த குறிப்பிட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவதில்லை. இவை புள்ளிவிவரத் தொகுப்பு நோக்கங்களுக்காக மட்டுமே தனித்துவமாகப் பயன்படுத்தப்படுகின்றன.**

***மிருத்யுஞ்சய் குமார் நரேன்***

*(இந்திய தலைமைப் பதிவாளர் மற்றும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆணையர்)*

*2027-ம் ஆண்டிற்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணிகள் குறித்த செய்தியாளர் சந்திப்பைக் காண, இந்த கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.*

அடையாளங்களாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளனர். "பிரகதி" (முன்னேற்றம்) மற்றும் "விகாஸ்" (வளர்ச்சி) ஆகிய சொற்கள், 2047-ம் ஆண்டிற்குள், இந்தியாவை ஒரு வளர்ச்சியடைந்த நாடாக உருவெடுக்கச் செய்யும் உறுதியான நிலைப்பாட்டை நிறைவேற்றுவதில், ஆண்-பெண் ஆகிய இருபாலருக்கும் இடையேயான சம அளவிலான பங்கேற்பைக் குறிக்கும் வகையில் அமைந்துள்ளன. 2047-க்குள், இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக உருவெடுக்கச் செய்யும் இலக்கு என்பது, நாடு சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகள் நிறைவடையும் ஆண்டுடன் ஒன்றிணைகிறது. 'அமிர்தப் பெருவிழா' ஆண்டில் தொடங்கிய இந்தப் பயணம் முழுமையும், 'அமிர்த காலம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. எனவே, 2027-ம் ஆண்டிற்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது வெறுமனே மக்களின் எண்ணிக்கைகளை கணக்கெடுக்கும் பணியாக மட்டுமின்றி, 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற இலக்கை எட்டுவதற்கான நடைமுறையை வகுப்பதற்கு ஒரு வலுவான அடித்தளமாக அமைகிறது. இந்த இலக்கை எட்டுவதற்குத் துல்லியமான தரவுகளும், வலுவான கொள்கைகளும் மிக அவசியமானவையாகும். இது துல்லியமான திட்டமிடல் மற்றும் கொள்கை வகுத்தல் நடவடிக்கைகளை எளிதாக்குவது மட்டுமின்றி, வளங்களின் சமமான விநியோகம், உள்கட்டமைப்பு மேம்பாடு, சமூகப் பொருளாதார சமத்துவம், போன்ற அம்சங்களிலும் ஒரு முக்கியப்



“

சமூக நீதிக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள மோடி தலைமையிலான மத்திய அரசு, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவை எடுத்துள்ளது. பிரதமர் மோடி தலைமையில், 2025 ஏப்ரல் 30 அன்று நடைபெற்ற அரசியல் விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடைபெறும் போது, சாதிவாரிக் கணக்கெடுப்பைச் சேர்ப்பதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது. இது சமூக சமத்துவம் மற்றும் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரின் உரிமைகள் மீது அரசின் உறுதியான நிலைப்பாட்டை உணர்த்தும் ஒரு வலுவான செய்தியாக அமைந்துள்ளது.

*– அமித் ஷா, மத்திய உள்துறை அமைச்சர்*

பங்கு வகிக்கிறது.

'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற இலக்கை எட்டுவதில், தொழில்நுட்பம் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்தச் சூழலில், டிஜிட்டல் முறையில் மேற்கொள்ளப்படும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் மூலம் பெறப்படும் தரவுகள், மிக விரைவாகவும், அதே சமயம் அதிகத் துல்லியத்துடனும் இருக்கும். இது திட்டங்களை வகுப்பதில், மத்திய அரசிற்குப் பெரும் உதவியாக இருக்கும். எனவே, 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற கனவை நனவாக்குவதில், 2027–ம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் பணி ஓர் அடித்தளமாகத் திகழும் என்பது தெளிவாகிறது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உத்திசார் நடவடிக்கையாக இது அமையும். எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி, மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் பணி என்பது, நிர்வாகத்தின் ஒரு இன்றியமையாத கருவியாகும். இது அடுத்து வரும் பத்தாண்டுகளுக்கு, இந்தியாவின் வளர்ச்சித் திட்டங்களை வகுப்பதற்குத் தேவையான அடித்தளத்தை அமைக்க உதவும். ஆகையால், 2027–ம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் பணி என்பது வெறும் புள்ளிவிவரங்களின் தொகுப்பாக மட்டுமின்றி, நாட்டைக் கட்டமைக்கும் நடைமுறையின் ஒரு முக்கிய நடவடிக்கையாக இருக்கும். இது அரசுக்கும், சமூகத்திற்கும் இடையே, ஒரு பாலமாகச் செயல்படுகிறது. இதன் விளைவாக, 2027–ம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் பணியை, ஒரு நிர்வாகச் செயல்பாடாக சுருக்கிவிட முடியாது. மாறாக, இது ஒரு மக்கள் இயக்கமாகும். ஒவ்வொரு குடிமகனின் பங்கேற்பும் இன்றியமையாததாகக் கருதப்படும் ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாகும். எனவே, துல்லியமான தகவல்களை வழங்குவதன் மூலமும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும், இந்தத் தேசியப் பணியில் தங்களது பங்களிப்பைச் செலுத்துவது, மக்களின் கடமையாகும். இதில் பொதுமக்கள் பங்கேற்பதன் மூலம் ஒரு வலுவான, வளமான, தற்சார்புடைய இந்தியாவைக் கட்டமைக்கும் அடித்தளமாக அமைவதை அவர்கள் உறுதிசெய்ய வேண்டும்.




# கங்கை விரைவுச்சாலை

## புதிய கனவுகளுக்கும் வாய்ப்புகளுக்குமான நுழைவாயில்

*பிரதமர் நரேந்திர மோடி 2026 ஏப்ரல் 28, 29 ஆகிய தேதிகளில் உத்தரப் பிரதேசத்திற்கு மேற்கொண்ட பயணம், கலாச்சார, ஆன்மீக, வளர்ச்சி சார்ந்த அர்ப்பணிப்பின் உயிரோட்டமான அடையாளமாகத் திகழ்ந்தது. உலகின் மிகப் பழமையான நகரங்களில் ஒன்றாகக் கருதப்படும் வாரணாசி, தற்போது நவீன வளர்ச்சியுடன் பாரம்பரியப் பெருமைகள் கலந்த ஒரு தனித்துவமான சங்கமத்தை நோக்கி முன்னேறி வருகிறது. வளர்ச்சியும் பாரம்பரியமும் என்ற இந்தத் தொலைநோக்குப் பார்வையுடன், பிரதமர் நரேந்திர மோடி காசி விஸ்வநாதர் ஆலயத்தில் பிரார்த்தனை செய்ததுடன், கங்கை விரைவுச்சாலை உட்பட பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்தார்.*

ஒரு காலத்தில் உத்தரப் பிரதேசம் ஒரு பின்தங்கிய மாநிலமாகக் கருதப்பட்டது. ஆயினும், அதே உத்தரப் பிரதேசம் இப்போது 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாறும் நோக்கத்துடன் முன்னேறி வருகிறது. இது ஒரு மகத்தான இலக்கு. இந்த இலக்கை அடைவதற்கான உள்ளார்ந்த ஆற்றல் உத்தரப் பிரதேசத்திடம் உள்ளது. உள்கட்டமைப்பு மேம்பாடு முதல் உற்பத்தி மையங்களை உருவாக்குவது வரை இங்கு குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முக்கிய பெருநிறுவனங்கள் முதலீடு செய்வதற்காக இந்த மாநிலத்திற்கு வருகின்றன. இந்தப்போக்கு, முன்னேற்றத்தின் வேகத்தை அதிகரித்து, இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது. நவீன முன்னேற்றம் ஏற்பட்டு வரும் இந்தக் கால கட்டத்தில், கங்கை விரைவுச்சாலை உத்தரப் பிரதேசத்தின் வளர்ச்சிக்குப் புதிய உயிர்நாடியாக அமைய உள்ளது. பிரதமர் நரேந்திர மோடி, பேசுகையில் உத்தரப் பிரதேச அரசு இந்தத் திட்டத்தை முன்னெடுத்திருப்பது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாகக் குறிப்பிட்டார். இந்த விரைவுச் சாலைக்கு கங்கை அன்னையின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தத் தேர்வு, வளர்ச்சிக்கான ஒரு தொலைநோக்குப் பார்வையையும், பாரம்பரியத்தின் மீதான மரியாதையையும் பிரதிபலிக்கிறது.

தமது அரசு அடிக்கல் நாட்டிய திட்டங்களைத் தாமே தொடங்கி வைப்பதாக பிரதமர் நரேந்திர மோடி அடிக்கடி கூறுவார். கங்கை விரைவுச்சாலை இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. டிசம்பர் 2021-ல், பிரதமர் நரேந்திர மோடி ஷாஜஹான்பூரில் இந்த விரைவுச்சாலைக்கு அடிக்கல் நாட்டினார். ஐந்து ஆண்டுகளுக்குள், 2026 ஏப்ரல் 29 அன்று, இது ஹர்தோயில் திறந்து வைக்கப்பட்டது. கங்கை விரைவுச்சாலையின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், அதன் விரிவாக்கப் பணிகளும் தொடங்கியுள்ளன. விரைவில், கங்கை விரைவுச்சாலை மீரட்டைத் தாண்டி ஹரித்வார் வரை நீட்டிக்கப்படும். அதன் கூடுதல் பயன்பாட்டிற்காக, ஃபரூக்காபாத் இணைப்பு விரைவுச்சாலை அமைக்கப்பட்டு, மற்ற விரைவுச்சாலைகளுடன் இணைக்கப்படும்.



பிரதமர் பங்கேற்ற நிகழ்ச்சியை முழுமையாகக் காண இந்த க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.




**"காசி மக்களவைத் தொகுதி உறுப்பினர் என்ற முறையில்... நாட்டின் பிரதமர் என்ற முறையில்... ஒரு மாபெரும் தேசிய இலக்கை அடைவதற்கு உங்கள் ஆசிகளை நாடுகிறேன்... அந்த மாபெரும் இலக்கு, மக்களவையிலும் மாநில சட்டப் பேரவைகளிலும் பெண்களுக்கு இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்துவதே ஆகும்."**

*–நரேந்திர மோடி, பிரதமர்*

# மகளிர் சக்தி : வளர்ச்சியடைந்த இந்தியாவின் வலிமையான தூண்

வாரணாசியில் நடைபெற்ற ஒரு மாநாட்டில், பெருந்திரளான பெண்கள் மத்தியில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். தேசத்தைக் கட்டமைப்பதில் பெண்கள் ஆற்றிவரும் முக்கியப் பங்கினை எடுத்துரைத்த பிரதமர், மகளிர் சக்தியை வளர்ச்சியடைந்த இந்தியாவின் வலிமையான தூண் என வர்ணித்தார். மக்களவையிலும் மாநில சட்டப் பேரவைளிலும் பெண்களுக்கு இட ஒதுக்கீட்டை அமல்படுத்தும் முக்கிய தேசிய இலக்கை அடைவதற்கு, அங்கு கூடியிருந்தவர்களின் ஆசிகளை வேண்டுவதாகப் பிரதமர் நரேந்திர மோடி கூறினார். மேலும், இந்த இட ஒதுக்கீட்டு உரிமையை நனவாக்குவதற்குத் தன்னால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் செய்யப்போவதாகவும் அவர்களிடம் பிரதமர் உறுதியளித்தார். மகளிர் மாநாடு நடைபெற்ற அந்த மேடையிலேயே, சுமார் 6,350 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைப் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், ஒரு குடும்பத்தில் பெண் அதிகாரம் பெறும்போது, அந்தக் குடும்பம் முழுவதுமே வலிமை பெறுகிறது என்றும், அதன் விளைவாக, சமூகமும் தேசமும் வலுப்பெறுகின்றன என்றும் குறிப்பிட்டார். 25 ஆண்டுகளுக்கு முன், தாம் குஜராத் முதலமைச்சராகப் பதவியேற்றபோது, சிறுமிகளுக்காக இரண்டு முன்னோடித் திட்டங்கள் தொடங்கப்பட்டதை நினைவு கூர்ந்தார். முதலாவது, அதிகபட்ச சிறுமிகள் பள்ளிக்குச் சென்று தங்கள் கல்வியை நிறைவு செய்வதை உறுதி செய்வதற்கான சிறப்பு சேர்க்கைத் திட்டம் என்றும் இரண்டாவது, அவர்களின் கல்விச் செலவுகளுக்கு நிதியுதவி வழங்குவதற்கான, பெண் குழந்தைகளுக்கான முதலமைச்சரின் கல்வி நிதித் திட்டம் என்றும் அவர் தெரிவித்தார். அப்போது முதல் இப்போது வரை, எங்களது அரசின் கொள்கைகளில் பெண்களின் நலனுக்குத் தொடர்ந்து மிக உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது என்று பிரதமர் கூறினார்.

பொருளாதார மேம்பாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய பிரதமர் நரேந்திர மோடி, பெண்களின் பொருளாதார சக்தி வளரும்போது, குடும்பத்தில் அவர்களின் குரலும் அதே அளவு வலுப்பெறும் என்று கூறினார். கடந்த 11 ஆண்டுகளில், காசியைச் சேர்ந்த சுமார் 1,25,000 சகோதரிகள் உட்பட, ஏறத்தாழ 10 கோடி பெண்கள், சுய உதவிக் குழுக்களுடன் இணைக்கப்பட்டுள்ளனர். இந்த முயற்சிகளின் மூலம், வாரணாசியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான சகோதரிகள் உட்பட, இதுவரை 3 கோடி சகோதரிகள் லட்சாதிபதி சகோதரிகளாக மாறியுள்ளனர்.

## பனாரஸுக்குப் பரிசு

**₹1,050** கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்புள்ள 48 திட்டங்கள் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டன.

- வாரணாசி–அசம்கர் சாலை விரிவாக்கம்.
- கஸ்ஸக்புராவிலும் காதிபூரிலும் ரயில்வே மேம்பாலங்கள்.
- பகவான்பூரில் நாளொன்றுக்கு 55 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்.

## இரண்டு புதிய அம்ரித் பாரத் விரைவு ரயில்கள் கொடியசைத்துத் தொடங்கி வைக்கப்பட்டன

- இரண்டு புதிய அம்ரித் பாரத் விரைவு ரயில்கள் தொடங்கி வைக்கப்பட்டன: பனாரஸ்–புனே (ஹடப்சர்), அயோத்தி–மும்பை (லோகமான்ய திலக் முனையம்) ஆகியவை அந்த ரயில்கள். இவை உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா இடையேயான இணைப்பை மேம்படுத்தும்.
- பனாரஸ்–புனே இடையேயான சேவை காசி விஸ்வநாதர் ஆலயத்துக்கு எளிதாகச் செல்ல வழிவகுக்கும் அதே வேளையில், அயோத்யா–மும்பை சேவை ஸ்ரீ ராமர் ஆலய புனிதத் தலத்துக்கான போக்குவரத்து இணைப்பை மேம்படுத்தி, முக்கிய மதத் தலங்களுக்கு இடையேயான தொடர்புகளை வலுப்படுத்தும்.

**அடிக்கல் நாட்டுதல்:** வாரணாசி சந்திப்பு–பண்டிட் தீன் தயாள் உபாத்யாயா சந்திப்பு 3–வது, 4வது ரயில் பாதை வழித்தடத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. கங்கை நதியின் மீது ரயில் பாலமும் சாலைப் பாலமும் கட்டப்படுகிறது. இது காசி விஸ்வநாதர் ஆலயம், ராம்நகர் பகுதி, தேசிய நெடுஞ்சாலை–19 ஆகியவற்றுக்கான போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துவதோடு, கிழக்கு உத்தரப் பிரதேசத்துடனும், பீகாருடனுமான ரயில் போக்குவரத்து இணைப்பையும் வலுப்படுத்தும்.




காசி விஸ்வநாதர் ஆலயத்தில் பிரதமர் நரேந்திர மோடி.

இந்த விரைவுச்சாலை வெறும் அதிவேகச் சாலை மட்டுமல்ல எனவும் இது புதிய சாத்தியக்கூறுகள், புதிய கனவுகள், புதிய வாய்ப்புகள் ஆகியவற்றுக்கான நுழைவாயில் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

கங்கை விரைவுச்சாலை உத்தரப்பிரதேசத்தின் ஒரு பகுதியை மற்றொரு பகுதியுடன் இணைப்பது மட்டுமின்றி, தேசிய தலைநகர் பிராந்தியத்தின் மகத்தான ஆற்றலையும் நெருக்கமாக வெளிக் கொண்டுவரும். கங்கை விரைவுச்சாலையில் வாகனங்கள் செல்வது மட்டுமின்றி, கங்கை கரைகளில் புதிய தொழில் வாய்ப்புகளும் உருவாகும். ஹர்தோய் போன்ற பிற மாவட்டங்களில் தொழில் வழித்தடங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இது ஹர்தோய், ஷாஜஹான்பூர், உன்னாவோ உள்ளிட்ட 12 மாவட்டங்களுக்குப் புதிய தொழில்களைக் கொண்டுவரும். மருந்து, ஜவுளி போன்ற பல்வேறு துறைகளில் தொழில் வழித்தட தொகுப்புகள் உருவாகும்.

## தொழில்துறை வளர்ச்சி

உத்தரப் பிரதேசத்தின் தொழில்துறை வளர்ச்சி, இந்தியாவின் உத்திசார் பலமாக மாறி வருகிறது. நாட்டின் இரண்டு பாதுகாப்புத் துறை தொழில் வழித்தடங்களில் ஒன்று உத்தரப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. முக்கியப் பாதுகாப்புத் தொழில் நிறுவனங்கள் இங்கு தொழிற்சாலைகளை அமைத்து வருகின்றன. உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட பிரம்மோஸ் போன்ற ஏவுகணைகள் உத்தரப் பிரதேசத்தில் தயாரிக்கப்படுகின்றன. பாதுகாப்பு உபகரணங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான சிறு பாகங்களை குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

## வளர்ச்சிக்கான நெடுஞ்சாலை

### கங்கை விரைவுச்சாலை விவசாயிகளை மேம்படுத்தி, வேலைவாய்ப்பை விரிவுபடுத்தும்

**₹36,230** ஹர்தோய் மாவட்டத்தில் 36,230 கோடி ரூபாய் மதிப்பிலான கங்கை விரைவுச்சாலை திறக்கப்பட்டது

- 594 கிலோமீட்டர் நீளமுள்ள இந்த 6 வழி விரைவுச்சாலையை 8 வழிச்சாலையாக விரிவுபடுத்த முடியும்.
- மீரட், புலந்த்ஷஹர், ஹாபூர், அம்ரோஹா, சம்பல், படான், ஷாஜஹான்பூர், ஹர்தோய், உன்னாவ், ரேபரேலி, பிரதாப்கர், பிரயாக்ராஜ் ஆகிய 12 மாவட்டங்கள் வழியாக இந்த விரைவுச் சாலை செல்கிறது.
- இந்த 12 மாவட்டங்களுக்குள் சுமார் 2,635 ஹெக்டேரில் ஓர் ஒருங்கிணைந்த பொருள் உற்பத்தி மற்றும் சரக்குப் போக்குவரத்து வழித்தடம் உருவாக்கப்படும்.
- விவசாயிகள் நகர்ப்புற பகுதிகளையும், ஏற்றுமதி சந்தைகளையும் நேரடியாக அணுக முடியும் என்பதோடு, தங்களின் விளைபொருட்களுக்குச் சிறந்த விலையையும் பெறுவார்கள்.
- இப்பகுதி முழுவதும் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான புதிய பொருளாதார வாய்ப்புகள் ஏற்படும்.
- இந்த விரைவுச்சாலை பயன்பாட்டிற்கு வருவதால், மீரட் – பிரயாக்ராஜ் இடையேயான தற்போதைய பயண நேரம் 10 முதல் 12 மணி நேரம் என்பதிலிருந்து சுமார் 6 மணி நேரமாகக் குறையும்.
- ஷாஜஹான்பூர் மாவட்டத்தில் உள்ள இந்த விரைவுச்சாலையில் 3.5 கிலோமீட்டர் நீளமுள்ள அவசரகால தரையிறங்கும் வசதி (விமான ஓடுபாதை) அமைக்கப்பட்டுள்ளது.



### 5,300 கோடி ரூபாய் மதிப்பிலான 112-க்கும் அதிகமான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது

- அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் 13 கழிவுநீர் திட்டங்களுக்கும் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டப்பட்டது.
- ஸ்ரீ சிவ பிரசாத் குப்தா மாவட்ட மருத்துவமனையில் 500 படுக்கைகள் கொண்ட பல்நோக்கு சிறப்பு மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
- போஜுவீர், சிக்ரா ஆகிய இடங்களில் சந்தை வளாகங்கள், அலுவலகங்கள் ஆகியவை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, குளங்களைப் புனரமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டன.
- 198 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை புனரமைப்புப் பணிகள், 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டடத்தின் கட்டுமானம் ஆகியவை தொடங்கப்பட்டன.
- அஸ்ஸி படித்துறை, தசாஸ்வமேத் படித்துறை, நமோ படித்துறை உள்ளிட்ட முக்கிய படித்துறைகளில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்டன. மாநகராட்சி அலுவலகக் கட்டடம், அரசு குழந்தைகள் காப்பகம், சிறார் நீதி வாரியக் கட்டடம் ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

### சமூக நலத் திட்டங்களின் தொடக்கம்

- ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் 30 கிராமப்புற குடிநீர் திட்டங்கள்.
- சந்திராவதி படித்துறையின் மறுசீரமைப்பு. சாரநாத் அருகே உள்ள சாரங்கநாத் கோவிலில் சுற்றுலா மேம்பாடு.
- மத்திய திபெத்திய பல்கலைக்கழகத்தில் சோவா ரிக்பா கட்டடம், மருத்துவமனை ஆகியவற்றின் திறப்பு விழா.




# உலகளாவிய சுற்றுலா, கலாச்சாரம் ஆகியவற்றின் மையமாக வடகிழக்குப் பகுதி உருவெடுக்கிறது

தற்காலத்தில், வடகிழக்குப் பகுதி என்பது வலுவான, பிற பகுதிகளுடன் இணைக்கப்பட்ட, எதிர்காலத்திற்குத் தயாரான பகுதியாக, புதிய இந்தியாவின் சாராம்சத்தை உள்ளடக்கியுள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையால் உத்வேகம் பெற்று, இப்பகுதி எல்லைப்புற மண்டலம் என்பதில் இருந்து, தன்னம்பிக்கை, போட்டித்திறன் ஆகிய இரண்டின் அடையாளமாகத் திகழும் முன்னணி வளர்ச்சி இயந்திரமாக உருமாறியுள்ளது. உள்கட்டமைப்பு, முதலீடு, ஆளுகை, இளைஞர் ஈடுபாடு போன்ற முக்கிய அம்சங்களில் இப்பகுதி சாதனை அளவிலான வளர்ச்சியை அடைந்துள்ளது. இந்த உத்வேகத்திற்கு மேலும் வலு சேர்க்கும் வகையில், பிரதமர் நரேந்திர மோடி 2026 ஏப்ரல் 27, 28 ஆகிய தேதிகளில் சிக்கிம் மாநிலத்துக்குப் பயணம் மேற்கொண்டார். இந்தப் பயணத்தின் போது, அவர் 4,000 கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்துப் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

கிழக்கின் சொர்க்கம், மந்தாரை, மலர்களின் தோட்டம் என்றெல்லாம் அழைக்கப்படும் சிக்கிம், அதன் ஈடு இணையற்ற இயற்கை அழகு, சிறந்த சூழல், ஆன்மீக அமைதி ஆகியவற்றுடன், நாடு முழுவதிலுமிருந்து வரும் இயற்கையை நேசிக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு முக்கிய சுற்றுலா மையமாகத் திகழ்கிறது. அரசியல் சுயநலத்தால் தூண்டப்பட்ட பிரிவினைவாத சக்திகள், மொழிவெறி, பிராந்தியவாதம், சமூகப் படிநிலை, பாகுபாடு ஆகியவற்றின் மூலம் பிளவுகளை விதைக்க முயற்சிக்கும் இக்காலத்தில், 'ஒரே பாரதம், உன்னத பாரதம்' என்ற தத்துவத்தின் உதாரணமாக சிக்கிம் திகழ்கிறது. பிரதமர் நரேந்திர மோடியின் இரண்டு நாள் சிக்கிம் பயணம், மாநிலத்தின் பொன்விழா ஆண்டான அதன் 50–வது ஆண்டு நிறைவு நிகழ்வுகளுடன் இணைந்து குறிப்பிடத்தக்க சிறப்புகளைக் கொண்டதாக அமைந்தது. பிரதமரின் இந்தப் பயணம், சிக்கிம் மாநிலத்துக்கும் ஒட்டுமொத்த வடகிழக்குப் பிராந்தியத்துக்கும் விரைவான, நிலையான வளர்ச்சியில் தற்போதைய மத்திய அரசின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுவதாக இருந்தது. பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டது போல், சிக்கிமும் ஒட்டுமொத்த வடகிழக்குப் பகுதியும் நாட்டின் புவியியல் பகுதி மட்டுமல்ல. அவை இந்தியாவின் அஷ்டலட்சுமியாகத் திகழ்கின்றன. இதன் ஒருபகுதியாக, மத்திய அரசு தனது கிழக்கு நோக்கிய செயல்திட்டக் கொள்கையைச் செயல்படுத்துவதில் உறுதியாக இருக்கிறது. அதே வேளையில், வடகிழக்குப் பகுதியின் வளர்ச்சிக்காக விரைவாகச் செயல்பட வேண்டும் என்ற உறுதியான தீர்மானத்தையும் அரசு கொண்டுள்ளது. இந்தத் தீர்மானத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில், சிக்கிம் மாநிலம் உருவாக்கப்பட்டதன் 50–வது ஆண்டு நிறைவு விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். உள்கட்டமைப்பு, போக்குவரத்து இணைப்பு வசதிகள், சுகாதாரம், கல்வி, நகர்ப்புற மேம்பாடு, சுற்றுச்சூழல், சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் 30–க்கும் அதிகமான திட்டங்களைத் தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். சிக்கிம், நாட்டின் மொத்தப் புவியியல் பரப்பளவில் ஒரு சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தாலும், நாட்டின் தாவரப் பன்முகத் தன்மையில் 25 சதவீதத்திற்கும் அதிகமானவை இம்மாநிலத்தில் காணப்படுகின்றன. இந்த மாநிலத்தில் ஏறக்குறைய 500 வகையான பறவை இனங்கள் உள்ளன. சுமார் 700 வகையான வண்ணத்துப்பூச்சிகள், செழிப்பான வனப்பகுதி, அற்புதமான கஞ்சன்ஜங்கா மலைப் பகுதி ஆகியவற்றையும் சிக்கிம்

## சிக்கிம் மக்களின் வாழ்க்கை எளிதாக மாறும்

**30** தியோராலியில் உள்ள நாம்கியால் திபெத்திய நிறுவனத்தில் 30 படுக்கைகள் கொண்ட சோவா ரிக்பா மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டது.

- யாங்காங்கில் சிக்கிம் பல்கலைக்கழகத்தின் நிரந்தர வளாகம் திறக்கப்பட்டது.
- சகுங்கில் உள்ள நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சிறப்புப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டடத் திறப்பு விழா நடைபெற்றது.
- காங்டாக்கின் சோசிகாங்கில் ஹெலன் லெப்சா மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது.
- கியால்ஷிங்கின் டென்டமில் தொழில் கல்லூரி.
- கியாத்தாங்கில் மாதிரி உறைவிடப் பள்ளி.
- மாங்கன் மாவட்டத்தில் மங்ஷில்லாவில் மாதிரி கல்லூரி.

**160** தகவல் தொழில்நுட்பம் சார்ந்த கல்வி உள்கட்டமைப்புத் திட்டம் தொடங்கப்படுவதால் சிக்கிமில் உள்ள 160 பள்ளிகள் பயனடையும்

- கிச்சுடும்ரா வழியாக பிர்ஹாங்கையும் நாம்ச்சியையும் இணைக்கும் சாலையை அகலப்படுத்தி வலுப்படுத்துதல்.
- காங்டாக்கில் மின்பரிமாற்ற, விநியோகக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டம்.
- லும்சேவில் மக்கள் சேவைக்கான அலுவலகம், காங்டாக்கில் குடிமைப் பணி அலுவலர்கள் நிறுவனம்.
- லிங்டிங்கில் சிக்கிம் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தில், காவல்துறைப் பணியாளர்களுக்கான குடியிருப்புகளும் பாங்தாங்கில் சிக்கிம் ஆயுதப்படைக் காவலர்களுக்கான சி பிரிவு குடியிருப்புகளும் திறந்து வைக்கப்பட்டன.
- காங்டாக்கின் 3-வது மண்டலத்தில், ரோரோ சூ ஆற்றின் வழியாக ராணி சூ ஆற்றில் ஏற்படும் மாசுபாட்டைக் குறைக்கும் திட்டத்தின் தொடக்க விழா.
- காங்டாக்கில் உள்ள ரிட்ஜ் பிரசிங்க்ட் பகுதியின் மறுசீரமைப்புப் பணிகளின் தொடக்க விழா; சோரெங்கில் உள்ள டோடாக்கில் சூழல் சுற்றுலா, புனித யாத்திரைக்கான உள்கட்டமைப்புப் பணிகள் தொடக்கம்; கைலாஷ் மானசரோவர் யாத்திரை தொடர்பான உள்கட்டமைப்புப் பணிகள்; நாம்பிங்கில் உள்ள கிருஷ்ண பிரணமி மங்கள்தாமில் புனித யாத்திரைப் பயணிகளுக்கான விருந்தினர் இல்லம் (யாத்ரி நிவாஸ்).
- வேளாண் பதப்படுத்தல் நடவடிக்கைகளை மேம்படுத்தும் இஃப்கோ பதப்படுத்தும் தொழிற்சாலையின் தொடக்க விழா.
- பாக்யோங் மாவட்டத்தில் உள்ள ரங்போ, மைனிங்கில் உள்ளரங்க கிரிக்கெட் வசதிகள் திறப்பு விழா.



*பிரதமர் நரேந்திர மோடி சிக்கிம் மாநிலத்தைச் சேர்ந்த இளம் வீரர்களுடன் கால்பந்து விளையாடுகிறார்.*

## வலுவான அடித்தளம் அமைத்தல்

**100** நாம்ச்சியில் 100 படுக்கைகள் கொண்ட ஆயுர்வேத மருத்துவமனைக்கு அடிக்கல்

- நாம்ச்சி, காங்டாக் ஆகிய மாவட்டங்களை இணைக்கும் வகையில், சிர்வானி, கீழ் சம்டோங்க் பகுதிகளில் உள்ள டீஸ்டா ஆற்றின் மீது அமையவிருக்கும் இரண்டு அடுக்கு, இரட்டை வழி எஃகு வளைவுப் பாலங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
- சத்பவ மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
- ஆற்று மாசு குறைப்பு முயற்சிகளின் கீழ், சிங்டாம் நகரில் கழிவுநீர் வடிகால் அமைப்பின் புனரமைப்புக்கும் மறுசீரமைப்புக்கும் அடிக்கல் நாட்டப்பட்டது.
- கியால்ஷிங் மாவட்டத்தில் உள்ள சில்னானில் சூழல் புனித யாத்திரை வளாகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

கொண்டுள்ளது. இதனால்தான் அனைவரும் மீண்டும் மீண்டும் சிக்கிமுக்குச் செல்வதை விரும்புகிறார்கள். சிக்கிமின் மிகப்பெரிய பலம் அதன் சுற்றுலாப் பொருளாதாரத்தில் அடங்கியுள்ளது. ஒரு மாநிலம் சிறந்த உள்கட்டமைப்பைக் கொண்டிருக்கும்போதுதான் சுற்றுலா செழிக்கும். இந்தக் காரணத்தினாலேயே, சிக்கிமின் போக்குவரத்து இணைப்பையும் உள்கட்டமைப்பையும் மேம்படுத்துவதில் தற்போது குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளில், இப்பகுதியில் நூற்றுக்கணக்கான கிலோமீட்டர் நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமத்திற்கும் சாலைக் கட்டமைப்பை விரிவுபடுத்தும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. பாக்டோக்ராவை காங்டாக்குடன் இணைக்கும் விரைவுச்சாலை கட்டுமானமாக இருந்தாலும் செவோக்-ரங்போ ரயில் பாதையாக இருந்தாலும் இந்தத் திட்டங்கள் சிக்கிம் மாநிலத்தை நாட்டின் பிற பகுதிகளுடன் எளிதில் இணைக்கும் ஒரு முக்கிய அம்சமாகச் செயல்படுகின்றன. மாநிலத்திற்குள் புதிய தேசிய நெடுஞ்சாலைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. அரசின் இந்த முயற்சிகள், சிக்கிமுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும் என்றும், அதன் விளைவாக உள்ளூர் மக்களின் வருவாய் உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ●



# இந்தியா–நியூசிலாந்து வர்த்தக ஒப்பந்தம் வரியில்லா ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை உருவாக்குகிறது

**இந்தியாவும் நியூசிலாந்தும் நீண்டகால நட்புறவைப் பகிர்ந்து கொள்கின்றன. இரு நாடுகளும் காமன்வெல்த் பாரம்பரியம், ஜனநாயக மரபுகள், சட்ட அமைப்புகள், விளையாட்டின் மீதான பரஸ்பர ஆர்வம் ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்கின்றன. அரசியல், வர்த்தகம், பாதுகாப்பு, கல்வி, சுற்றுலா, கலாச்சாரம், விளையாட்டு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு தொடர்ந்து விரிவடைந்து வருகிறது. இந்த உறவை மேலும் வலுப்படுத்தும் விதமாக, 2026 ஏப்ரல் 27 அன்று, புது தில்லியில் இந்தியா–நியூசிலாந்து தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டன. இது வரலாற்றில் மிக விரைவாக மேற்கொள்ளப்பட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களில் ஒன்றாகும். இந்தத் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இந்திய ஏற்றுமதிகள் மீதான வரிகளை நீக்கும். சுமார் 20 பில்லியன் டாலர் முதலீட்டை ஈர்க்கும். மேலும் மாணவர்கள், திறன் வாய்ந்த நிபுணர்கள் ஆகியோருக்கான வாய்ப்புகளைக் கணிசமாக விரிவுபடுத்தும்.**

இந்தியாவின் பொருளாதாரம் தொடர்ந்து புதிய உச்சங்களை எட்டி வருகிறது. இந்தியாவின் ஏற்றுமதி தொடர்ந்து புதிய சாதனைகளைப் படைத்து வருகின்றன. 2025–26-ம் நிதியாண்டில், இந்தியாவின் பொருட்கள், சேவைகள் ஆகியவற்றின் ஏற்றுமதி, முந்தைய ஆண்டை விட 4.22 சதவீதம் அதிகரித்து, 860.09 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற சாதனை அளவை எட்டியது. உலகளாவிய சிக்கல்கள் இருந்தபோதும், பொறியியல் பொருட்கள், மின்னணு சாதனங்கள், மருந்துகள், ரசாயனங்கள், மணிக்கற்கள், ஆபரணங்கள், வேளாண் பொருட்கள் போன்றவை, ஏற்றுமதி வேகத்தை வெற்றிகரமாகத் தக்கவைத்துள்ளன. கடந்த சில ஆண்டுகளில் பல்வேறு தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் கையெழுத்தானதன் மூலம் இந்தியச் சந்தை உலக அளவில் விரைவாக விரிவாக்கம் பெற்றுள்ளது. இதுவே ஏற்றுமதி வெற்றிக்கு முதன்மைக் காரணமாக அமைந்துள்ளது. 2026 ஏப்ரல் 27 அன்று, புதுதில்லியில் உள்ள பாரத மண்டபத்தில் நியூசிலாந்துடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது. இது கடந்த சில ஆண்டுகளில் வளர்ந்த நாடுகளுடன் இந்தியா செய்துகொண்டுள்ள ஒன்பதாவது தடையற்ற வர்த்தக ஒப்பந்தமாகும்.

இந்த ஒப்பந்தம் ஒரு வலுவான பொருளாதார ஒத்துழைப்பை வளர்க்கவும் முதலீட்டைத் தூண்டவும் தயாராக உள்ளது.

> **“இந்த நவீன, சமச்சீரான ஒப்பந்தம், இரு நாடுகளின் பலங்களையும் ஒருங்கிணைத்து கூட்டு வளர்ச்சியை ஊக்குவிக்கும். இது விவசாயிகள், கைவினைஞர்கள், இளைஞர்கள், தொழில்முனைவோர், பெண்கள், குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் போன்ற அனைத்துத் தரப்பினருக்கும் புதிய வாய்ப்புகளை உருவாக்கும். விவசாயம், உற்பத்தி, தொழில்நுட்பம், கல்வி, சேவைகள் போன்ற துறைகளில் உலகளாவிய சந்தைகளுக்கான அணுகல் விரிவடையும்.”**
>
> *–நரேந்திர மோடி, பிரதமர்*

இந்தியா – நியூசிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில், மத்திய தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல், நியூசிலாந்தின் வர்த்தக, முதலீட்டுத் துறை அமைச்சர் டாட் மெக்ளே ஆகியோர் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தம் இந்திய ஏற்றுமதி மீதான வரிகளை நீக்கி, அதன் மூலம் அதிக தொழிலாளர்கள் தேவைப்படும் துறைகளை ஊக்குவிக்கும். இது குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களையும் வலுப்படுத்தும். அதே நேரத்தில், இது விவசாயம், பால்வளம் போன்ற துறைகளுக்கு முழுப் பாதுகாப்பை உறுதி செய்கிறது. இந்த ஒப்பந்தம் மாணவர்கள், திறன் வாய்ந்த தொழில் வல்லுநர்கள் ஆகியோருக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தும். இது விவசாய உற்பத்தித்திறனுக்கும் முதலீட்டு உறுதிப்பாடுகளுக்கும் ஆதரவளிக்கும். வரி அல்லாத பிற தடைகளை நீக்குவதன் மூலம், இந்தத் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் இந்தியாவின் உத்திசார் பொருளாதாரச் சூழலை மேலும் வலுப்படுத்தும். அத்துடன் இந்த ஒப்பந்தம் 2047–க்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கிய தொலைநோக்குப் பார்வை கொண்ட அணுகுமுறைக்குச் சான்றாக விளங்குகிறது. உள்நாட்டு நடைமுறைகள் நிறைவடைந்து, இரு நாடுகளும் ஒப்புதல் அளித்த பின் இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும்.

## புதிய வாய்ப்புகள் உருவாகும்

இந்தியாவுக்கும் நியூசிலாந்துக்கும் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து, இந்தியாவின் உலகளாவிய ஈடுபாடு, பகிரப்பட்ட செழிப்பு ஆகியவற்றுக்கான இது வரலாற்றுச் சிறப்புமிக்க நாள் என்று பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்ட செய்தியில், குறிப்பிட்டார். இந்தியா–நியூசிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகி இருப்பது, நமது பொருளாதார உறவுகள், பரஸ்பர நம்பிக்கை, பகிரப்பட்ட நோக்கங்கள் ஆகியவை வலுப்பெறுவதை அடையாளப்படுத்துகிறது என்றும் அவர் கூறியுள்ளார். இரு நாட்டு மக்களுக்கும், குறிப்பாக நமது பொருளாதாரங்களின் பலமாக விளங்கும் இளைஞர்களுக்கும் தமது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதாகப் பிரதமர் கூறியுள்ளார். இந்த நவீன, சமநிலையான ஒப்பந்தம், இரு நாடுகளின் தனிப்பட்ட பலங்களைப் பயன்படுத்தி கூட்டு வளர்ச்சியை ஊக்குவிக்கும். இது விவசாயிகள், கைவினைஞர்கள், இளைஞர்கள், தொழில்முனைவோர், பெண்கள், குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கும். விவசாயம், பொருள் உற்பத்தி, தொழில்நுட்பம், கல்வி, சேவைகள் போன்ற துறைகளில் உலகளாவிய சந்தைகளுக்கான அணுகல் விரிவடையும். வேளாண் உற்பத்தித்திறன், சிறப்பு மையங்களில் ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலம், நியூசிலாந்தின் நவீன விவசாய நிபுணத்துவம் இந்தியாவின் முன்னுரிமைகளுடன் ஒருங்கிணைக்கப்படும். இது உற்பத்தித்திறன், உள்கட்டமைப்பு, விவசாயிகளின் வருமானம் ஆகியவற்றில் முன்னேற்றங்களுக்கு வழிவகுக்கும். கடந்த பத்து ஆண்டுகளில், உலகளாவிய உற்பத்தியிலும் விநியோகச் சங்கிலியிலும் ஒரு முக்கிய மையமாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதில் இந்தியா தீவிரமாக செயல்பட்டு வருகிறது. இந்த ஒப்பந்தம் திறன்கள், ஆற்றல், போக்குவரத்து ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கிறது. இதன் விளைவாக, திறமையான தொழில் வல்லுநர்கள், இளைஞர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு இது சிறந்த வாய்ப்புகளை உருவாக்கும். இறுதியாக, இந்த ஒப்பந்தம் இரு நாடுகளின் பாரம்பரிய அறிவு அமைப்புச் சூழல்களான இயற்கை விளைபொருட்கள், ஆயுஷ், யோகா போன்றவற்றுக்கு உலகளாவிய அங்கீகாரத்தை அளித்து, நமது செழுமையான பாரம்பரியங்களை எதிர்கால வாய்ப்புகளுடன் இணைக்கும். இரு நாடுகளும் தங்களின் பலங்களை ஒன்றிணைத்து, வலுவான விநியோகச் சங்கிலிகளை உருவாக்கி, குறைந்த விலையிலான மற்றும் முறையில், போட்டித்தன்மை வாய்ந்த பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்ய இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும். இது வளர்ச்சிக்கு புதிய வழிகளைத் திறக்கும்.

## மேம்பட்ட வர்த்தக ஒப்பந்தம்

இந்தியாவுக்கும் நியூசிலாந்துக்கும் இடையேயான பொருட்கள், சேவைகள் ஆகியவற்றின் வர்த்தகம் 2024–ல் **2.4** அமெரிக்க டாலரை எட்டியது.

2024–25–ம் நிதியாண்டில், இரு நாடுகளுக்கும் இடையேயான இருதரப்பு சரக்கு வர்த்தகம் 1.3 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. இது முந்தைய ஆண்டை விட 49 சதவீதம் அதிகமாகும். இந்தத் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தைத் தொடர்ந்து வர்த்தகம் மேலும் அதகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



### இயற்கை வேளாண் பொருட்களின் வர்த்தகம் அதிகரிக்கும்

பரஸ்பர அங்கீகார ஒப்பந்தத்தின் மூலம் இயற்கை விளைபொருட்களின் வர்த்தகம் ஊக்கம் பெறும். ஆரம்ப கட்டத்தில், ஒரு பரஸ்பர அங்கீகார ஏற்பாடு செயல்படுத்தப்படும். இந்தப் பரஸ்பர அங்கீகார ஏற்பாடு செயல்படுத்தப்படுவதைத் தொடர்ந்து, பாசுமதி அரிசி, ஆளி விதைகள், அரபிகா செர்ரி, இஸ்பகோல், சோயாபீன் எண்ணெய்ப் பிண்ணாக்கு, இயற்கைத் தேநீர் போன்ற பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### மக்களுக்கிடையேயான உறவுகளை வலுப்படுத்துவதற்கான உறுதிப்பாடு மேலும் பலப்படுத்தப்படும்

இந்த ஒப்பந்தம் குறித்தும் கருத்துத் தெரிவித்த நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன், ஒரு தலைமுறையில் எப்போதாவது மேற்கொள்ளப்படும் அரிதான ஒப்பந்தம் இது என்றும், 140 கோடி மக்களைக் கொண்ட இந்தியச் சந்தையை, நியூசிலாந்து ஏற்றுமதியாளர்கள் பரந்த அளவில் அணுகுவதற்கு இது வழிவகுக்கும் என்றும் கூறினார்.

## இந்தியா 6 ஆண்டுகளில் 9 தடையற்ற வர்த்த ஒப்பந்தங்களை நிறைவு செய்துள்ளது





**இந்தியா– நியூசிலாந்து தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் – ஏப்ரல் 2026**
வெறும் 9 மாதங்களில் விரைவாகப் பேச்சு நடத்தப்பட்டு தடையற்ற வர்த்த ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்டது.



**இந்தியா – அமெரிக்கா இடைக்கால வர்த்தகக் கட்டமைப்பு– பிப்ரவரி 2026**
இந்தியா – அமெரிக்கா இடையே விரிவான வர்த்தக ஒப்பந்தத்தையொட்டிய நடவடிக்கை.



**இந்தியா– ஐரோப்பிய ஒன்றியம் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்– ஜனவரி 2026**
27 ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளுடன் மிகப்பெரிய வர்த்தக ஒப்பந்தம்



**இந்தியா – ஓமன் இடையே விரிவான பொருளாதாரக் கூட்டாண்மை ஒப்பந்தம் – டிசம்பர் 2025**
இந்த ஒப்பந்தம் வளைகுடா ஒத்துழைப்புக் குழும நாடுகளிடையே விரிவான வரிமுறையைக் கொண்டுள்ளது.



**இந்தியா– பிரிட்டன் இடையே விரிவான பொருளாதார வர்த்தக ஒப்பந்தம்– ஜூலை 2025**
இந்திய ஏற்றுமதியில் 99% பொருட்களுக்கு வரி இல்லாத நிலை.




**இந்தியா – ஐரோப்பா தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் – வர்த்தக, பொருளாதாரக் கூட்டாண்மை ஒப்பந்தம்– 2024 மார்ச் முதல் 2025 அக்டோபர் வரை**
100 பில்லியன் டாலர் மதிப்பில் அந்நிய நேரடி முதலீட்டைக் கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம்.



**இந்தியா– ஆஸ்திரேலியா இடையே பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம் – டிசம்பர் 2022**
100% வரி விலக்கலை அளிப்பதற்கான இந்தியாவின் முதலாவது ஒப்பந்தம்.



**இந்தியா– யுஏஇ இடையே விரிவான பொருளாதாரக் கூட்டாண்மை ஒப்பந்தம் – மே 2022**
2024– 25 – ம் நிதியாண்டில் இருதரப்பு வர்த்தகம் 100 பில்லியன் டாலரைக் கடந்தது.



**இந்தியா– மொரிஷியஸ் இடையே விரிவான பொருளாதாரக் கூட்டாண்மை ஒப்பந்தம்– 2021**

ஓர் ஆப்பிரிக்க நாட்டுடன் இந்தியாவின் முதலாவது வர்த்தக ஒப்பந்தம்.

"ஒரு தலைமுறையில் ஏற்பட்ட அரிதான ஒப்பந்தம்" என்று வர்ணித்த பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன், இது 140 கோடி மக்களைக் கொண்ட இந்தியச் சந்தையை நியூசிலாந்து ஏற்றுமதியாளர்கள் விரிவாக அணுகுவதற்கு வழிவகுக்கும் என்றார். இது வேளாண்மை போன்ற துறைகளில் சந்தை அணுகலை விரிவுபடுத்தி, ஏற்றுமதி வளர்ச்சிக்கு ஊக்கமளித்து, ஒத்துழைப்புக்கு வழிவகுக்கும். இதற்கிடையே, நியூசிலாந்து மக்கள் தொகையில் சுமார் 6 சதவீதம் பேரின் பூர்வீகம் இந்தியா என்று நியூசிலாந்து வர்த்தக, முதலீட்டுத் துறை அமைச்சர் டாட் மெக்லே குறிப்பிட்டுள்ளார். இந்திய வம்சாவளியினர் பல்வேறு துறைகளில் சிறந்த பங்களிப்பு செய்கின்றனர். நம்பத்தகுந்த கூட்டாண்மைகள் முன் எப்போதையும் விட முக்கியமான, மாறிவரும் உலகளாவிய மற்றும் பிராந்திய சூழல்களுக்கு இடையே இந்த ஒப்பந்தம் நிறைவடைந்துள்ளது. வளர்ந்துவரும் பிராந்திய ஸ்திரத்தன்மை, பொருளாதார மீட்சி, பகிரப்பட்ட வளமையில் இந்தியா முக்கிய கூட்டாளியாகத் திகழ்வதாக நியூசிலாந்து கருதுகிறது.

### இந்தியா– நியூசிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ஒன்பது மாதங்களில் இறுதி செய்யப்பட்டது.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான அதிகாரபூர்வ பேச்சுவார்த்தை 2025 மார்ச் 16–ல், பிரதமர் நரேந்திர மோடி, நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் இடையேயான இருதரப்பு சந்திப்பின்போது தொடங்கியது.

## ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள்



### 20 பில்லியன் அமெரிக்க டாலர்

வேளாண்மை, பொருள் உற்பத்தித் துறை, உள்கட்டமைப்பு மேம்பாடு, புத்தொழில் நிறுவனங்கள், புதிய கண்டுபிடிப்பு மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கு ஊக்கமளிக்க இந்தியாவில் 20 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீடு செய்ய நியூசிலாந்து உறுதியூண்டுள்ளது.

- நியூசிலாந்து இதுவரை மிக முக்கியத்துவம் வாய்ந்த தமது விரிவான சந்தை வாய்ப்பு மற்றும் சேவைகள் தொகுப்பை வழங்கியுள்ளது. இது திறன்மிக்க தொழிலாளர்கள், புத்தொழில் நிறுவனங்கள், சேவை அடிப்படையிலான தொழில்துறைக்கு மிகப்பெரிய வாய்ப்புகளை வழங்கும். இது 139 துணைத் துறைகளில் மிகவும் சாதகமான உறுதிப்பாடுகளை விரிவுபடுத்தும் வேளையில், நாட்டின் 118 சேவைத் துறைகளில் சந்தை வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.
- நியூசிலாந்துக்கான இந்தியாவின் ஏற்றுமதிகளுக்கு 100 சதவீதம் வரி இருக்காது. இது அனைத்துக் கட்டண முறைகளையும் உள்ளடக்கியதாகும். ஜவுளிகள், தோல், காலணி, பொறியியல் பொருட்கள், பதப்படுத்தப்பட்ட உணவுகள் போன்ற தொழிலாளர்கள் அதிக அளவில் இடம் பெற்றுள்ள துறைகள் சிறந்த வலுவைப் பெறும்.
- நியூசிலாந்தின் மற்ற வர்த்தகக் கூட்டாளர்களுக்கு அளிக்கப்படும் அணுகுமுறை போன்று, இந்தியப் பொருட்களும் சந்தையில் இடம் பெற்றது முதல் வரியில்லாத அணுகலைப் பெறும்; இது நியூசிலாந்து சந்தையில் அவர்கள் முழுமையாகப் போட்டித்தன்மையுடன் உள்ளதையும் அவர்களுக்குச் சமமான வாய்ப்புகள் அளிக்கப்படுவதையும் உறுதி செய்கிறது.
- இந்த ஒப்பந்தம் 2047–க்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை ஆதரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு புதிய தலைமுறை ஒப்பந்தமாகும் . வரிகள், திறன் இயக்கம், முதலீடு மற்றும் வேளாண் உற்பத்தி தொடர்பான விதிமுறைகள் மூலம் இது இளையோர், விவசாயிகள், மகளிர், கைவினைஞர்கள், குறு, சிறு தொழில்துறையினர் ஆகியோருக்கு அதிகாரம் அளிக்கிறது.
- இந்தியாவின் முக்கியத்துவம் வாய்ந்த துறைகளைப் பாதுகாக்கும் நோக்கில் இந்தியா தமது 70.03 சதவீத வரி விதிப்புகளுக்கு வரி தாராளமயமாக்கலை அளித்துள்ளது. இது இருதரப்பு வர்த்தக மதிப்பில் 95 சதவீதத்தை உள்ளடக்கிய வேளையில் 29.97 சதவீத வரிவிதிப்பு முறைகளிலிலிருந்து விலக்களித்துள்ளது.

- பாதுகாப்புக்காக விலக்களிக்கப்பட்ட பொருட்கள்: விவசாயிகள், ஊரகப் பொருளாதாரம், உள்ளூர் தொழில் நிறுவனங்களைப் பாதுகாப்பதற்காக சில பொருட்கள் விலக்களிக்கப்பட்டுள்ளன. இதில் பால் பொருட்கள், விலங்குத் தயாரிப்புகள் (ஆட்டுக்கறி நீங்கலாக) வேளாண் பொருட்கள் (வெங்காயம், கொண்டைக்கடலை, பட்டாணி, மக்காச்சோளம், பாதாம் உள்ளிட்டவை போன்ற) சர்க்கரை, செயற்கைத் தேன் மற்றும் விலங்கு/ தாவர எண்ணெய் ஆகியவை அடங்கும். ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகள், ஆபரணங்கள் மற்றும் நகைகள், செம்பு மற்றும் செம்பு அடிப்படையிலான பொருட்கள், அலுமினியம் மற்றும் அலுமினியம் அடிப்படையிலானப் பொருட்கள் மற்றும் இதரப் பொருட்கள் இப்பட்டியலில் அடங்கும்.




குறிப்பிட்ட வரிமுறைகள் உடனடியாக நீக்கப்படும்; இவற்றில் மரம், கம்பளி, ஆட்டுக்கறி, தோல், பதப்படுத்தப்படாத விலங்குத் தோல் உள்ளிட்டவை அடங்கும்.

- இதற்கிடையே, 35.6% பொருட்கள் மீதான வரிகள் 3, 5, 7 மற்றும் 10 ஆண்டு காலங்களில் படிப்படியாக நீக்கப்படும்; இவற்றில் பெட்ரோலிய எண்ணை, பார்லி பாகு, தாவர எண்ணெய் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மின்சாரம் மற்றும் எந்திர உபகரணங்கள், பெப்டோன்கள் மற்றும் பல அடங்கும்.
- நியூசிலாந்தில் படிப்புக்குப் பிந்தைய பணி விசாக்கள்: தொழில் வழிமுறைகள் மூலம் மாணவர் இயக்கம் மேம்படுத்தப்படும். எந்தவொரு எண்ணிக்கை வரைமுறையும் கிடையாது. ஸ்டெம் துறைகளில் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டதாரிகள் 3 ஆண்டுகள் வரை படிப்புக்குப் பிந்தையப் பணி உரிமைகளைப் பெறுவார்கள், அதே வேளையில் ஆராய்ச்சிப் படிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் 4 ஆண்டுகள் வரை இதே போன்ற உரிமைகளைப் பெறுவார்கள்.

### இந்தியத் தொழில் வல்லுநர்களுக்காக 5,000 சிறப்பு 'தற்காலிக வேலைவாய்ப்பு விசாக்கள்' ஒதுக்கீடு.

- ஆப்பிள், கிவிப் பழம் மற்றும் மனுகாத் தேன் உற்பத்தியை ஊக்குவிக்கவும், விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கவும், அறிவுப் பரிமாற்றத்தை மேற்கொள்ளவும் வேளாண் உற்பத்தித்திறன் கூட்டாண்மைகள் மற்றும் திறன் மேம்பாட்டு மையங்கள் .
- வேளாண் உற்பத்தித்திறன் ஒத்துழைப்பு மூலமாகவும், ஒதுக்கீடுகள் மற்றும் குறைந்தபட்ச இறக்குமதி விலைகளை உள்ளடக்கிய கட்டுப்படுத்தப்பட்ட சந்தை அணுகல் வழிமுறைகள் மூலமாகவும் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கான பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

**ஆய்வுகளின் அங்கீகாரம்:**

குறைந்த விலையில் மருந்துகளை வழங்கும் நம்பத்தகுந்த நாடாக இந்தியாவின் நிலையை வலுப்படுத்தும் வகையில், மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ சாதனைகளுக்கு வரியில்லாத மற்றும் விரைவான ஒப்புதல்கள் அளிப்பதுடன் அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், பிரிட்டன் மற்றும் கனடாவில் உள்ள ஒழுங்குமுறை அமைப்புகளால் நடத்தப்படும் ஆய்வுகளுக்கும் அங்கீகாரம் அளிக்கப்படுகிறது.



ஐந்து சுற்றுப் பேச்சுக்கள் மற்றும் பல்வேறு இடைப்பட்ட கூட்டங்களைத் தொடர்ந்து 2025 டிசம்பர் 22–ல் இரு தரப்பும் ஒப்புக்கொண்டன. இந்தியா– நியூசிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் வெறும் ஒன்பது ஆண்டுகளில் இறுதி செய்யப்பட்டதாக மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார். வளர்ச்சியடைந்த நாடுகளுடன் இந்தியா இதுவரை கையெழுத்திட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களில் விரைவாக இறுதி செய்யப்பட்டவற்றில் இதுவும் ஒன்றாகும். வளர்ச்சியடைந்த இந்தியா 2047 என்ற தொலைநோக்குப் பார்வையையொட்டி, வளர்ச்சியடைந்தப் பொருளாதார நாடுகளுடன் இந்தியாவின் வளர்ந்து வரும் உறவில் இது முக்கிய செயல்பாட்டைக் குறிக்கிறது. கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக, இந்தியா ஏழு தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை நிறைவு செய்துள்ளது. மொத்தமாக இந்தியா 38 வளர்ச்சியடைந்த பொருளாதார நாடுகளுடன் ஒன்பது தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை இறுதி செய்துள்ளது. மொத்தத்தில், இந்த ஒப்பந்தங்கள் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 60 முதல் 70 சதவீதத்தை உள்ளடக்கியதாக இருக்கும்.



# இந்தியா

## உலகப் பொருளாதாரத்தின் முக்கியத் தூண்.

**இந்தியாவும் கொரியாவும் ஆயிரம் ஆண்டுகால கலாச்சார உறவுகளைப் பகிர்கின்றன. இரு நாடுகளுக்கிடையேயான இருதரப்பு உறவுகளுக்குப் புதிய திசையை அளிக்கும் நோக்கில், கொரிய அதிபர் லீ ஜே– மியூங் ஏப்ரல் 19 முதல் 21 வரை இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். இப்பயணத்தின்போது, கப்பல் கட்டுமானம், கடல்சார் போக்குவரத்து, சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய தளங்களில் இரு நாடுகளுக்கும் இடையே ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, ஒருங்கிணைந்து முன்னேறத் தீர்மானிக்கப்பட்டது.**


இது எட்டு ஆண்டுகளுக்குப் பின் கொரிய அதிபர் ஒருவரின் இந்தியப் பயணம் என்பதுடன், அதிபர் லீ ஜே மியூங்கின் முதலாவது இந்தியப் பயணமாகும். ஜனநாயக மாண்புகள், சந்தைப் பொருளாதாரம், சட்டத்தின் ஆட்சியை மதித்தல் ஆகியவை இரு நாடுகளின் மரபணுவிலும் உள்ளதாக இப்பயணத்தின் போது பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டார். இந்தோ– பசிபிக் பிராந்தியத்திலும் பொதுவான நலன்களை இரு நாடுகளும் பகிர்ந்து கொள்கின்றன. இந்த அடித்தளங்களில், இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகள் கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக மேலும் ஆற்றல்மிக்கதாகவும், விரிவானதாகவும் மாறியுள்ளன. கொரிய அதிபரின் இப்பயணத்தின் மூலம், இந்த நம்பிக்கைக்குரிய கூட்டாண்மை தற்போது எதிர்கால கூட்டாண்மையாகப் பரிணமிக்க உள்ளது. சிப்கள் முதல் கப்பல்கள் வரை, திறன் முதல் தொழில்நுட்பம் வரை, சுற்றுச்சூழல் முதல் எரிசக்தி வரை ஒவ்வொரு துறையிலும் ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகள் உணரப்படும்.

இந்தியா, உலகின் நான்காவது மிகப் பெரிய பொருளாதார நாடு என்றும், அதன் 1.4 பில்லியன் மக்கள் உலகப் பொருளாதாரத்தின் முக்கியத் தூணாகத் திகழ்கின்றனர் என்றும் கொரிய அதிபர் லீ ஜே மியூங் குறிப்பிட்டார்.

இந்தியா – கொரியா இடையேயான இருதரப்பு

## புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்.

- துறைமுகங்கள் துறையில் ஒத்துழைப்பு.
- தொழில்துறை ஒத்துழைப்புக் குழு உருவாக்குதல்.
- எஃகு விநியோகத் தொடருக்காகத் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தகத் துறையில் ஒத்துழைப்பு.
- சிறு மற்றும் நடுத்தர வகைத் தொழில்துறையில் ஒத்துழைப்பு.
- கடல்சார் பாரம்பரியத் துறையில் ஒத்துழைப்பு.
- என்பிசிஐ சர்வதேச பேமெண்ட் நிறுவனம், கொரியா நிதித் தொலைத்தொடர்பு மற்றும் தீர்வு நிறுவனம் இடையேயான ஒப்பந்தம்.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் ஒத்துழைப்பு.
- இந்தியா, கொரியா டிஜிட்டல் கூட்டாண்மைக்கான கட்டமைப்பு.
- பருவநிலை மற்றும் சுற்றுச்சூழல் துறையில் ஒத்துழைப்பு.
- இந்தியா– தென் கொரியா இடையே 2026 – 2030 காலகட்டத்திற்கான கலாச்சாரப் பரிமாற்றம்.
- கலாச்சார மற்றும் படைப்பாக்கத் தொழில்துறையில் ஒத்துழைப்பு.
- விளையாட்டுகள் துறையில் ஒத்துழைப்பு.



## அறிவிப்புகள்...

- பொருளாதாரப் பாதுகாப்பு உரையாடல் தொடக்கம்.
- சிறப்பு வருகையாளர்கள் திட்டத்தை உருவாக்குதல்.
- பருவநிலை மாற்றம், ஆர்க்டிக், கடல்சார் ஒத்துழைப்பு உட்பட உலகளாவியத் தலைப்புகளில் இரு நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களுக்கும் இடையேயான உரையாடல் தொடக்கம்.
- இந்தோ – பசிபிக் பெருங்கடல் முன்முயற்சியில் தென் கொரியாவின் பங்களிப்பு.
- சர்வதேச சூரியக் கூட்டணியில் தென் கொரியாவின் பங்களிப்பு மற்றும் உலகப் பசுமை வளர்ச்சி நிறுவனத்தில் இந்தியா உறுப்பினராக இருத்தல்.
- இந்தியா– தென் கொரியா நட்பு ஆண்டாக 2028–29–ஐக் கடைப்பிடித்தல்.

## முக்கிய அம்சங்கள்...

- வர்த்தக ஒத்துழைப்பு வசதிக்காக தொழில்துறை ஒத்துழைப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் கொரிய நிறுவனங்கள் குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைவதற்கான வசதியை ஏற்படுத்த கொரிய தொழில்துறைப் பகுதிகள் ஏற்படுத்தப்படும்.
- இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக ஒப்பந்தம் அடுத்த ஆண்டிற்குள் மேம்படுத்தப்படும்.
- இந்தியா– கொரியா நட்புறவுத் திருவிழா 2028– ல் நடத்தப்படும்.
- மக்களுக்கு இடையேயான உறவுகளை வலுப்படுத்த கல்வி, ஆராய்ச்சி ஒத்துழைப்பு மற்றும் சுற்றுலா மேம்படுத்தப்படும்.



வர்த்தகம் தற்போது 27 பில்லியன் டாலரை எட்டியுள்ளது, இதை 2030–க்குள் 50 பில்லியன் டாலருக்கும் அதிகமாக விரிவுபடுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக, இரு நாடுகளுக்கிடையே பொருளாதார உறவுகளை ஏற்படுத்த இந்தியா–கொரியா நிதி அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது.

# கதக் நடனத்திற்குப் புதிய பரிமாணம் அளித்தவர்



**கதக்கின் பாரம்பரிய எல்லைகளுக்கு அப்பால், அதற்குப் புதிய தோற்றத்தையும் திசையையும் அளித்துத் தனது வாழ்நாளை அதற்காகவே அர்ப்பணித்தார் குமுதினி லக்கியா. அவர் கதக் கற்றுக் கொண்டது மட்டுமின்றி, கற்றும் கொடுத்தார். இதனால்தான் அவர், தற்போது கதக்கின் மறுஉருவமாக கருதப்படுகிறார். தமது கற்பனை மற்றும் புதுமையான அசைவுகள் மூலம், அவர் கதக் நடனத்திற்கு புதிய பரிணாமத்தை அளித்தார். இந்தியப் பாரம்பரிய நடனத்தின் மிகப்பெரும் ஆசான்களில் ஒருவராகக் கருதப்படும் அவர் ஒரு வளமான, நீடித்த மரபை விட்டுச் சென்றுள்ளார்...**

**பிறப்பு: மே 17, 1930 | இறப்பு: ஏப்ரல் 12, 2025.**

இந்தியாவின் பிரபல நடனக் கலைஞரும், கதக் நடனத்திற்குப் புதிய திசையையும் பரிணாமத்தையும் அளித்த தொலைநோக்குப் பார்வை கொண்டவருமான குமுதினி லக்கியா குஜராத் மாநிலம் அகமதாபாதில் 1930 மே 17 அன்று பிறந்தார். தமது குழந்தைப் பருவத்தில் இருந்தே அவருக்குக் கலைகளின் மீது இயல்பான ஆர்வம் இருந்தது. அதன் விளைவாக, ஏழு வயதில் கதக் நடனத்தில் தமது பயிற்சியைத் தொடங்கி, அத்துறையில் முன்னணிக் கலைஞராவதற்கான பாதையில் பயணித்தார். 1960–களில், கதக் நடனத்தைத் தனி நடன வகைகளுக்கு அப்பாற்பட்டு ஒரு குழு நடன வடிவமாகவும் பரிணமிக்கச் செய்த பெருமை அவருக்கு உள்ளது. மேலும், தமது நடனங்களில் சமகாலக் கதைகளை இணைப்பது போன்ற புதுமைகளை அறிமுகம் செய்து அவர் கதக் நடனத்திற்குப் புத்துயிர் அளித்தார்.

கதக் நடனத்திற்கு மேடையில் ஒரு புதிய வடிவத்தையும், தத்துவத்தையும், அழகியலையும் வழங்கிய அவர், அகமதாபாதில் 1964–ல் கதம்ப் நடனம் மற்றும் இசைப் பள்ளியை நிறுவி, அதை இந்திய நடனத்திற்கும் இசைக்கும் அர்ப்பணித்தார். இந்நிறுவனம் கதக்கின் நுட்பம், சொல்லடைவு மற்றும் நிகழ்த்தல் மேம்பாட்டில் தமது முழு கவனத்தையும் பார்வையையும் கொண்டிருந்தது. இந்நிறுவனத்தின் மூலம், அவர் எண்ணற்ற மாணவர்களுக்குப் பயிற்சியளித்து வழிகாட்டினார். புதுமையான சமகால மறுவாசிப்பு மூலம் கதக் நடனங்களுக்குப் புதிய கண்ணோட்டத்தை அளித்தார். இதன் காரணமாக, அவர் கதக் நடனக் கலையில் புதுமையான வடிவங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார். மேலும், அவர் 'உம்ரா ஜான்' என்ற இந்தி திரைப்படத்திற்கு நடனம் அமைத்தார்.

1987–ல் அவருக்கு பத்மஸ்ரீ விருதும், பின்னர் 2010–ல் பத்மபூஷன் விருதும் வழங்கி மத்திய அரசு கௌரவித்தது. 2025–ல் கலைத்துறையில் அவர் ஆற்றிய பங்களிப்புக்காக பத்ம விபூஷன் விருதினை அவரது மறைவுக்குப் பின் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வழங்கினார். அவ்விருதினை அவரது சார்பாக அவரது பேரன் பெற்றுக் கொண்டார். தமது எழுபத்தைந்து ஆண்டுகால நீண்ட நெடிய வெற்றிகரமான நடனப் பணியில், அவர் ஐம்பதுக்கும் அதிகமான நாடுகளில் நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.

அவர் தமது 94–வது வயதில் 2025 ஏப்ரல் 12 அன்று காலை அகமதாபாதில் உள்ள தமது இல்லத்தில் காலமானார். அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி, "சிறந்த கலாச்சார அடையாளமாக விளங்கிய குமுதினி லக்கியா மறைவு மிகவும் கவலை அளிக்கிறது. கதக் மற்றும் இந்தியப் பாரம்பரிய நடனங்கள் மீதான அவரது ஆர்வம் பல ஆண்டுகளாக அவரது பணியில் பிரதிபலித்தது. உண்மையான முன்னோடியாக விளங்கிய அவர் அடுத்தத் தலைமுறை நடனக் கலைஞர்களையும் உருவாக்கினார். அவரது பங்களிப்புகள் தொடர்ந்து போற்றப்படும்."

X



**PMO India** @PMOIndia

भारत को विकसित बनाने का मिशन अनवरत चल रहा है।

और जब मैं विकसित भारत की बात करता हूं... तो उसका सबसे मजबूत स्तंभ भारत की नारीशक्ति है: PM @narendramodi



**Rajnath Singh** @rajnathsingh

हमें AI का सिर्फ उपयोग ही नहीं, बल्कि उसे सही दिशा भी देनी है। सामूहिक प्रयासों और अंतरराष्ट्रीय सहयोग से ही इसकी शक्ति का सार्थक उपयोग संभव है। भारत इस दिशा में तेज़ी से आगे बढ़ रहा है। भारतीय अब केवल नए मॉडल ही नहीं बना रहे, बल्कि वैश्विक स्तर पर प्रतिस्पर्धी और कई मामलों में बेहतर मॉडल विकसित कर रहे हैं।



**Amit Shah** @AmitShah

मोदी जी के नेतृत्व में केंद्रीय कैबिनेट ने प्रधानमंत्री ग्राम सड़क योजना-III को ₹83,977 करोड़ की लागत से जारी रखने की स्वीकृति दी है। इसमें ग्रामीण कृषि बाजारों (GrAMs), स्कूलों और अस्पतालों को कनेक्टिविटी से जोड़ने को प्राथमिकता दी गई है। इससे ग्रामीण अर्थव्यवस्था को मजबूती मिलेगी, रोजगार के अवसर बढ़ेंगे और यातायात भी अधिक सुगम होगा।
#CabinetDecisions



**Nitin Gadkari** @nitin_gadkari

🇮🇳 आयुष्मान भारत संकल्पना स्वस्थ और सेहतमंद भारत की नींव है। प्रधानमंत्री श्री @narendramodi जी के नेतृत्व में 🇮🇳 देश में कार्यान्वित प्रधानमंत्री जन स्वास्थ्य योजना आर्थिक रूप से कमजोर लोगों के लिए वरदान साबित हो रही है।🩺💊💉🩸

#AyushmanBharatDiwas
#आयुष्मान_भारत_दिवस



**Dharmendra Pradhan** @dpradhanbjp

माननीय प्रधानमंत्री श्री @NarendraModi जी के मार्गदर्शन में देश आज अपनी विरासत को नए आत्मविश्वास के साथ पुनर्स्थापित कर रहा है और कारीगरों की प्रतिभा को वैश्विक पहचान दिलाने का संकल्प निरंतर सशक्त हो रहा है।

इस प्रेरक पहल के लिए आयोजकों को बहुत-बहुत बधाई, जो हमारे बुनकरों और कारीगरों को एक सशक्त मंच प्रदान करते हुए सराहनीय कार्य कर रहे हैं। ऐसे प्रयास 'विकसित भारत 2047' को नई ऊर्जा देते हैं।



**Dr Mansukh Mandaviya** @mansukhmandviya

'अंत्योदय' के मंत्र और मोदी सरकार के संकल्प से, आज कश्मीर के श्रमिकों को मिला उनका पहला ESIC अस्पताल।

📍 ओमपोरा, बडगाम

## Modi: New eway will be lifeline of UP's development

Ganga eway brings windfall to farmers

## UP'S LONGEST EXPRESSWAY TO BOOST SPEED AND CONNECTIVITY



## Modi highlights farm benefits as India, NZ sign free trade deal

Rajeev Jayaswal

NEW DELHI: India and New Zealand on Monday signed a free trade agreement that Prime Minister Narendra Modi said would raise farmers' incomes, strengthen rural economies and attract billions of dollars in investment, as both countries outlined plans for agricultural partnerships, manufacturing linkages and joint exports to global markets.

The agreement, concluded in just nine months, gives duty-free access to 100% of India's exports to New Zealand and opens the door to agricultural technology partnerships, joint ventures and lower-cost industrial inputs for Indian manufacturers.

In a written message read out at the signing ceremony in New Delhi by Union commerce minister Piyush Goyal, Modi, who was in West Bengal, said the pact would combine New Zea-...



Commerce minister Piyush Goyal with his New Zealand counterpart Todd McClay in Delhi on Monday.

## 'Working on details of special visa for Indian skilled workers'

Rezaul H Laskar

NEW DELHI: New Zealand is putting in place details of an agreement to create a special three-year visa for skilled professionals from India, targeting areas such as healthcare, ICT, engineering ...

## Modi urges citizens to actively participate in Census exercise

HT Correspondent



Narendra Modi

## Census 2027: PM assures citizens of data security, urges keen participation

Our Bureau



PM Narendra Modi

**The PM said Census is a very important campaign currently underway in the country and every Indian must be aware of it.**

NUCLEAR TECH

## On a boat ride, Modi says Ganga flows 'through the soul of Bengal'




PM Narendra Modi tries his hand at photography during a boat ride on the Hooghly river in Kolkata on Friday.

BATTLEGROUND WEST BENGAL









# சார்தாம் யாத்திரைக்கான ஐந்து தீர்மானங்கள்

अग्निष्टोमादिभिर्यज्ञैरिष्ट्वा विपुलदक्षिणैः।
न तत्फलमवाप्नोति तीर्थाभिगमनेन यत् ॥

**இதன் பொருள் என்னவென்றால்.... பெரிய யாகங்கள், நன்கொடைகள் ஆகியவற்றின் மூலம் நாம் எண்ணற்றப் புண்ணியங்களை அடைகிறோம். எனினும், புனித யாத்திரைகள் மூலம் நாம் மேலும் அதிகமானப் புண்ணியங்களை அடைகிறோம்.**

இந்தச் சார் தாம் யாத்திரை உத்தராகண்ட் மாநிலத்தின் புனிதத் தலமான தேவ்பூமியில் தொடங்கியது. பாபா கேதரின் தரிசனம் உள்ளிட்ட நான்கு தலங்களுக்குச் செல்லும் இந்தப் புனித யாத்திரை, இந்தியாவின் அழியாதக் கலாச்சார உணர்வின் கொண்டாட்டமாகத் திகழ்கிறது. இந்த யாத்திரையையொட்டி, நாட்டு மக்களுக்கு உத்வேகம் அளிக்கும் கடிதம் எழுதிய பிரதமர் நரேந்திர மோடி, "டிஜிட்டல் விரதத்தைக் கடைப்பிடியுங்கள்", "இயற்கை அழகின் உண்மையான அனுபவத்தை உணருங்கள்" என்று வலியுறுத்தினார். அவர் கீழ்க்காணும் ஐந்து தீர்மானங்களைக் கடைப்பிடிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

1. **தூய்மை முதன்மையானது:** யாத்திரைத் தலங்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் தூய்மையைக் கடைப்பிடிக்கவும். ஆறுகள் தூய்மையாக இருப்பதற்குப் பங்களிக்கவும்.
2. **இயற்கையையும் சுற்றுச்சூழலையும் உணர்தல்:** தெய்வீக இமயமலை உணர்வுடன் இருக்கவும். இமயமலையின் சமநிலையைக் காக்கும் அதே வேளையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் பங்களிக்கவும்.
3. **சேவை, ஒத்துழைப்பு மற்றும் நல்லிணக்கம்:** யாத்ரிகர்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முறையிலும் மற்றவர்களுக்கு சேவைசெய்ய வேண்டும் என்பதை நோக்கமாகக் கொள்ள வேண்டும்.
4. **'உள்ளூர் தயாரிப்புகளுக்கு ஆதரவு' என்பதை ஊக்குவித்தல்:** உங்கள் பயணத்தின் போது மொத்தச் செலவில் ஐந்து சதவீதத்தை உள்ளூர் தயாரிப்புகளை வாங்குவதற்கு அர்ப்பணிக்கவும்.
5. **ஒழுக்கம், பாதுகாப்பு, கட்டுப்பாடு ஆகியவற்றைக் கடைபிடித்தல்:** பாதுகாப்பான, எளிதான பயணத்தை உறுதிசெய்ய யாத்திரை ஒழுங்குமுறைகள் மற்றும் போக்குவரத்து வழிகாட்டு நெறிமுறைகளை உறுதியாகப் பின்பற்றவும்.


**NEW INDIA SAMACHAR FORTNIGHTLY**

**RNI NO.: DELENG/2020/78811 MAY 16-31, 2026**

RNI Registered No DELENG/2020/78811 (Publishing Date: April 30,2026 Pages: 42)

**EDITOR IN CHIEF**
**Dhirendra Ojha**
Principal Director General
Press Information Bureau, New Delhi

**PUBLISHED:**
**Kanchan Prasad**
Director General, on behalf of
Central Bureau Of Communication

**PUBLISHED FROM:**
Room No–278, Central Bureau Of Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi -110003